
# கிழக்கு கைத்தொழில் கண்காட்சி
# නැගෙනහිර කර්මාන්ත ප්‍රදර්ශනය
# East Industrial Exhibition
# 2019



**Department of Rural Industries,**
**Eastern Province**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு கைத்தொழில் கண்காட்சி
# නැගෙනහිර කර්මාන්ත ප්‍රදර්ශනය
# East Industrial Exhibition

## The Magazine of Industrial Exhibition

## 2019

Department of Rural Industries,
Eastern Province

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from Hon. Governor, Eastern Province

It is a great pleasure to place this special message on the "East Industrial Exhibition - 2019" organized by the Department of Rural Industries, Eastern Province, which is one of the exclusive industrial Exhibition held annually in Eastern Province.

It is widely accepted that the Small & Medium Industrial (SMI) sector is the backbone of nation's economy. The role of governments, over the years, especially in developing nations like Sri Lanka have changed radically because of the world itself saw rapid changes especially over the last few decades. The incumbent government has realized the importance / value of the value addition and use of higher technology to develop an Industrialization strategy for economic development.

The exhibition organized is the timely event which offers opportunity to all concerned in the fields of handloom production, handicrafts and value-added food productions to exchange their expertise and gives recognition to their products.

I would like to appreciate the effort of the Secretary, Chief Ministry, Eastern Province, Provincial Director, Department of Rural Industries and the entire team for making the Exhibition grand success with commitment.

I wish to convey my best wishes to all for the successful event.

Hon. Shan Wijayalal De Silva,
Governor,
Eastern Province.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# නැගෙනහිර පළාත් ප්‍රධාන ලේකම්තුමාගේ පණිවිඩය

නැගෙනහිර පළාත් ග්‍රාමීය සංවර්ධන දෙපාර්තමේන්තුව මගින් වාර්ෂිකව සංවිධානය කරනු ලබන කර්මාන්ත ප්‍රදර්ශනය වෙනුවෙන් මෙම සඟරාවට පණිවිඩයක් නිකුත් කිරීමට ලැබීම සතුටකි.

අනිකුත් පළාත් හා සංසන්දනය කරනු බලන විට නැගෙනහිර පළාත සෙසු පළාත් වලට වඩා විශේෂත්වයක් උසුලනු ලබන්නේ මෙහි සිංහල/දෙමළ/මුස්ලිම් යන සියලු ජනවර්ගයන් සමානව ජිවත් වන පළාතක් වන බැවිනි. මෙම විවිධත්වය නිසාම මෙහි ජිවත්වන ජනතාවගේ ආවේණික ග්‍රාමීය කර්මාන්ත බොහොමයක් මෙහි දක්නට ඇත.

ග්‍රාමීය සංවර්ධන දෙපාර්තමේන්තුව මෙම විවිධත්වය හොඳින් අවබෝධ කර ගනිමින් ග්‍රාමීය කර්මාන්ත සංවර්ධනය කිරීමටත්, එම ග්‍රාමීය නිෂ්පාදන සඳහා වෙළඳපල පහසුකම් සලසා දීමටත් නිරන්තර උත්සහ දරනු ලබන බව පැහැදිලිය.


මෙම වාර්ෂික වෙළඳ ප්‍රදර්ශනයද ඒ සඳහා වන එක් උත්සහයක් වන අතර වසරින් වසර මෙය වඩාත් සාර්ථක වී තිබේ. ග්‍රාමීය නිෂ්පාදකයින්ට අන්‍යෝන්‍ය අවබෝධය ලබා ගැනීමටත්, සිය නිෂ්පාදන තත්ත්වයන් උසස් මට්ටමකට ගෙන ඒමටත් මෙය හේතු සාදකයක් වන අතර වෙළඳපළ ඉල්ලුමට අනුව සේවා සැපයීමටත් මෙමඟින් අවස්ථාව උදා වනු ලබයි.

එවැනි පුළුල් පරමාර්ථ පෙරදැරි කර ගෙන සංවිධානය කරනු ලබන මෙම ප්‍රදර්ශනයේ කටයුතු සාර්ථක වී එමඟින් මෙම පළාතේ ග්‍රාමීය කර්මාන්ත කෙෂ්ත්‍රයේ ප්‍රවර්ධනය තුලින් ජනතාවගේ ආර්ථිකය ශක්තිමත් වේවායි පතමි.

මෙම ප්‍රදර්ශනය කටයුතු සංවිධානය කරනු ලබන සියළු පාර්ශවයන්ටත් මාගේ ස්තූතිය පුද කරමි.

ඩී.එම්.එස්.අබයගුනවර්දන,
ප්‍රධාන ලේකම්,
නැගෙනහිර පළාත.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கிழக்கு மாகாண உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அவர்களின் ஆசிச்செய்தி

எமது அமைச்சின் கீழான திணைக்களங்களில் ஒன்றான கிராமிய தொழிற்துறைத் திணைக்களமானது வருடந்தோறும் நடாத்தி வரும் "கிழக்கு கைத்தொழில் கண்காட்சி" மலர் வெளியீட்டிற்கு இவ்ஆசிச் செய்தியினை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

நவீன உலகில் நாடுகளின் அபிவிருத்தியில் கைத்தொழில் துறையானது பாரிய பங்களிப்பை வழங்கி வருவது போன்று இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் கைத்தொழில் துறையானது மிகமுக்கியமான பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

அந்த வகையில் கிழக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களமும் பாடசாலை விலகிய மாணவர்களையும், சமூகத்தில் தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொள்ள இயலாதவர்களையும், வறுமையால் பாதிக்கப்பட்டவர்களையும், தொழிற்துறையில் இணைந்து கொள்ள ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளையும் கருத்திற் கொண்டு நெசவு, தும்பு, தச்சு, தோற்பொருள், தானியங்கி இயந்திரவியல், களிமண் மற்றும் தையல் என்பவற்றிற்கு தமது பயிற்சி நிலையங்களினூடாக போதனாசிரியர்கள் மூலம் பயிற்சிகளை வழங்கி வருவதுடன், பயிற்சிகளை திருப்திகரமாக நிறைவு செய்பவர்களுக்கு அதற்கான சான்றிதழ்களையும் வழங்கி வருகின்றது. அத்துடன் பயிற்சி முடிவில் பயிற்சியாளர்களின் விருப்பத்திற்கமைய குறித்த நிலையங்களிலேயே மூலப்பொருட்களை வழங்கி துண்டுக்கூலி அடிப்படையில் உற்பத்திகளை மேற்கொள்ள வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலமாக பயிற்சி முடிவிலேயே பயிற்சியாளர்கள் சுயவருமானத்தினை ஈட்டிக்கொள்ள முடிகின்றது.

மேலும் இத்திணைக்களமானது தனது வளர்ச்சியின் ஓரங்கமாக தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக நவீன யுகத்திற்கு ஏற்ற வகையில் விற்பனை நிலையங்களினை அமைத்து அதன் மூலமாக உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பினையும் வழங்கியுள்ளது.

கிராமிய தொழிற்துறைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வாறான செயற்பாடுகளை சமூக மட்டத்தில் சகலரும் அறிந்து கொள்வதற்கும் அதனூடாக பயன் பெறுவதற்கும் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் இக்கண்காட்சி உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமேதுமில்லை.

வருடாவருடம் இக்கைத்தொழில் கண்காட்சியினை மாவட்டம் தோறும் நடாத்தி தொழிற்துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளை உருவாக்கும் திணைக்களத்தின் செயற்பாடுகள் மேலும் உயர்வடையவும், இக்கண்காட்சியானது சிறப்புற அமையவும் இறைவனை வேண்டுவதுடன், இச்செயற்பாடுகளில் அதிக சிரத்தையுடன் ஈடுபட்டுள்ள தொழிற்துறைத் திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர், உதவிப்பணிப்பாளர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**U. L. A. அஸீஸ்**
**செயலாளர்,**
**உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி,**
**கிராமிய கைத்தொழில் மற்றும் சுற்றாடல் அமைச்சு,**
**கிழக்கு மாகாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி

கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறைத் திணைக்களத்தினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகின்ற கைத்தொழில் கண்காட்சியானது இவ்வருடம் எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறுவதையிட்டும், இந்நிகழ்வையொட்டி வெளியிடப்படவிருக்கும் "கிழக்கு கைத்தொழில் கண்காட்சி" சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டும் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை விவசாயமும், மீன்பிடியும் பிரதான தொழிலாகக் காணப்படுகின்றதுடன், சுற்றுலாத் துறையினரை கவர்ந்திழுக்கும் அழகிய கடல் வளமும், தனித்துவமான நில அமைப்புக்களும், வயல் நிலங்களும், கண்டல் தாவரங்களும் மற்றும் தொன்மையான வழிபாட்டிடங்களும் சிறப்புக்குரியவை. இத்தகைய இயற்கை வளங்களிலிருந்து வினைத்திறன், ஆர்வம், நேர்த்தி, கற்பனை, பயிற்சிகளுடன் கூடியதாக, புதிய தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்தி தரமானதும், கேள்வியுடையதுமான தற்கால பாவனைக்கேற்றாற் போல அலங்கார பொருட்களாகவோ, அத்தியாவசியப் பொருட்களாகவோ மாற்றிக் கொள்வது கலைஞனின் கைவண்ணமாகும்.


தென்னை, பனை, பிரம்பு உற்பத்திகளும், வீட்டுத்தோட்டம், வியத்தகு மரத்தளபாட உற்பத்திகளும், நெசவு கைத்தொழில் பாரம்பரியமும், நூற்பின்னல் வேலைப்பாடுகளும், தையற் கைத்தொழிலும் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களும், மின்னுபகரணங்கள் திருத்துதல் போன்றவைகளும் மாவட்டக் கைவினைஞர்களின் தொழில்களாகும். இங்கு மட்பாண்ட கைத்தொழிலின் மூலப்பொருளான மண் வளமானது களிமண், சிவப்பு களிமண் எனும் இரண்டு வகையில் அமைந்துள்ளமை மட்டக்களப்பிற்கே உரித்தான தனி மிடுக்காகும். இந்த வகையில் எமது மாவட்ட உள்ளூர் உற்பத்திகளின் விற்பனையினை நவீன தொழில்நுட்பத்துடன் சந்தைப்படுத்துவதற்கென மாவட்ட செயலகத்தின் வழிகாட்டலில் பொருளாதார ஆலோசனை சேவை நிலைய (EAS) இணையத்தளம் இயங்கி வருகின்றமை கண்கூடு.

கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களத்தினரின் இக்கண்காட்சியினூடாக கைத்தொழில் உற்பத்திக்கான விளம்பரமும், புதிய சந்தை வாய்ப்புகளை அதிகரிப்பதோடு, கைத்தொழில் வளர்ச்சியடைந்து வெற்றி பெறுவதற்கும், படித்த இளம் தொழில் முயற்சியாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையில் ஆர்வமுள்ளவர்கள் விருப்பத்துடன் ஈடுபடுகின்ற தொழில் முயற்சியாகவும் அமைவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. அத்துடன் வருடாந்த கண்காட்சி, விருதுகள் வழங்கி கௌரவித்தல், பயிற்சி நெறிகள், சிறந்த வாய்ப்பளித்தல் என்பன சந்தை வாய்ப்பை அதிகரிப்பதுடன் இம்முயற்சியண்மை செயற்பாடுகளில் அரச, தனியார் மற்றும் சமூக குழுக்களை கூட்டாக ஈடுபடுத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கிழக்கு மாகாணமானது சிறந்த பெறுபேறுகளை பெறுவதற்கும் வழிசமைக்கின்றது.

இக்கைத்தொழில் முயற்சிக்கு ஊன்றுகோலாக இருக்கின்ற கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்கள பணிப்பாளர், மாவட்ட பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும், "கிழக்கு கைத்தொழில் கண்காட்சி" சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினருக்கும் எனது இதயம் கனிந்த பாராட்டுக்களையும், மேலும் கைத்தொழிற்துறையில் கிழக்கு மாகாணம் முன்னேற்றம் காண வேண்டுமெனவும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மா. உதயகுமார்,**
**அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,**
**மாவட்ட அலுவலகம் - மட்டக்களப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மட்டு மாநகர முதல்வரின் வாழ்த்துச் செய்தி

தற்கால நவீன தொழில்நுட்ப செயற்பாடுகளுக்கும், அதன் உற்பத்திகளுக்கும் ஈடுகொடுத்து கிழக்கு மாகாணத்தில் புரையோடிப்போயிருந்த கிராமிய தொழிற்துறை உற்பத்திச் செயற்பாடுகளை பல சவால்களுக்கு மத்தியிலும் பல வியூகங்களை வகுத்து அதனூடாக தரமான உற்பத்திகளை வெளிப்படுத்தி வருகின்ற கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறைத் திணைக்களமானது மாவட்ட ரீதியில் கண்காட்சியினை ஒழுங்கமைத்து செயற்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் இவ்வருடம் மட்டக்களப்பு மாவட்ட கிராமிய தொழிற்துறைத் திணைக்களமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் இக்கண்காட்சியினை சிறப்பான முறையில் ஒழுங்கமைத்து நடாத்துவதனையிட்டும், அதற்கான மலர் ஒன்றினை வெளியிடுவதனையிட்டும் மிகவும் மகிழ்வுறுகின்றேன்.

இம்மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட பல்வேறுபட்ட சூழ்நிலைகள் காரணமாக பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு கிராமங்கள் தோறும் கைத்தறி, தும்பு மற்றும் மட்பாண்ட பயிற்சி நிலையங்களை நிறுவி அவர்களுக்கு பயிற்சிகளையும் மூலப்பொருட்களையும் வழங்கி அதனூடாக அவர்களின் வாழ்வாதாரத்திற்கான வசதியினையும் ஏற்படுத்திக் கொடுப்பதானது இத்திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற ஓர் மனித நேயமிக்க சேவையாகவே நான் காண்கின்றேன்.

இந்த வகையில் மாநகர எல்லைக்குள் வாழ்கின்ற இவ்வாறான நிலையிலுள்ள இளைஞர், யுவதிகளையும் இச்செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களுக்கான எதிர்காலம் ஒன்றை உருவாக்கிக் கொடுக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட கிராமிய தொழிற்துறைத் திணைக்களமானது மட்டக்களப்பு மாநகர சபையுடன் இணைந்து மட்டக்களப்பு பொதுச்சந்தைக் கட்டிடத் தொகுதியில் ஓர் கைத்தறி பயிற்சி நிலையம் ஒன்றினை ஆரம்பிக்க உள்ளமையானது இத்துறையினை மேலும் விருத்தி செய்யவும், இதன் மூலமான உற்பத்திகளை சந்தைப்படுத்தவும் மற்றும் பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்கும் பின்னரான வாழ்வாதாரம் ஒன்றினை ஏற்படுத்திக் கொடுக்கவும் ஒரு களமாக அமையும் என நான் நம்புகின்றேன். இவ்விடயத்தில் மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்ட திட்ட முன்மொழிவுக்கு செயல் வடிவம் கொடுக்க எம்முடன் கைகோர்த்தமைக்காக இத்திணைக்களத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறாக சிறந்த முகாமைத்துவம், சிறந்த ஒழுங்கமைப்பு என்பவற்றின் ஊடாக கிராமிய ரீதியாக நல்ல பல திட்டங்களை செயற்படுத்தி வருகின்ற மட்டக்களப்பு மாவட்ட கிராமிய தொழிற்துறைத் திணைக்களம் சார்ந்த உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன், கண்காட்சி நிகழ்வும், அதற்கான மலர் வெளியீடும் சிறப்புடன் நடைபெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தியாகராஜா சரவணபவன்,
மாநகர முதல்வர்,
மாநகர சபை,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிராமிய தொழிற்துறை மாகாணப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கிராமிய தொழிற்துறை திணைக்களமும், தேசிய அருங்கலைகள் பேரவையும் இணைந்து வருடாந்தம் நடாத்துகின்ற "கிழக்கு கைத்தொழில் கண்காட்சி" என்னும் தொனிப்பொருளிலான கண்காட்சிக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதனையிட்டு அகமகிழ்வெய்துகிறேன். மேலும் இவ்வருட கைத்தொழில் கண்காட்சியானது மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடியில் அமைந்துள்ள எமது மாவட்ட அலுவலகத்தில் செப்ரெம்பர் 05, 06 மற்றும் 07 ஆம் திகதிகளில் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் கைத்தொழிற்துறையானது சிறந்த திட்டமிடப்பட்ட முறையில் வளர்ச்சியை நோக்கிய பாதையில் சென்று கொண்டிருக்கும் வேளையில் நடாத்தப்படும் இக் "கிழக்கு கைத்தொழில் கண்காட்சி" ஆனது, மாகாணத்தின் அபிவிருத்திக்கு ஒரு காத்திரமான புத்துணர்ச்சியையும் உத்வேகத்தையும் வழங்குகிறது. ஒரு நாட்டின் அபிவிருத்தியானது கிராமங்களின் அபிவிருத்தியில் தங்கியுள்ளது. அந்த வகையில் கிராமங்களின் அபிவிருத்தியில் எமது கிராமிய தொழிற்துறை திணைக்களமானது கிராமப்புற கைத்தொழில்களை வளர்த்தெடுக்கும் முகமாக கிராமப்புற மக்களை இலக்காகக் கொண்டு நெசவு, தும்பு, தச்சு, தையல், தானியங்கி இயந்திரவியல், தோல் உற்பத்தி, மட்பாண்டம் போன்ற பயிற்சி நெறிகளை கிழக்கு மாகாணம் முழுவதும் 116 உற்பத்தி நிலையங்களை அமைத்து வழங்கி பங்களிப்பு செய்கின்றமை குறிப்பிட்டுக் கூறக் கூடிய விடயமாகும். இதன் மூலமாக கிழக்கு மாகாணத்தின் வறுமை மட்டமானது கணிசமான அளவில் இழிவளவாக்கப்படுவதுடன், கிராமப்புற இளைஞர்களுக்கும், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பத்தினருக்கும் வாழ்வாதார வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதுடன், அவர்களது அன்றாட வாழ்வும் புதுப் பொலிவு பெறுகின்றது.

மேலும் பாரம்பரிய கிராமிய தொழில் முறைகளில் நவீன காலத்திற்கேற்ப புத்தாக்க முயற்சிகளையும், நவீன வடிவமைப்புக்களையும் காலத்தின் போக்கிற்கிணங்க அறிமுகப்படுத்தி வருகின்றோம். மேலும் சமூக அமைப்புக்களுக்கு தேவையான பயிற்சிகளையும், வழிகாட்டல்களையும் மற்றும் மேற்பார்வைகளையும் வழங்கி அவர்களுடைய வருமானத்தை அதிகரித்து வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்குரிய பல நடவடிக்கைகளில் திணைக்களம் முன்னின்று அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

இக் கைத்தொழில் கண்காட்சியினை சிறப்பான முறையில் நடாத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் மட்டக்களப்பு மாவட்ட உதவிப்பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் மற்றும் அவர்களுக்கு சகலவிதமான ஒத்துழைப்பை நல்கிக்கொண்டிருக்கும் ஏனைய திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்ட உதவிப்பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எம்மை வழிநடத்துகின்ற கௌரவ கிழக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர் மற்றும் முதலமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் இந்நேரத்தில் திணைக்களத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கவிதா உதயகுமார்,**
**மாகாணப் பணிப்பாளர்,**
**கிராமிய தொழிற்துறை திணைக்களம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிராமிய தொழிற்துறை திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட உதவி பணிப்பாளரின் மலர்ச் செய்தி

கிழக்கு கைத்தொழில் கண்காட்சி நிகழ்வை ஓட்டி ஐந்தாவது வருடமாக வெளியிடப்படும் கண்காட்சி மலரை இம்முறை 2019ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டம் சார்பாக தயாரித்து வெளியிடுவதிலும் கண்காட்சியை மாகாண மட்டத்தில் கல்லடியில் நடாத்துவதிலும் பெருமிதமடைகின்றோம். கடந்த வருடங்களில் நடைபெற்ற கண்காட்சிகளை விஞ்சும் வகையிலும், சிறப்புத் தன்மைகளுடனும் இவ்வருட கிழக்கு கைத்தொழில் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.


பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்து தொழில்வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர் யுவதிகள் மற்றும் தொழிலாற்றும் ஆர்வமும் தகவுமுடையவர்கள் அனைவரையும் அரவணைத்து அவர்களுக்கு தொழிற்கல்வி மற்றும் பயிற்சியை வழங்குவதையும் பயிற்சிக்காலத்தின் பின்னர் தொழிலாற்றும் வாய்ப்பை வழங்குவதையும் பிரதான நோக்கங்களாக கொண்டு கிராமிய தொழிற்துறைத் திணைக்களம் இயங்கிவருகின்றது. பயிற்சியையும், அனுபவத்தையும் பெற்றுக்கொண்ட தொழிலாளர்களுக்கு மேலதிக தொழில் வழிகாட்டல்கள், தொழில் வாய்ப்புக்கான ஆற்றுப்படுத்தல்கள், சுயதொழில் வாய்ப்பு உதவிகள், ஊக்குவிப்பு திட்டங்களை வழங்கிவைப்பதோடு அவர்களது பொருளாதார மற்றும் வாழ்வாதார உயர்வுக்கு பக்கபலமான வழிகாட்டியாகவும் எமது திணைக்களம் செயற்பட்டுவருகின்றது. எமது திணைக்களத்தின் நோக்கங்களின் வெளிப்பாடாகவும், அவற்றை அடைந்துகொள்வதற்கான வழிப்பாடாகவும் இவ்வருட கண்காட்சி அமைந்திருப்பது கண்கூடு.

இவ்வருட கண்காட்சி மலருக்கான வாழ்த்துரைகளை வழங்கிய கிழக்கு மாகாண கௌரவ ஆளுனர் அவர்களுக்கும், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அவர்களுக்கும், கிழக்கு மாகாண முதலமைச்சு செயலாளர் அவர்களுக்கும், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களுக்கும், மட்டக்களப்பு மாநகரசபையின் கௌரவ மாநகர முதல்வர் அவர்களுக்கும், எமது கிராமிய தொழிற்துறை திணைக்கள மாகாண பணிப்பாளர் அவர்களுக்கும் மலர்க்குழு சார்பிலும், மாவட்டத்தின் சார்பிலும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

கண்காட்சி மலருக்கான ஆக்கங்களை எழுதி வழங்கியவர்கள் அனைவருக்கும், மலர்வெளியீட்டு நடவடிக்கைகளில் ஆர்வமுடனும், அர்ப்பணிப்புடனும் ஈடுபட்டு குறுகிய காலத்துக்குள் இம்மலரை எமது கரங்களில் தவழவிட்ட திரு அ.ரமணதர்ஷனன் தலைமையிலான குழுவினருக்கும், மலரை சிறப்புற வடிவமைத்து அச்சிட்டு விரைவாக வழங்கிவைத்த துர்க்கா அச்சகத்தினருக்கும், மலருக்கான விளம்பர வெளியீட்டு அனுசரணைகளை வழங்கிவைத்த அனைவருக்கும் மலர்க்குழு சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**கி. இளம்குமுதன்,**
**உதவிப்பணிப்பாளர்,**
**கிராமிய தொழிற்துறை திணைக்களம்,**
**மட்டக்களப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூல்

நூல் என்றால் என்ன? உங்களுக்கு தெரியுமா? நீங்கள் நூல் என்றவுடன் தையல் தைப்பதற்கு பயன்படுத்தும் நூலைத் தான் சிந்திப்பீர்கள். ஆனால் அதுமட்டுமல்ல நூல் எமது மானத்தை காக்கும் ஒரு பொருள் நூல் ஆகும். எவ்வாறு என்று சிந்திக்கின்றீர்களா? ஆமாம். நீங்கள் அணியும் ஆடையைப்பாருங்கள். எவ்விதமான உடையாக இருந்தாலும் அது நூல் கொண்டு உருவாக்கியதே. அதுவும் பல இனங்களில் உள்ள நூல்களைக் கொண்டு உருவாக்கியதே. பல இனங்களில் உள்ள நூல்களைக் கொண்டு உடு துணிகளை உருவாக்குகின்றனர். இவ்வாறான பல விதமான நூல்கள் பல விதமான வழி முறைகளினால் பெறப்படுகின்றது. அதாவது,

- தாவரம் மூலம் பெறப்படும் நார் (நூல்),
- விலங்குகள் மூலம் பெறப்படும் நூல்,
- இரசாயன முறைப்படி பெறப்படும் நூல்

என வகைப்படுத்த முடியும். தாவரம் மூலம் பெறப்படும் நூல்களுள் பருத்தி நூல், சணல், பட்டுச்சணல், வாழை நார் என பலவகைப்படும்.

இதேபோன்று விலங்குகள் மூலம் பெறப்படுபவை பட்டு நூல், கம்பளி நூல், ரோம நூல் ஆகும். இரசாயன முறைப்படி பெறப்படும் நூல்களுள் றேயோன், விஸ்கோஸ் போன்றவைகள் அடங்கும்.

பருத்தி நூல் கொண்டு பருத்தி ஆடைகள், பட்டு நூலைக்கொண்டு பட்டாடைகள், கம்பளி நூலைக் கொண்டு கம்பளி ஆடைகள், றெயோன் நூலைக் கொண்டு றெயோன் துணிகள் மற்றும் ஆடைகள் என உற்பத்தி செய்யப்பட்டு எமது மானத்தைக் காக்கவும், எமது கௌரவம் அந்தஸ்து என்பவற்றை வெளிப்படுத்தவும் இந்நூல் உதவுகிறது என்பதனை நீங்கள் அறிவீர்களா? இனி நூல் எவ்வாறு உருவாகிறது என நோக்குவோம். ஏதாவது ஒரு பொருள் உருவாக ஒரு மூலப்பொருள் தேவை. அவ்வாறு தான் நூலும். முதலில் பருத்தி நூல் எவ்வாறு உருவாகிறது என்று நோக்குவோம். பருத்தி நூலானது பருத்தி செடியிலிருந்து வரும் காய்கள் பழுத்து வெடித்ததும் பஞ்சாக வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பஞ்சினை ஒன்று சேர்த்து அவற்றை இயந்திரத்தினுள் இட்டு துப்பரவு செய்து பின்னர் நூல் ஆக்கும் இயந்திரத்தினுள் செலுத்தி நூலின் பருமனுக்கு ஏற்றவாறு ஒவ்வொரு வகையாக எடுப்பர். அவ்வாறு எடுக்கப்படும் நூலிற்கு இலக்கமும் இடப்படும். நூலுக்கு இலக்கம் இடும் முறையானது மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. அவை சர்வதேச முறை, டிரைட் முறை, இன்டிறைட் முறை என்பன ஆகும். இம்முறைகளில் இலக்கம் இடப்பட்ட பின்னர் நெசவுத் தொழிலுக்கு ஏற்ப நூல்களானது 2/30S, 16S, 2/20S, 10S, 2/80S, 100S, 1S எனும் இலக்கங்கள் இடப்படுகின்றன.

இனி பட்டு நூல் பற்றி நோக்குவோமாயின், இந்நூல் பட்டுப்பூச்சியிலிருந்து பெறப்படுகிறது. பட்டு நூலானது சூட்டைப் பாதுகாக்கக்கூடியது. இந்நூல் கொண்டு உற்பத்தி செய்யப்படும் ஆடைகளின் விலை அதிகமாகவே காணப்படுவதோடு இவ்வாடைகளை அணிவோருக்கு மதிப்பும் உண்டு. பட்டுப்பூச்சியின் உமிழ் நீரைக் கொண்டு உருவாக்கப்படும் கூட்டை அவித்து அதில் வரும் துசும்பைக் கொண்டு நூலாக்குகின்றனர். இப்பட்டுப் பூச்சியிலும் மூவகை இனங்கள் உண்டு. அவையாவன தசாப்பட்டுப்பூச்சி, முசுக்கொட்டைப் பட்டுப்பூச்சி, எரி பட்டுப்பூச்சி என்பனவாகும். இப்பட்டுப்பூச்சியானது ஜப்பான், சீனா, இத்தாலி, ஈரான், துருக்கி போன்ற நாடுகளில் வளர்க்கப்பட்டு பட்டு நூல் உற்பத்தி செய்யப்படுகின்றது. பட்டுப்பூச்சியின் கூட்டினை எடுத்து சில இரசாயனப் பொருட்கள் இட்டு அவிக்கும் போது கிடைக்கும் துசும்புகளை இயந்திரத்தின் உதவியுடன் நூலாக்குகின்றனர். பின்னர் அவற்றினையும் பருமனுக்கு ஏற்றவாறு தரம் பிரித்து இலக்கமிட்டு 840 யார் நீளம் கொண்ட காங்சுகளாக எடுத்து அவற்றை மக்களின் பாவனைக்காக விடுகின்றனர்.

நாம் இனி கம்பளி எனும் நூலை நோக்குவோமாயின், இதுவும் மனிதனை குளிரில் இருந்து பாதுகாக்கும் ஆடைகள் செய்ய பயன்படுத்தப்படுகிறது. செம்மறி ஆட்டின் ரோமத்தினை கத்தரித்து அதனைக்கொண்டு நூல் திரிக்கப்படுகின்றது. செம்மறி ஆடு மட்டுமன்றி, ஒட்டகம், அங்கேறா ஆடு , காஸ் மீர் ஆடு, இலாமா (சிறிய வகை ஒட்டகம்) அற்பகா, விகுணா எனும் விலங்குகள் மூலமும் உரோமம் பெறப்படுகிறது. அவுஸ்ரேலியா, இந்தியா, ஆஜன்டீனா, பிரித்தானிய தீவுகள் போன்ற நாடுகளில் தான் இவ்வகையான விலங்குகள் வளர்க்கப்பட்டு ரோமம் எடுக்கப்பட்டு கம்பளி நூல் நூற்கப்படுகின்றது. உரோமம் பெறப்படும் விலங்குகளின் தன்மைக்கு ஏற்றவாறு கம்பளி நூலின் தன்மையும் வேறுபடும். அதாவது நூலின் பிரகாசம், நீண்டகால பாவனை, துசும்பின் நீளம் போன்றவையும் வேறுபடுகிறது. இதுவும் இயந்திரத்தின் உதவியுடன் நூல் சிகிச்சை செய்யப்பட்டு 560 யார் கொண்ட கட்டங்களாகவோ அல்லது கோன் வடிவில் சுற்றியோ மக்களின் பாவனைக்காக விடப்படுகிறது.

மேற்கூறப்பட்ட நூல் வகைகளை விட பட்டுச்சணல், சடைச்சணல், வாழை நார், பைனா, சீசல், கிரமி, இலவம் பஞ்சு, கற்றாளை போன்ற இயற்கை தாவரங்களைக் கொண்டும் நார்(நூல்) எடுக்கப்படுகிறது. இந்நார்கள் மூலம் பெறப்படும் நூல்களைக் கொண்டு அலங்காரப் பொருட்கள், கைப்பை, சேட்டிங் துணி, சாக்கு போன்ற பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். அதாவது தாவரங்களின் இலையில் உள்ள நார், தண்டுகளில் உள்ள நார், தண்டுகளை நீரில் ஊறவைத்து அதன் மூலம் கிடைக்கும் நார் மூலமே நூலுக்கான நார் கிடைக்கின்றது. வாழை நார் (நூல்) கொண்டு சேட்டிங் துணிசெய்ய முடியும். அத்துணியானது பார்ப்பதற்கு ஒரு மினுமினுப்பைக் கொடுக்கும். இதைவிட இலவம் பஞ்சு, கற்றாழை, தென்னந்தும்பு போன்றவற்றினையும் கொண்டு நார் (நூல்) பெறப்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

நாம் இதுவரையும் இயற்கையில் அதாவது தாவரம், விலங்குகள் மூலம் கிடைக்கப்பெறும் நூல்கள் பற்றி ஆராய்ந்தோம். இனி செயற்கை நூல் பற்றி பார்ப்போம். இயற்கை மூலம் கிடைக்கும் நூல் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் எமக்கு எதுவித தீங்கும் ஏற்படுத்தாது. ஆனால் செயற்கை நூல் மூலம் செய்யப்படும் ஆடைகள் எமது உடம்பிற்கு சிறு சிறு வியாதிகளைத் தோற்றுவிக்கவே செய்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் தற்போது இயற்கை நூல் கொண்ட உற்பத்தி பாவனையை விட செயற்கை நூல் கொண்ட உற்பத்தி பாவனையையே பெரிதும் காணக்கூடியதாக உள்ளது எனலாம். செயற்கை நூலானது பலவித இரசாயனப் பதார்த்தங்களைக் கூழாக்கி அதனை இயந்திரத்தினூடு செலுத்தி திண்ம நிலையில் பெரிய துசும்புகளாக பாவோடி மீண்டும் வேறொரு இயந்திரத்தில் பெரிய துசும்புகளைச் செலுத்தி நூல்களின் அளவுக்கு பிரித்தெடுத்து அந்நூல்களைக் கொண்டுதான் தற்போது விதம் விதமான ஆடைகள் செய்யப்படுகின்றன. தற்போது இலகுவாக அணியக்கூடியதும், விலை குறைவான ஆடைகளும் இந்நூல் கொண்டு உருவாக்கப்பட்டவையே ஆகும். நாம் தற்போது பாவிக்கும் றேயோன், விஸ்கோஸ் போன்ற துணிகளும் விஞ்ஞான முறைப்படி செய்யப்பட்ட நூல் கொண்டு உருவானவையே ஆகும். அது மட்டுமல்லாது கனிப்பொருட்களைக் கொண்டு வெள்ளி, செப்பு, பொன் போன்ற போலியான நார்கள் அல்லது நூல்கள் உருவாக்கப்பட்டு ஆடைகளுக்கு அலங்காரம் செய்ய பயன்படுகிறது.

நாம் இதுவரையும் நூல் எவ்வாறு எவற்றில் இருந்து பெறப்படுகின்றது என்பன பற்றி ஆராய்ந்தோம். எனினும் இவ்வாறு பெறப்படுகின்ற சில நூலினங்கள் நேரடியாக ஒரு உற்பத்திக்கு பயன்படுத்துவது குறைவு. ஏனெனில் மேற்கூறப்பட்ட முறையில் பெறப்படும் நூல்களின் தரம், நிறம் சற்று குறைவாகவே இருக்கும். மூலப்பொருள் மூலம் நேரடியாகக் கிடைக்கும் நூலின் நிறம் பழுப்பு வெள்ளையாக (கிறே) இருக்கும். இந்நூல் கொண்டு சில சில துணிகளைத்தான் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் எல்லா வகையான உற்பத்திகளையும் மேற்கொள்ள முடியாது. ஆகவேதான் நூலினை வெண்மையாக்கம் செய்கின்றனர். மினுக்கமாக்கல் செய்கின்றனர். இவ்வாறு செய்தன் மூலம் நூலின் தரம் பெறுமதி, பிரகாசம் என்பன அதிகரிக்கின்றது.

இனி நாம் பெறப்பட்ட நூல்கள் எவ்வாறு வெண்மையாக்கப்படுகின்றது என்பதனை பார்ப்போம். பருத்தி, பஞ்சு, பட்டுநார், கம்பளி உரோமம் போன்றவற்றிலிருந்து பெறப்படும் நாரில் அல்லது நூலில் இயற்கையாகவே அழுக்குகள், எண்ணெய்த்தன்மை என்பன சேர்ந்திருக்கும். இவற்றை சில சில இரசாயனப்பொருட்கள் கலந்த நீரில் அவித்து சில இரசாயனப்பொருட்கள் கலந்த நீரில் கழுவுவதன் மூலம் அகற்ற முடியும். பின்னர் வெண்மையாக்கத் தேவையான இரசாயனக் கலவையுடன் நூலை இட்டு அவித்து கழுவி காயவிட்டால் நூல் வெண்மை பெறும்.

வெண்மையான நூலை தேவையான கலருடன் இரசாயன பொருட்களும் கலந்த நீரில் குறிப்பிட்ட வெப்பத்துடன் அவித்து கழுவி காயவிட்டு எடுத்தலே கலர் பண்ணல் அல்லது டை பண்ணல் எனும் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. இவ்வாறு நிறமூட்டப்பட்ட நூலைக்கொண்டு தான் விதவிதமான ஆடைகள் நிறப் பொருத்தப்பாட்டுடன் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வாறு செய்யப்பட்ட நூல்களை மேலும் மெருகேற்ற மேசறைஸ் செய்து பாவிக்கின்றனர். அதாவது நூல்களுக்கு மேலும் மினுக்கமூட்ட இயந்திரமுள்ள சுவாலையின் ஊடு செலுத்தி எடுப்பதன் மூலம் நூலுக்கு மினுக்கம் ஏற்படுகிறது.

மேற்கூறப்பட்ட வகையில் நூல்கள் பாவிக்கப்பட்டாலும் அவற்றிற்கு ஒவ்வொரு பெயரிட்டு நூல்கள் சந்தையிடப்படுகின்றன. அவற்றைப் பார்ப்போம்.

1. காஸ்யாண் (Gass Yarn) - இந்நூல் நீளம் கூடிய துசும்புகளால் ஆனபடியால் அத்துசும்புகள் வெளியில் தெரியும். அவ்வாறு தெரியும் துசும்புகள் வெளியில்தெரியாதிருக்க இயந்திர தீச்சுவாலையினூடாக சடுதியில் உட்செலுத்தி எடுக்கப்பட்டு இந்நூல் பாவனைக்கு பயன்படுத்தப்படுகிறது. இந்நூலில் தரம், சுத்தம் என்பன உயர்ந்ததாக இருக்கும்.

2. காட்டன் யாண் - இந்நூல் 1.1′ தொடக்கம் 1.8″ வரையான துசும்புகளைக் கொண்டு நூல் நூற்கப்படுவதால் நடுத்தர துணிவகைகளை உற்பத்தி செய்யவே பயன்படுத்தமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 கோம்ப யாண் - இது அமெரிக்காவில் செய்யப்படுகின்றது. உறுதியான நூல். இந்நூல் கொண்டு செய்யப்படும் ஆடைகளை கழுவும்போது பட்டுப்போன்ற தன்மையைப் பெறும்.

4 சோய்ங் யாண் - இதை தையலுக்கு பயன்படுத்த முடியும். இது பருத்திப்பஞ்சினிலே பெறப்படுகின்றது. இந்நூலானது நெசவு செய்யும் நூலிலும் பார்க்க வெண்மை, மினுமினுப்பு மற்றும் பலம் கூடியது.

5. வோஸ் யாண் - இந்நூல் கொண்டு வெனியன், கால் உறைகள் என்பன தயாரிக்கப்படுகிறது. மென்மையானது மற்றும் முறுக்கு குறைந்தது.

6. சகோக்கி யாண் - இது கம்பளி மற்றும் பருத்தி சேர்த்து முறுக்கி வரும் நூலாகும்.

7. கோக்குறு யாண் - வித்தியாசமான இரு இலக்க நூல்களை இணைத்து முறுக்கும் போது வரும் நூலினை இப்பெயர் கொண்டு அழைப்பர்.

8. பன்சி யாண்- இந்நூல் அழகானது. சாதாரண செலவில் அலங்காரமான துணிகளை செய்ய உதவும்.


9. சுப்பர் காஸ் யாண் - காஸ் யாண் போன்ற முறையில் செய்யப்படுகின்றது. ஆனால் காஸ் யாணை விட சிறந்த நூலாகும்.

10. வாட்டர் ருவிஸ்ந் யாண் - நூல் நூற்பதற்கு முன்பு பஞ்சினுள் நீரை ஊற்றி முறுக்கி நூல் நூற்கப்படுவதால் இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது.

மேற்கூறியவற்றைப் பார்க்கும்போது மனித நாகரீக வளர்ச்சிக்கு முதற்படியே நூலாகும். ஏனெனில் நூல் கொண்டு ஆடை நெய்திருக்காவிட்டால் அவனுடைய மானத்தை மறைக்க முடிந்திருக்குமா? அவன் தொடர்ந்து கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தியிருக்க முடியுமா? காந்தியடிகள் பருத்தி நூல் கொண்ட கதர் துணிகளை நெய்து ஆடையணிந்து புதிய புரட்சி செய்தார். நவீன யுகத்தில் பலவித நவீன நூல்களைக் கொண்டு மனிதன் ஆடைகள் செய்து அவனது வளர்ச்சியைக் காட்டிச் செல்கிறான் என்றால் அது மிகையாகாது.


***

**அ.தனஞ்சயன்**
**நெசவுப் போதனாசிரியர்**
**கிரான்குளம் நெசவு நிலையம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிறப்பொருத்தப்பாடு அல்லது நிறத்தெரிவு

ஆதி காலத்தில் மனிதன் கல்லை உரசியே தீயைப் பெற்றான். தற்போது நெருப்பைப் பெற புதிய வழிகள் பல உண்டு. அது போலவேதான் நிறமும். காடுகளில் இயற்கையாகக் கிடைக்கும் மரக்கிளை, இலை, பூ, காய், வேர்கள் என்பவற்றை கசக்கிப் பிழிந்து அதன் கரை சலைக் கொண்டே நிறத்தைப் பெற்றான். அதற்குச் சான்றாக அஜந்தா, சிகிரியா ஓவியங்களைக் கூறலாம். ஒரு ஓவியத்திற்கு எந்த நிறத்தை பூசப் போகின்றோம் என்பது வர்ணத் தெரிவு என்றும் அந்நிறத்திற்கு மேலும் அழகு சேர்க்க வேறு எந்தெந்த வர்ணத்தை பின்பற்றுகின்றோமோ அது வர்ணப் பொருத்தப்பாடு (Colour Matching) என்றும் கூறப்படுகின்றது. இம்முறையானது தொன்று தொட்டு இருந்திருப்பதனை அக்கால ஓவியங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.


ஆதிகாலத்திலேயே இவ்வாறான நுணுக்கங்களை இயற்கை மூலம் பெறும் வர்ணங்களைக் கொண்டு செய்துள்ளனர் என்றால், ஏன் நாம் இதை இந்த நவீன காலத்தில் மேற்கொள்ளமுடியாது? நம்மாலும் முடியும். அதற்கு முதலில் நாம் நிறம் பற்றியும் நிறத்தெரிவு பற்றியும் அறிய வேண்டும். எந்த வர்ணத்துடன் எந்த வர்ணம் ஒத்துப்போகும், எந்த வர்ணம் ஒத்துப்போகாது போன்றவை பற்றி அறிந்திருக்க வேண்டும்.

எந்தவொரு கைத்தொழில் கலையை எடுத்துக்கொண்டாலும் அதற்கு முதற்காரணம் வர்ணமே ஆகும். நாம் ஒரு சிலையை செய்து நிறமூட்ட வேண்டுமாயின் அச்சிலையின் வெளிப்பாடு நிறமூட்டலிலும் அதற்கு பொருத்தமான வேறு வர்ணங்களின் நிறமூட்டலிலேயும் தான் அமையும். இதே போலத்தான் எந்தக் கைத்தொழிலை ஆராய்ந்து பார்த்தாலும் நிறமும், நிறப்பொருத்தப்பாடும் இல்லாது இருக்க முடியாது. இதைப் போலவேதான் எமது நெசவு உற்பத்திப்பொருட்களும் இருக்கின்றன.


"ஆள்பாதி ஆடை பாதி" என்கிறார்கள். ஆனால் தற்காலத்தில் "ஆடைபாதி வர்ணம் பாதி" என்றாகிவிட்டது. நெசவுத்தொழிலில் உற்பத்தியினை மேற்கொள்ளும்போது கண்ணைக் கவரக்கூடிய, அனைவரும் விரும்பக்கூடிய நிறப் பொருத்தப்பாட்டுடன் ஆடைகளைச் செய்யவேண்டும். சிலருக்கு இவற்றில் தேர்ச்சி உண்டு. சிலர் இதுபற்றி அறியாமலேயே உள்ளனர். ஆகவே நாம் இதில் தேர்ச்சி பெற்றிருப்பது மிகவும் அவசியம். தேர்ச்சி பெற்றிருந்தால் தான் நமது உற்பத்தியினை அதிகரிக்க முடியும். சிறந்த சந்தை வாய்ப்பை பெறமுடியும் என்பதனை நாம் அறிய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறம் என்பதனை நாம் பலவகையாக வகைப்படுத்தியே கையாள வேண்டும். அதாவது, மூலவர்ணம் (அடிப்படை வர்ணம்) இரண்டாந்தர வர்ணம் (துணை வர்ணம்), மூன்றாந்தர வர்ணம் (இடை வர்ணம்) என வகைப்படுத்திப் பார்க்கலாம். மூல வர்ணம் எனும் போது மஞ்சள், நீலம், சிகப்பு என்பனவாகும். இதனை கீழ்க்காட்டப்படும் நிறச்சக்கரம் மூலம் அறிய முடியும்.





இனி இரண்டாம் வர்ணம் பற்றி பார்ப்போம். மூல வர்ணங்கள் இரண்டைச் சேர்க்கும்போது இரண்டாம் வர்ணம் அல்லது துணை வர்ணத்தை பெற முடியும். இதனை கீழ்வரும் நிறச்சக்கரத்தைப் பார்க்கும்போது விளங்கிக்கொள்ள முடியும். அதாவது மஞ்சளுடன் நீலத்தைச் சேர்க்கும் போது பச்சை எனும் நிறம் உண்டாகும். இதைப் போலவே மற்றைய நிறங்களைப் பார்க்க முடியும்.




- மஞ்சள் + பச்சை = மஞ்சள் பச்சை
- நீலம் + பச்சை = நீலப்பச்சை
- நீலம் + ஊதா = நீல ஊதா
- சிவப்பு + ஊதா = செவ்வூதா
- சிவப்பு + செம்மஞ்சள் = சிவப்பு செம்மஞ்சள்
- மஞ்சள் + செம்மஞ்சள் = மஞ்சள் செம்மஞ்சள்

இவ்வாறாக நிறங்களைப் பெற்றாலும் அதிலும் பலவகைத்தன்மைகள் நிறங்களுக்கு உண்டு. அத்தன்மைகளுக்கு ஏற்ப சூட்டு வர்ணம், குளிர் வர்ணம் என்றும் உண்டு. கீழ்குறிப்பிடப்படும் நிறச்சக்கரத்தைப் பார்த்தால் நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




இந்நிறச்சக்கரத்தைப் பாருங்கள் இதில் உள்ள வர்ணங்களை எடுத்துக் கொண்டால் சூட்டு வர்ணம் (பகட்டு வர்ணம்) பயன்படுத்தி சில சில ஆடைகளைச் செய்ய முடியாது. அதாவது ஒரு திரைச்சீலை செய்ய வேண்டுமாயின் சிவப்பு நிறத்தில் ஒரு பாவை தயாரித்து பொருளை உற்பத்தி செய்யக் கூடாது. காரணம் திரைச்சீலையானது கதவு, ஜன்னல்களுக்கு பாவிப்பதனால் குளிர்ச்சி நிறங்கொண்டதாக இருக்க வேண்டும். ஆகவேதான் குளிர்ச்சி பொருந்திய நிறங்களான ஊதா, பச்சை போன்ற நிறங்களை பயன்படுத்த வேண்டும். ஆகவே தான் மேற்கூறப்பட்ட நிறங்களின் தன்மையினைக் கொண்டு ஒரு நெசவு செய்யும் தொழிலாளி பாவு ஒன்றைத் தயாரிக்கும் போது என்ன பொருளை உற்பத்தி செய்கின்றோம், எந்த இடத்துப்பாவனைக்காக என்ற விடயங்களை கருத்தில் கொண்டு ஒரு உற்பத்தி பொருளின் நிறத்தை தெரிவு செய்ய வேண்டும்.


மேலும் பார்ப்போமாயின், நிறங்களில் friendly colour (நண்பர்களான நிறம்) எனவும் உள்ளது. இதைப்பற்றிப் பார்ப்போம். நிறச்சக்கரத்தைப் பார்த்தீர்களானால் மஞ்சள் எனும் நிறத்தை எடுத்துக்கொண்டால் அதற்கு வலப்பக்கம், இடப்பக்கமாக உள்ள இரு நிறங்களும் நண்பர்களாக கருதப்படுகின்றது. இதற்கு கீழ்வரும் நிற அட்டவணையைப் பாருங்கள்.

- மஞ்சள் - செம்மஞ்சள், பச்சை
- பச்சை - மஞ்சள்,நீலம்
- நீலம் - பச்சை,ஊதா
- ஊதா - நீலம், சிவப்பு
- சிவப்பு - ஊதா, செம்மஞ்சள்
- செம்மஞ்சள் - மஞ்சள், சிவப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கருத்தில் கொண்டு குறித்த வர்ண நூலில் ஒரு பாவினை தயாரித்து அதற்கு ஊடையாக குறித்த வர்ண நூலொன்றை தெரிவு செய்ய முடியும். அதாவது மஞ்சள் நிறத்தில் பாவு தயாரிப்பது நிறத் தெரிவு எனில் ஊடையாக செம்மஞ்சள் அல்லது பச்சையை இடுவது நிறப் பொருத்தப்பாடாகும்.

அடுத்து **எதிர்வர்ணம்** எனவும் உண்டு . நிறச்சக்கரத்தை பார்ப்போம்.




இங்கு மஞ்சள் வர்ணத்திற்கு எதிர் வர்ணம் ஊதா நிறமுண்டு. இதில் மஞ்சள் நிறத்தினால் ஒரு சேலையை செய்ய பாவு தயாரிக்க நினைத்தால் அது நிறத் தெரிவு எனக்கொள்ளலாம். அதற்கு ஊடையாக மஞ்சள் நிறத்திற்கு அருகில் உள்ள ஏதாவது ஒரு நிறத்தை தெரிவு செய்து உற்பத்தியினை மேற்கொள்ளலாம். உற்பத்தியை மேலும் அழகுபடுத்த மஞ்சள் நிறத்திற்கு எதிர் வர்ணம் ஊதா கொண்டு பூப்போட்டால் அச்சாறி மேலும் அழகு பெறும். இதுவே நிறப் பொருத்தப்பாடு ஆகும்.

சகோதர வர்ணம் (Family colour) என்றும் உண்டு . இம்முறையிலும் நிறத் தெரிவு நிறப் பொருத்தப்பாட்டினை ஏற்படுத்தி உற்பத்தியினை மேற்கொள்ள முடியும். இதற்கும் கீழ்வரும் அட்டவணையைக் கொண்டு ஆராய்வோம்.

- ஊதா - பச்சை, செம்மஞ்சள்
- நீலம் - மஞ்சள், சிவப்பு
- சிவப்பு - மஞ்சள், நீலம்
- பச்சை - ஊதா, செம்மஞ்சள்
- செம்மஞ்சள் - பச்சை, ஊதா
- மஞ்சள் - நீலம், சிவப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதர வர்ணம் ஒன்றில் பாவு தயாரித்தால் அடுத்த வர்ணத்தைக் கொண்டும் ஊடையை இடலாம். நீலத்தில் பாவு தயாரித்தால் அதன் சகோதர வர்ணங்களான மஞ்சள், சிவப்பு வர்ணங்கள் கொண்டு ஊடையை இடலாம். அல்லது சகோதர வர்ணத்தின் நடுவில் உள்ள நிறம் கொண்டு பாவு தயாரித்தால் அதன் பக்கத்து நிறங்களை ஊடையாக இடுவதால் ஆடைகள் நல்ல மதிப்பைப் பெறும். எனவே ஒரு நிறத்தை தெரிவு செய்து அதற்கு பொருத்தமான கலரை ஊடையாகத் தெரிவு செய்து நிறப் பொருத்தப்பாட்டுடன் உற்பத்தியினை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும் போதுதான் உற்பத்தியின் அழகு மேலும் பிரகாசிக்கும்.

மேலும் நோக்குவோமாயின் வர்ணச் சக்கர தோற்றப்பாட்டிற்கு அமைய அடிப்படை வர்ணம் ஒன்றானது அதன் அருகாமையிலுள்ள துணை வர்ணங்களுடன் கலந்த நிறச் சேர்க்கையுடன் சேரும்போது நிறப் பொருத்தப்பாட்டினை வெளிப்படுத்தும். கடும் நீல வர்ணமானது பல்வேறு பச்சைகளுடனும் ஊதாக்களுடனும் சேர்கையில் சிறந்ததொரு நிறச்சேர்க்கையினைக் காட்டும்.

வர்ணச்சக்கரத்தில் உள்ளடக்கப்படாத வெள்ளை, கறுப்பு, கபில நிறத்துடன் சாம்பல் ஆகிய வர்ணங்கள் நடு நிலை வர்ணங்களாகும். இவை நிறத்தை உருவாக்குவதற்கு உபயோகிக்கப்படுகின்றது.

கறுப்பு, வெள்ளை நிறமானது நிறச்சக்கரத்தில் இருந்து புறம்பானது. இதைத் தனியாகப் பாவித்து அலங்காரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். கறுப்பு நிறமானது நிறத்தின் கடும் தன்மையைக் காட்டக்கூடியது. வெள்ளை நிறமானது நிறத்தின் தன்மையினை மெல்லியதாக்கிக் காட்டக்கூடியது. இவ்விரண்டு நிறங்களையும் பொருத்தமான அளவில் சேர்த்துக் கொண்டால் வடிவமைப்பு பொருத்தமானதாக இருக்கும்.

வர்ணங்கள் மூன்று இயல்புகளைக் கொண்டுள்ளது.

- வர்ணச் சாயல்
- பெறுமானம்
- செறிவு

**வர்ணச் சாயம்** : எல்லா வர்ணங்களும் சிறப்பான ஒவ்வொரு பெயர்களினால் இனங்காணப்படும்.

**(உதாரணம்)**
மயில் நீலம்
சாணிப் பச்சை

**பெறுமானம்** : வர்ணத்தின் பெறுமானம் என்பது இளம்/கடும் தன்மையாகும். ஏதாவது ஒரு வர்ணத்திற்கு வெள்ளையை சேர்ப்பதன் மூலம் இள நிறத்தையும் கறுப்பை சேர்ப்பதன் மூலம் கடும் நிறத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

**செறிவு** : நிறச்செறிவு என்பது வர்ணத்தின் பிரகாசமான அல்லது இருண்ட தன்மையைக் குறிப்பதாகும். ஒரு வர்ணத்தின் பிரகாசத்தை குறைப்பதற்கு வர்ணச்சக்கரத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு வர்ணத்திற்கு எதிர் வர்ணத்தை சேர்த்தல் வேண்டும்.
உதாரணம் - சிவப்பு வர்ணத்திற்கு கறுப்பு வர்ணம் சேர்த்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணச் சக்கரத்திலுள்ள வர்ணங்களின் பொருத்தப்பாட்டிற்கு அமைய பயன்படுத்திக் கொள்வதற்காக வர்ண இசைவுகள் உருவாக்கப்படுகிறது.

- தனி நிற இசைவு
- இணைந்த நிற இசைவு
- **தனி நிற இசைவு** : ஒரு வர்ணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பல்வேறு பெறுமானங்களின் பொருத்தப்பாடு தனி நிற இசைவு எனப்படும்.
- **இணைந்த நிற இசைவு** : மூல வர்ணம் ஒன்றுடன் அதன் இரு பக்கங்களிலுமுள்ள இரண்டு/மூன்று நிறங்கள் சேர்ப்பதன் மூலம் இணைந்த நிற இசைவை உருவாக்கலாம்.

  **உதாரணம்** : மஞ்சள், செம்மஞ்சள், சிவப்புச் செம்மஞ்சள், நீலம், நீலப் பச்சை, நீல ஊதா, ஊதா

இவ்வாறான வர்ணங்களை தெரிவு செய்து நிறச் சேர்க்கைகளைச் செய்வதன் மூலம் ஒருவரது ஆடை அவரது ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

எனவே நாம் நமது கைத்தறி நெசவுத்தொழிலில் நிறச் சக்கரங்களின் எடுத்துக்காட்டலின் பிரகாரம் பாவினைத் தயாரித்து அதற்கு ஏற்ற நிறங்களின் பொருத்தப்பாட்டுடன் ஊடையினை, பூவேலைகளை மேற்கொள்ளல் நிறத்தெரிவு, நிறப்பொருத்தப்பாடாகும். இவ்வகையின் அடிப்படையிலேயே உற்பத்தியினை ஒரு நெசவுத் தொழிலாளி மேற்கொள்ளவேண்டும். அவ்வகையில் உற்பத்தியினை மேற்கொண்டால் மாத்திரமே அப்பொருட்களுக்கான கேள்வி அதிகமாக இருக்கும். இல்லையேல் கேள்வி இருக்கமாட்டாது. ஒரு பொருளை பொருத்தமான இடத்திற்கு, பொருத்தமான நிறத்தெரிவுடன், பொருத்தமான நிறப்பொருத்தப்பாட்டுடன் பொருத்தமான வடிவமைப்புடன் உற்பத்தி செய்வதே பொருத்தமானதாகும்.


***

**திருமதி. அ.தனஞ்சயன், நெசவு போதனாசிரியர்**
**கிரான்குளம் நெசவு நிலையம்**

M.M.**ஜுனைதா, பயிற்சி பயிற்றுவிப்பாளர்**
காத்தான்குடி நெசவு நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தும்புக் கைத்தொழிலின் ஆரம்ப காலம் தொடக்கம் நவீன காலம் வரை

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றும் பொருளாதார செயற்பாட்டிற்கு தென்னம் தும்பு உற்பத்தியாளர்களின் பங்களிப்பும் உயரிய நிலையில் உள்ளது என்றால் மிகையாகாது. நாட்டின் தேசிய பொருளாதார கொள்கைகளுள் உள்ளூர் உற்பத்திக்கு வழங்கப்பட்டுள்ள பாகத்தினுள் தென்னை சார் உற்பத்திகளின் பங்கு முதன்மையானது.

தும்பின் ஆரம்ப கட்டத்தை எடுத்து நோக்குவோமாயின், தும்பானது தென்னை மரத்திலுள்ள தேங்காய் மட்டையிலிருந்து பெறப்படுகின்றது. தேங்காய் மட்டையிலிருந்து பெறும் நாரையே தும்பு என்கின்றோம். தென்னம் தும்பைப் பயன்படுத்தி செய்யும் வேலை தும்பு வேலை என்று அழைக்கப்படும்.

தும்பு இரு விதமாக பெறப்படும். கையால் மட்டையை அடித்துப் பெறுவதும், இயந்திர உதவி கொண்டு தும்பைப் பிரித்து எடுப்பதும் இம்முறைகளாகும். கையால் மட்டையை அடித்துப் பெறும் தும்பு கைத்தும்பு எனவும் இயந்திரத்தால் பெறப்படும் தும்பு ஆலைத்தும்பு எனவும் அழைக்கப்படும். ஆலைத்தும்பு மூன்று வகைப்படும். அவையாவன தடித்த தும்பு, மெத்தைத் தும்பு, தடித்த தும்பு வகையையோ மெத்தை தும்பு வகையையோ சேராத தும்பு கலப்பினத் தும்பு என்று அழைக்கப்படும்.

**தும்பு பெறும் முறையினை பின்வருமாறு விளக்கப் படத்துடன் நோக்குவோம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தும்புத் தொழிலும் அதன் வரலாறும் பற்றி எடுத்துக் கொண்டால் தெங்கு எக்காலத்தில் யாரால் கொண்டு வரப்பட்டது என்பதை நிச்சயித்துக் கூறுவது அறிய முடியாத பழமையாக உள்ளது. இலங்கையைக் குறிக்கும் ஈழம் எனும் தமிழ்ச் சொல் தெங்கு என்பதிலிருந்து தோன்றியது என்பர். இன்றும் தென்னிந்தியாவில் வாழும் ஈழவர் எனும் சாதியினர் தெங்கு தொழிலோடு தொடர்புபட்டவர்களாகவே உள்ளனர். பண்டைய லெமூரியா கண்டத்தில் தென்னை மரங்கள் நிறைந்து காணப்பட்டதாகவும் அதன் ஒரு பகுதி ஏழ்தெங்கம் எனும் நாடாக அழைக்கப்பட்டதாகவும் வரலாற்று, இலக்கிய ஆதாரங்கள் உண்டு.

தும்புத் தொழில் செய்யும் உபகரணங்களையும் அதன் வகைகளையும் எடுத்து நோக்கினால், தும்பை கைத்தும்பு பெறும் முறை மூலமும், ஆலைத்தும்பு பெறும் முறை மூலமும் பெற்றுக் கொள்கின்றனர். இத்தும்பையும், பின்னல் வேலைகளில் பயன்படுத்தப்படும் நார் வகைகளையும் கொண்டு தும்பு, கயிறு முதலியவைகளால் ஆக்கப்படக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்கின்றனர். இயந்திர முறை கயிறு திரித்தல் வேலையின் தரத்தை நிர்ணயம் செய்வதற்காக புரி, முறுக்கு சரியாக இருக்கின்றதா என பரிசீலிக்கப்படுகின்றது. மேலும் இயந்திரத்தால் திரிக்கப்படும் கயிற்றை தரம் பிரிக்கும் முறை, பொதி கட்டுதல், நிறங்களைத் தெரிதல், நிறம் பூசுதல், கயிற்றாலான உற்பத்திகளை மேற்கொள்ளுதல் என பல்வேறு செயற்பாடுகள் தும்புத் தொழிலில் உண்டு. மக்களைக் கவர்ந்து சந்தைக் கேள்வியை ஏற்படுத்துவதற்காகவும் தும்புப் பொருட்களை அழகுபடுத்துவதற்காகவும் வர்ணம் தீட்டப்படுகின்றது. கயிறு, தும்பு முதலியவற்றை சாயம் தீட்டும் விதம் எப்படி எனவும் அறிந்து கொண்டு தும்புத் தொழிலில் ஈடுபடுவதன் மூலம் கூடிய வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

தும்பைப் பெறுவதற்கு உகந்த தேங்காய் மட்டைகளை தெரிந்து எடுத்தல், மட்டைகளை ஊற வைக்க தகுந்த இடத்தை அடையாளம் காணுதல், தும்பை ஊற வைக்க பொருத்தமான நீர்நிலையை அறிதல், ஊறவிடும் காலத்தை தீர்மானித்தல், மட்டையிலிருந்து தும்பை வேறாக்கல், நல்ல தும்பைப் பெறுதல் என்பவை அனுபவம் மூலம் பெற்றுக் கொள்ளப்படுவது ஆயினும் தும்பு வேலை என்னும் பயிற்சி ஊடாகவும் பெற்றுக் கொள்கின்றனர்.

தும்புக் கயிற்றைக் கொண்டு மிதிபாய், தும்புப் பொருட்கள் மற்றும் கயிற்றுப் பாய்களை வகை வகையாக பின்னிச் செய்கின்றனர். மேலும் இயந்திரத்தால் கயிறு திரித்தல், தேடா கயிறாக்கல், கயிற்றுப் பாய் பின்னுதல் என தும்பு வேலை நீண்டு கொண்டு செல்கின்றது. பலவிதப் பொருட்களை ஆக்குவதற்கு கயிற்றைத் தெரிந்து எடுத்து பயன்படுத்துவார்கள். துடைப்பம் கட்டுதல், தூரிகை செய்தல், வடக் கயிறு திரித்தல், பலகை மீது திரிபாய் செய்தல், அழகான கரையும் சித்திர வேலைப்பாடுள்ள நிலவிரிப்பு பின்னுதல், கயிற்றுப் பாய் பின்னுதல், பல வகைத் தும்பு சித்திர உருவங்கள் செய்தல் என பல உற்பத்திகளை தும்பு மூலம் உருவாக்கிக் கொள்ள முடியும். தும்பு இழைக்கும் இயந்திரம், மிதிபாய் சட்டம் அல்லது பலகை எளிதான பின்னலும் அதன் வகைகளும், வலைப் பின்னலும் அதன் வகைகளும், தும்பு வேறாக்கும் இயந்திரம், புரி திரிக்கும் இயந்திரம், கயிறு திரிக்கும் இயந்திரம், தேடா இயந்திரம், தும்பு பாயிழைக்கும் தறி, தும்புத்தடி இறுக்கும் பொறி, முடிச்சு கழற்றுதலும் அதன் வகைகளும் போன்ற பல்வேறு இயந்திரங்களும் பொறிமுறை நுட்பங்களும் தும்பு உற்பத்தி வேலைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

அடுத்த படியாக தும்புத் தொழில் ஈடுபடுவோரை தேங்காய் மட்டைச் சொந்தக்காரர், தேங்காய் மட்டை அடிப்போர், தும்பு பிரிப்போர், தும்புப் பொருட்களை சந்தைப்படுத்துவோர், கயிறு திரிப்போர், தும்புத் தொழிலுக்காக கயிறுகளை விலைக்கு வாங்குவோர், தும்புப் பொருட்களைச் செய்வோர் என பல விதமாக வேறுபடுத்தலாம். இவ்வாறு தும்புத் தொழிலுடன் தொடர்புபடுபவர்களுக்கு பொருத்தமான பயிற்சிகளையும், வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் வழங்குவதனூடாக தும்பு உற்பத்தி துறையை மேம்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெங்கு முக்கோண வலையத்தினை எடுத்து நோக்கினால், குருநாகல், புத்தளம், கொழும்பு மாவட்டங்கள் நாட்டின் மொத்த தும்பு உற்பத்தியின் 80 சதவீதம் பிடித்துள்ளன. தெங்கு முக்கோண வலயத்தில் 200 மின் இயந்திர தும்பு ஆலைகள் உள்ளதுடன் 45 தும்பு ஆலைகள் வெளிநாட்டுக்கு தும்புப் பொருட்களை ஏற்றுமதி செய்கின்றதைக் காணலாம். இலங்கையில் தும்புத் தொழிலின் இன்றை நிலையை எடுத்துக் கொண்டால், தென்னை ஏற்றுமதிகள் மூலம் தென்னம் தும்பு போன்ற தெங்கு துணை உற்பத்திகள் அடைந்த உயர் பெறுமதி காரணமாக 2010 இல் ஐக்கிய அமெரிக்க டொலர் 174.0 மில்லியனுக்கு 4.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளதைக் காணலாம்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாற்றை எடுத்துக் கொண்டால் மட்டக்களப்பு தும்பு வேலை நீண்ட வரலாற்றை கொண்டது. ஆரையம்பதியில் இருந்து கொக்கட்டிச்சோலை சிவன் கோயில் தேருக்கு வடக்கயிறு கொண்டு சென்ற காலத்தில் இருந்து இங்கு பாரிய கயிறு உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது புலனாகின்றது.

ஆரையம்பதியில் மட்டுமே கைத்தும்பு எடுக்கப்படுவதுடன் ஆற்றங்கரை ஓரங்களில் குழிகள் அமைத்து அதனுள் மட்டைகளை இட்டு மண்ணால் மூடி விடுகின்றனர். ஆறு மாதம், ஒரு வருடத்தின் பின் வாவிக்கரை குழிகளில் இட்ட தேங்காய் மட்டைகளை வெளியில் எடுத்து தும்பு அடிக்கின்றனர். இது கைத்தும்பு எனப்படும். இதற்காக பச்சைத் தேங்காய் மட்டைகள் மட்டும் பயன்படும். பழுத்த தேங்காய் மட்டைகள் உற்பத்திற்கு பயன்படுத்தப்படாமல் அழிவடைகின்றன. இதில் முதல் தர தும்பு உற்பத்தி செய்ய முடியும்.

1980 ஆம் தசாப்த காலப்பகுதிகளில் குருநாகல், கொழும்பு போன்ற இடங்களிலிருந்து ஆரையம்பதிக்கு லொறிகளில் தேங்காய் மட்டைகளை கொண்டு வந்து புதைத்து தும்பு அடித்து கொண்டு சென்றுள்ளனர்.

தும்பு உற்பத்தியின் சந்தை வாய்ப்பினை எடுத்துக் கொண்டால், உப்பட்டிக் கயிறு, தும்புத்தடி போன்றன அதிகூடியளவு விற்பனையாகின. ஆனால் இப்பொழுது வேளாண்மை அறுவடைக்கு இயந்திரம் பயன்படுத்துவதால் இதற்கான கேள்வி குறைவடைந்துள்ளதைக் காணலாம்.

மட்டக்களப்பில் தும்புத் தொழிலின் இன்றைய நிலையை எடுத்துக்கொண்டால் ஆரையம்பதி, பேத்தாழை, வாழைச்சேனை, புதுக்குடியிருப்பு, நாசிவன்தீவு, வம்மி வெட்டுவான், வாகரை, வீச்சுக் கல்முனை, புதுநகர், ஈச்சந்தீவு, அம்பிளாந்துறை, ஆறுமுகத்தான்குடியிருப்பு உட்பட பல்வேறு பிரதேசங்களில் தும்பு உற்பத்தியானது மிகப் பிரபல்யம் அடைந்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

***

**க.பாலச்சந்திரன்**
தும்புப் போதனாசிரியை,
ஆறுமுகத்தான்குடியிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெசவுத் தொழிலின் வரலாறு

உணவும் உடையும் மனிதனுக்கு மிகவும் அவசியமானவை. எனவே மனித வாழ்விற்கு கமத்தொழிலும், உடை ஆக்கமும் பிரதான கருமங்களாக இருக்கின்றன. பண்டைக்காலத்தில் வாழ்ந்த மக்கள் உணவு உற்பத்திக்காக எடுத்துக்கொண்ட முயற்சியைப் போலவே பருத்திப் பொருள் உற்பத்தி செய்வதிலும் முயற்சித்ததாகத் தெரிய வருகிறது.

உலகம் தொடங்கிய காலத்திலிருந்தே மனிதர்கள் வேட்டையாடி வாழ்ந்து வந்தனர். அவர்கள் தமது உணவிற்காக கொன்ற பிராணிகளின் தோல்களைக் காயவைத்து உடலை மறைத்துக் கொண்டார்கள். இவ்வாறு இருந்த மக்கள் காலம் செல்லச் செல்ல உரோமங்களையும் மரங்களின் பட்டைகளையும் சேர்த்து முறுக்கிய ஆடைகளாக மாற்றி அணிந்து கொண்டனர். இதன் போதே கைத்தறியும் தோன்றியது.

ஆறாயிரம் வருடங்களிற்கு முன் எகிப்திய மன்னர்களின் பிணங்கள் சணல் நாரினால் நெய்யப்பட்ட பட்டினால் சுற்றி வைக்கப்பட்டிருந்தன. ஆகவே அக்காலத்தில் நெசவுக் கைத்தொழில் எகிப்தில் வளர்ச்சி பெற்றிருந்தது தெரிய வருகின்றது. ஆசிய நாடுகளில் இந்தியாவும் சீனாவும் பண்டைக்காலம் தொட்டே கைத்தறியினால் சேலை நெசவு செய்து வந்த தேசங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன் முதலில் பருத்தியை உபயோகித்து சேலை செய்த நாடு இந்தியா எனக் கருதப்படுகின்றது. இந்தியாவில் கைவிடப்பட்ட பருத்தி மூவாயிரம் வருடங்களிற்கு முன் தெற்கு ஐரோப்பிய நாடுகளிற்கு அரேபியரால் கொண்டு செல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.

13ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பருத்தி உபயோகிக்கப்பட்டதாக கூறப்பட்ட போதிலும் 16ம் நூற்றாண்டு வரை பருத்தி பெருமளவில் உபயோகிக்கப்பட்டதாக அறிகுறிகள் காணப்படவில்லை. இக்காலப்பகுதியில்தான் கைத்தறியில் நெசவு செய்யும் நிலை நீங்கி இயந்திரங்கள் மூலம் நெசவு செய்யும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இம் முயற்சியின் பயனாக கி.பி 1733ல் யோன்கே என்பவர் பிளைன் சற்றில் லூம் எனப்படும் நாடாவோட்டும் இயந்திரத்தையும் 1765ல் காகிறீவிசு என்பவர் இசுப்பின்னிங்செனி என்னும் நூல் நூற்கும் இயந்திரத்தையும் 1785ல் காட்டிறைத்து என்பவர் ஓட்டோமற்றிக் என்னும் தன்னியக்கமாக இயங்கும் இயந்திரத்தையும் கண்டுபிடித்தனர். இதன் பயனாக நெசவுக்கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சி மிக மிக அபரிதமாகும். கையினால் நூற்கும் முறுக்கு நூலிற்குப் பதிலாக இயந்திரம் மூலம் நூற்கும் ஒன்றுபட்ட மெல்லிய நூல்கள் அதிகமாகக் கிடைத்தன.

கைத்தறிகளில் செய்யும் சேலை அழகாகவும் மினுக்கமுள்ளதாகவும் மாற்றமடையத் தொடங்கியது. இதனால்தான் இயந்திரங்களின் மூலம் நெய்த சேலைகளை விட கைத்தறியில் நெய்யும் சேலைகளையே மக்கள் அதிகமாக விரும்புகின்றனர்.

2500 வருடங்களிற்கு முன் விஜய மன்னன் இலங்கைக்கு வந்த போது குவேனி என்பவள் நூல் நூற்றுக் கொண்டிருந்தாள். எனவே விஜய மன்னன் இலங்கைக்கு வருவதற்கு முன்பே நெசவுக்கைத்தொழில் நெய்யப்பட்டது என்பது தெரிய வருகிறது.

1148ம் ஆண்டில் தம்பதெனியாவில் இருந்து அரசு செய்த "ககிகால சாகித்ய சர்வங்ச பண்டித" பராக்கிரமபாகு மன்னன் பிக்குகளிற்கு ஆடைகள் தானம் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. இதனால் அக்காலத்தில் நெசவுக்கைத்தொழில் மிகுந்த வளர்ச்சி பெற்றமையை அறியக்கூடியதாக இருக்கின்றது. யுத்தங்களாலும் பிறநாட்டு ஆட்சிகளின் போதும் இக்கைத்தொழில் படிப்படியாகக் வீழ்ச்சி அடைந்துவிட்டது.

இச்சந்தர்ப்பத்தில்தான் தீர்க்க தரிசனமும் தேசப்பற்றும் உள்ள அனகாரிக தர்மபால அவர்களின் (பின்பு தேவமித்த சுவாமி அவர்கள்) வேண்டுகோளின் படி அவரது தந்தையான நற்குணமுடைய தொன்கறோலிசு கேவாவித்தாரணை முதலியவர்கள் தனது சொந்தப் பணத்திலே வித்தியாவிருத்தி நிதியினை ஏற்படுத்தினர். இதன் நோக்கம் கல்வி அறிவும் செயல் திறனும் உள்ள இளைஞர்களை தெரிவு செய்து ஜப்பான் தேசத்திற்கு அனுப்பி அவர்களிற்கு தொழிற்பயிற்சியும் பெறச்செய்து இத்தொழில்களை இந்நாட்டிலும் ஆரம்பிப்பதாகும்.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற கலாநிதி யூ.வி.தொலபிஹில்லே அவர்கள் இராஜகிரியயில் 1912ம் ஆண்டு இராசா கோவித்ததாரனே அவர்கள் நெசவுக்கைத்தொழில் கல்லூரியை ஆரம்பித்தார். 1918ம் ஆண்டு கல்விப்பிரிவிற்குட்பட்ட பாடசாலைகளில் கைத்தறி நெசவு வேலைகளைக் கற்பிக்கத் தொடங்கினார்கள். 1940ம் ஆண்டு தொழிற்பகுதியினரும் கைத்தொழிலில் வேலை செய்பவர்களும் இத்தொழிலை பரப்பும் முயற்சியில் ஈடுபட்டனர்.


***

**ம.அருட்பிரகாசம்,**
நெசவுப் போதனாசிரியர்,
நாவற்குடா நெசவு நிலையம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'செய்யும் தொழிலை சீர்தூக்கிப் பார்க்கின் நெய்யும் தொழிலே மேல்' எனும் முதுரைக்கு ஏற்ப நெசவுத் தொழிலானது எந்தத் தொழிலுக்கும் நிகராகாத உயர்வானது என்றே கூற வேண்டும். மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக உடைகளும் முக்கிய இடத்தை வகிப்பதனைக் கொண்டு இந்த உடையினைத் தயாரிப்பதற்காக பெறப்படும் துணியினை செய்யும் நெசவுத் தொழில் முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாகக் கூறப்படுகிறது. எந்தவொரு தொழிலை செயற்படுத்துவதானாலும் அதற்கு ஒரு ஒழுங்குமுறை உண்டு. எனவே, எமது முக்கிய தேவையாகக் காணப்படும் உடைக்குத் தேவையான துணியினை உற்பத்தி செய்யும் இந்த மகத்துவம் வாய்ந்த நெசவுத் தொழிலுக்கும் அதற்குத் தேவையான மூலப் பொருளான நூலைக் கொண்டு முடிவுப் பொருளான துணியினை உற்பத்தி செய்வது வரையில் ஒரு ஒழுங்குமுறை நெசவு செயல்முறையாகக் காணப்படுகின்றது.

# நெசவு செயல் முறை



இதனை விரிவாக ஆராய்வோமானால், முதலில் துணி நெசவு எனும் போது இதற்கான மூலப்பொருளாகிய நூல் இரண்டு வகையாகத் தேவைப்படுகின்றது. அவை, பாவு நூல், ஊடை நூல் என்பவையாகும். இந்த மூலப் பொருளினை, முதலில் மதிப்பீடு ஒன்றினைத் தயார் செய்து தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அதாவது உற்பத்தி செய்யத்தீர்மானித்துள்ள துணியின் வகை, அதன் நீளம், அகலம், நூலினது அடர்த்தி, நிற ஒழுங்கமைப்பு, துணியினது வடிவமைப்பு என்பவை கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நாம் தீர்மானித்தபடி அளவிடப்பட்ட பாவு நூல்களை தார்க்குழலில் சுற்றிக்கொள்ளும் வேலை இடம்பெற வேண்டும். இவ்வாறு ஒழுங்குமுறையில் நூலினை சுற்றும்போது அந் நூலானது அறுந்துகொள்ளும் சந்தர்ப்பத்தில் இரு தொங்கல்களையும் மீண்டும் சேர்த்து முடிந்து கொள்வதற்காக நெசவு முடிச்சானது இடம்பெற வேண்டும். இந்த முடிச்சை இடுவதனால் நெசவு செயல்முறை ஏனைய வேலைகளின் போது நூல் அறுவதை தவிர்த்து துணியில் நேர்த்தியான தன்மையை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

தார்க்குழலினில் சுற்றி எடுக்கப்பட்ட பாவு நூல்களை தீர்மானிக்கப்பட்ட நிறத்திற்கும், நூல் நெருக்கத்திற்கும் ஏற்ப தார்க்குழற்படலையில் அடுக்கி எடுக்கப்பட்டு அதன்பின்னர் பிணி அமைப்பதற்காக பிணிச்சட்டத்தில் கட்டப்பட்டுள்ள விழுதுக் கண்ணினுள் ஒரு நூலும் இரு விழுதுகளுக்குமிடையிலுள்ள இடை வெளியில் ஒரு நூலுமாக எல்லா நூல்களையும் சேர்த்து அதில் கட்டப்பட்டுள்ள அச்சில் ஒவ்வொரு இடை வெளியிலும் விழுதுக் கண்ணிலுள்ள ஒரு நூலும் பக்கத்து இடைவெளியில் ஒரு நூலும் எடுத்து இரண்டு நூல்கள் வீதம் எடுத்து கோர்க்கப்பட்டு பிணி இடப்படும்.

பின்னர், தயார் செய்யப்பட வேண்டிய பிரிவின் நீளத்திற்கு ஏற்ப பாவுருளையில் சுற்றப்பட வேண்டிய அளவினை குறிப்பிட்டுக் கொள்ளவேண்டும். அவ்வாறே, பாவுருளையின் அகலத்தையும் பாவின் அகலத்தையும் அளந்து மேலதிகமாக உள்ள பாவுருளையின் அகலத்தை இரண்டாகப் பிரித்து வரும் இடத்திலிருந்து இடது பக்கமாகவே முதலாவது மீள்சுற்று பாவு ஓட ஆரம்பிக்கப்பட்டு நாம் குறிப்பிட்டுள்ள அகலத்திற்கு பாவினை முழுமையாக ஓடி முடித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஓடி முடிக்கப்பட்ட பாவினை பாவுத் தண்டில் சுற்றிக் கொள்வது தண்டினுள் சுற்றுதல் (பாவீம் செய்தல்) எனப்படுகின்றது. இதற்காக பாவுத்தண்டின் அகலம், பாவின் அகலம் என்பன ஒழுங்கான முறையில் கணக்கிடப்பட்டு பாவுத்தண்டின் மத்தியில் வரக்கூடியவாறு பாவுத்தண்டிலுள்ள கான் தடியில் பாவுருளையிலுள்ள நூல்களை இணைத்து பாவுத்தண்டுடன் இணைத்துக் கட்டிய பிற்பாடு பாவுருளையில் உள்ள நூல்களை வீம் செய்து கட்டி முடிக்க வேண்டும்.

இவ்வாறு வீம் செய்யப்பட்ட பின்னர், பாவுத் தண்டினை கோர்வை செய்வதற்காக தறியின் பின் பக்க சட்டத்தில் வைத்து நூல்கள் குலைந்து வராதபடி இரு பக்கங்களையும இறுக்கிக் கட்டிக்கொள்ள வேண்டும். கோர்வைக்காக ஆயத்தப்படுத்திய விழுதுத் தொகுதியில் எமக்குத் தேவையான வடிவமைப்பிற்கு ஏற்ப நூல்களை கோர்வை செய்து கொள்ளல் வேண்டும். கோர்வையானது விழுதின் இடப்பக்கத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு வலது பக்கத்தில் முடிக்கப்படல் வேண்டும். விழுதில் கோர்க்கப்பட்ட நூல்களை மீண்டும் அச்சில் ஒரு இடைவெளியில் இரண்டு நூல்கள் வீதம் எடுத்து வலது பக்கமிருந்து இடது பக்கத்தில் கோர்த்து முடிக்கப்படல் வேண்டும்.

அடுத்து, தறியின் மேல் சட்டத்தில் வைக்கப்பட்டுள்ள பாவுத்தண்டை இறக்கி பாவுத் தண்டை தாங்கும் சட்டத்தினுள் வைக்க வேண்டும். கோர்க்கப்பட்ட விழுதுகளை சேணற்கட்டத்திலுள்ள நெம்புக் கோல்களுடன் இணைத்துக் கட்ட வேண்டும். அச்சிலுள்ள நூல்களை நெஞ்சுத்தண்டு அல்லது முதுகுத்தண்டின் மேலாக எடுத்து துணிசுற்றும் தண்டிலுள்ள கான் தடியில் இணைத்து இழுத்துக் கட்டிக்கொள்ள வேண்டும். பின்னர் விழுதுகளின் கீழ்ப்பக்க நடுப்பகுதியிலிருந்து குறுக்குத்தடியுடனும் மிதி தடிகளிலிருந்து தேவையான வடிவமைப்பிற்கு ஏற்ப குறுக்குத்தடிகளுடனும் கயிறுகள் இணைக்கப்படல் வேண்டும். இந் நடைமுறையினை ''தறியில் அமைத்தல்'' எனப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தறியிலமைக்கும் செயல்முறையின் போது பாவுநூலானது பாவுத்தாங்கித் தண்டில் எல்லா இடங்களிலும் பரவி இருக்க வேண்டும். இவை அனைத்தும் ஒழுங்கான முறையில் இடம்பெற்று முடிந்ததுமே நெசவு செய்தல் வேலை ஆரம்பிக்கப்படல் வேண்டும். இதுவே துணியை நெய்வதற்கு ஆயத்தம் செய்வதன் கடைசிப் பகுதியாகும். எனவே, இதுவரை செய்யப்பட்ட ஆயத்த வேலைகள் பல எனவும், காலம் நீடிக்கவும் கூடும் எனவும் உணரக்கூடியதாக இருந்தாலும் பழகும்போது இலகுவானதும் விரைவில் செய்யக்கூடியதுமான வேலை என்பதனை விளங்கிக்கொள்ள முடியும். பாவை தறியில் அமைப்பதனை கவனமாகவும் ஒழுங்கு முறைப்படியும் மேற்கொள்ளாதுவிட்டால் நெய்து முடித்தபின்னர் தரமான ஆடைகளை எதிர்பார்க்க முடியாது போய்விடும்.

நெசவு செய்ய ஆரம்பிக்க முன்னர் பலகை மரத்தில் ஒழுங்கான முறையில் நாடாப்பெட்டி, நாடா தள்ளி, கைப்பிடி என்பன சரியான முறையில் அமைக்கப்பட்டு கயிறுகள் தொடுக்கப்பட்டு இருந்தால் நெய்யும் முறையானது இலகுவானதாக இருக்கும். நாடா ஓடுதளமானது எதுவித சிதம்பல்களும் இல்லாத நிலையிலிருந்தால் தான் நாடா இலகுவாக இடது பக்கமிருந்து வலது பக்கமாக செல்வதுடன் துணியில் நேர்த்தியான நிலையும் நூல்கள் அறாமலும் வேலை செய்யக்கூடியதாக இருக்கும்.

இதன் பின்னர் துணி நெய்வதற்காக ஊடை நூல் சுற்றுதல் வேண்டும். தார்க்குச்சியில் சுற்றப்பட்ட ஊடை நூலானது தறி நாடாவில் இடப்பட்டு அதன் துவாரங்களினூடாக அதன் தொங்கலை வெளியிலெடுத்து இடது பக்க நாடாப் பெட்டியினுள் நாடாவினை இடல் வேண்டும். நெசவு செய்வதற்காக நாம் முதலில் தறியின் இடது பக்கமாகவே காலைத் தூக்கி உட்செலுத்தி இருக்கையில் அமர வேண்டும். நெசவுத் தொழிலில் இடது பக்கம் என்பது மிக முக்கியமான பங்கை வகிக்கின்றது. காரணம் எந்தவொரு செயலையும் ஆரம்பிப்பது இடது பக்கமாகவே நிகழ்கின்றது. நாம் வடிவமைக்கத் தீர்மானித்துள்ளபடியே மிதி தடிகள் கட்டப்பட்டிருக்கும். இவற்றில் கூட இடது பக்கமிருந்தே மிதி தடிகளின் எண்ணிக்கை கணிப்பிடப்படுகின்றது. எனவே, தீர்மானித்தபடி முதலாவது மிதியை மிதித்து இடது பக்கமாக நாடாப் பெட்டியினுள் உள்ள நாடாவை கைப்பிடியை பிடித்து இழுத்து அடிப்பதனூடாக வலது பக்க நாடாப்பெட்டிக்குள் செலுத்துதல் வேண்டும். இதே போன்று வலது பக்க நாடாப் பெட்டியினுள் இருக்கும் நாடாவினை கைப்பிடியை இழுத்து அடிப்பதனூடாக இடது பக்க நாடாப் பெட்டியினுள் கொண்டு செல்லுதல் வேண்டும். இவ்வாறு மாறி மாறி செல்லும் நூலினை பலகை மரத்தை இழுத்து அடிப்பதனூடாக இறுகச் செய்து துணியினை ஆக்கிக் கொள்ளலாம்.

கைப்பிடியினைப் பிடித்து உயர்த்தி இழுக்கும் போது V வடிவில் கைப்பிடியை இழுத்து அடித்தல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது வேகமாக நெசவு செய்வதனால் துணியின் நீளம் விரைவாக வளரக்கூடியதாக இருக்கும். பலகை மரத்தை அசைத்து வேலை செய்யும் போது பலகை மரத்திற்கும் துணிக்கும் உள்ள இடைவெளி கூடுதலாகக் காணப்படுமாயின், நாடாவானது கீழே விழக் கூடும். இதனால் நேரம் வீணாகுவதோடு கூடுதலான அளவு துணியை அடிக்க முடியாத நிலையும் ஏற்படும்.

இறுதியாக எம்மால் மேற்கொள்ளப்படும் உற்பத்திப் பொருளானது அதன் அளவிறகு ஏற்ப வெட்டி எடுக்கப்பட்டு இரு கரைகளும் தைக்கப்பட்டு முடிவுறுத்தல் செய்யப்படல் வேண்டும். எம்மால் மேற்கொள்ளப்படும் உற்பத்திப் பொருள்களுக்கு ஒரு முடிவுத்தன்மை இருக்க வேண்டும். அதாவது கவர்ச்சித்தன்மையை ஏற்படுத்தக்கூடியவாறு பொதி செய்யப்படுதல் முக்கியமானதாகும்.

எனவே, இதன் மூலம் நெசவுத் தொழிலில் மூலப் பொருளைக் கொண்டு முடிவுப் பொருளை ஆக்கிக்கொள்வதற்கு ஒழுங்கான செயல்முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**திருமதி. S.நிரஞ்சன்**
நெசவுப் போதனாசிரியர்
புதுநகர் நெசவு நிலையம்

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏற்றுமதிக்குப் பொருத்தமான பொருட்களை உற்பத்தி செய்தல்

அன்றாடம் நாம் நுகருகின்ற அல்லது வாங்குகின்ற பொருட்களை நமது பிரதேசத்தில் உள்ள வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பாரம்பரியம் நமது நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருகிறது. எமது பிரதேசத்தில் அல்லது நாட்டில் உற்பத்தி செய்யும் பொருட்களை இந்த நாட்டிலேயே விற்பனை செய்யும் போது அந்தப் பொருளுக்குக் கிடைக்கும் விலை பெரும்பாலும் குறைவாகவே காணப்படும். இதற்குக் காரணம் அந்த உற்பத்திப் பொருளை இந்த நாட்டில் வேறு ஒரு பிரதேசத்தில் குறைவான விலைக்கு உற்பத்தி செய்தல் அல்லது பாரிய அளவில் உற்பத்தி செய்தல் ஆகும். உதாரணமாக, மட்டக்களப்பினை அண்டிய கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளின் விலை பெரும்பாலும் தம்புள்ள மற்றும் கண்டி போன்ற பிரதேசங்களின் விலையிலேயே தங்கியுள்ளது . எனவே, சிறிய அளவில் விவசாய உற்பத்திகளில் ஈடுபடும் விவசாயிகள் தமது உற்பத்திக்கு ஏற்ற விலையினைப் பெறுவதில் சிரமத்தினை எதிர்நோக்குகின்றனர். இது போலவே சிறிய அளவில் உற்பத்திகளை மேற்கொள்ளும் உணவு , சிற்றுண்டி உற்பத்தியாளர்கள், கைப்பணிப் பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் தையல், நெசவு பொருள் உற்பத்தியாளர்களும் தமது உற்பத்திக்குக் குறைந்த விலையினையே பெற்றுக் கொள்வதால் அந்தத் துறையில் முன்னேறாமல் தொடர்ந்து ஆரம்பித்த நிலையிலேயே உள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த வளர்ச்சியற்ற தேக்க நிலைக்குக் காரணம், இந்த உற்பத்தியாளர்கள் இந்த நாட்டினைச் சார்ந்த அல்லது இந்த நாட்டிலேயே உள்ள 21 மில்லியன் சனத்தொகையை நோக்கிப் பொருட்களை உற்பத்தி செய்தல் ஆகும். இதே உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை "ஏற்றுமதி" நோக்கிச் சிந்தித்து உற்பத்திகளை ஆரம்பிப்பார்களேயானால் அவர்களுக்கான எதிர்காலம் மிகச்சிறந்ததாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்றாட விலை அறிக்கை - மத்திய வங்கி 22/07/2019 .Daily price report – Central Bank

உதாரணமாக மேற்குறிப்பிட்ட படத்தில் இருந்து எமது பிரதேச உற்பத்தியான கத்தரியின் விலை ரூபாய் 70/= க்கும் 180/= க்கும் இடையில் கொழும்பு சந்தையில் காணப்படும் அதே வேளை, தம்புள்ளவில் ரூபாய் 50/= க்கும் 150/= க்கும் இடையில் காணப்படுகிறது. இந்த சூழ் நிலையில் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் தமது கத்தரியினை அருகிலுள்ள தம்புள்ள சந்தைக்கே விற்க வேண்டி இருப்பதால் கொழும்பு விலையிலும் குறைவாகவே பெறுவர்.

மாறாக இந்த விவசாயிகள் ஏற்றுமதிச் சந்தையுடன் தொடர்பில் இருந்திருந்தால் இந்த மரக்கறிகளை நிலையான சிறந்த விலைக்கு விற்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டு இருக்கும் .




https://www.harrisfarm.com.au/search?q=egg+plant

உதாரணமாக அவுஸ்திரேலியாவில் இந்தக் கத்தரிக்காய்க்கான விலை ரூபாய் 1397/= ஆகும். இந்த சந்தையை எமது பிரதேச விவசாயி பெற்றுக்கொண்டால், ஏற்றுமதி செய்யும் நிறுவனத்துக்கு அல்லது கொம்பனிக்கு சராசரியாக ஒரு கிலோ கத்தரிக்காயினை ரூபாய் 400/= இற்கு விற்பனை செய்தாலும் விவசாயி தனது தொழிலை மிகச் சிறப்பாகச் செய்யக் கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயப் பொருட்கள் மாத்திரமின்றி, உணவு, கைப்பணிப் பொருட்கள் போன்றவற்றையும் சிறந்த விலைக்கு ஏற்றுமதி செய்யக் கூடியதாக இருப்பது " ஏற்றுமதி சந்தையின்" சிறப்பியல்பாகும்.

மேற்குறிப்பிட்ட உதாரணத்தின் மூலம் அதிக இலாபம் பெறவும், தொடர்ந்த வியாபார முன்னேற்றத்திற்கும் ஏற்றுமதி சார் உற்பத்தியே சிறந்தது என்பது தெளிவாகியிருக்கும் . அந்த வகையில் ஒரு உற்பத்தியாளர் தனது உற்பத்தியை ஏற்றுமதிக்குப் பொருத்தமாக அமைத்துக் கொள்ளல் எப்படி என்று இனி பார்ப்போம்.

**1.சந்தை ஆய்வு**

ஏற்றுமதிக்குப் பொருத்தமான பொருட்களை உற்பத்தி செய்ய ஆரம்பிக்கும் ஒருவர் முதலில் தனது பொருளை ஏற்றுமதிச் சந்தையில் ஒப்பிட்டு அதற்கான வாய்ப்புகளை அறிந்து கொள்ள வேண்டும். இந்த ஆரம்ப ஆய்வின் மூலம் குறித்த பொருள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமெனில் அந்தப் பொருள் கொண்டிருக்க வேண்டிய அடிப்படை குணாம்சங்கள் பற்றிய தெளிவு அந்த தொழில் முயற்சியாளருக்கு ஏற்படும்.

**2.மாதிரி உற்பத்தியும் செலவுக் கணிப்பும்**

இந்த அறிவின் அடிப்படையில் அந்த பொருளில் செய்ய வேண்டிய தரம், வடிவம், நிறம் சார் மாற்றங்களை உரிய பயிற்சி நிறுவங்களில் வழங்கப்படும் பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்கள் மூலம் பெற்று ஏற்றுமதிக்குப் பொருத்தமான பொருளை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். இந்த முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் உற்பத்திச் செலவினையும், உற்பத்தி வேகத்தினையும் குறித்துக் கொள்ளல் மிக முக்கியமாகும்.

**3.பொருளை மேம்படுத்தலும் ஆரம்ப ஒப்பந்தமும்**

இந்த முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் மாதிரியையும், அதன் முப்பரிமாண தோற்றத்தின் தெளிவான புகைப்படத்தினையும் கைவசம் வைத்துக் கொள்ள வேண்டும்.

இதன் அடுத்த படியாக இந்தப் பொருளின் புகைப்படத்தினை பல்வேறு ஏற்றுமதி வலைத் தளங்களில் (websites) உரிய தகவல்களுடன் பதிவிட வேண்டும். இந்த ஒவ்வொரு பதிவுகளிலும் உற்பத்தியாளரைத் தொடர்பு கொள்ளும் வழிமுறைகளைக் குறிப்பிடுவது அவசியமாகும். செல்லிடத் தொலைபேசி (Mobilephone) இலக்கம், மின்னஞ்சல் (email) முகவரி, வட்ஸ்அப் (whats up) இலக்கம் , முகப்புத்தக ( facebook) பெயர்/விலாசம் என்பவை தற்காலத்தில் பொதுவாக எதிர்பார்க்கப்படும் தொடர்பு கொள்ளும் வழிமுறைகளாகும்.

இவ்வாறு செய்யப்படும் அறிமுகத்துடன், கண்காட்சிகளில் பங்கு கொள்வது, சில ஏற்றுமதி சார் கூட்டங்களில் பங்கு கொள்வது, உற்பத்தி செய்யப்பட்ட பொருளை ஏற்றுமதி செய்யும் கொம்பனிகளை கூகுள் ( google) போன்ற தேடு பொறியைப் (search engine) பயன்படுத்தி இனம் கண்டு அந்த நிறுவனங்களுடன் சந்திப்புகளை ஏற்படுத்துவது போன்ற செயல்பாடுகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருளை ஏற்றுமதி செய்யும் ஒரு நிறுவனத்தின் கவனத்துக்கு கொண்டு வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த நிறுவனம் உற்பத்தி செய்யப்பட்ட பொருளை ஏற்றுமதி செய்வதாலும் மேலும் அதிக பொருட்களை அவ்வாறான நிறுவனங்கள் தொடர்ந்து தேடுவதாலும், குறித்த உற்பத்திப் பொருளுக்கான கேள்வியைப் பெறுவது ஒரு கடினமான விடயமாக அமையாது. தொழில் முயற்சியாளரின் தொடர்ந்த முயற்சியால் அவர் உற்பத்தி செய்த பொருளுக்கான ஏற்றுமதியாளரைக் கண்டுபிடித்து அவரின் தேவையை அறிந்து கொள்ளல் சுலபமாகும்.

இவ்வாறு இனம் காணப்பட்ட ஏற்றுமதியாளரைத் தொடர்பு கொண்டு ஏற்கெனவே உற்பத்தி செய்து வைத்திருக்கும் பொருளை அனுப்பி அவர்களின் அறிவுரைகளோடு அவர்கள் எதிர்பார்க்கும் பொருளை உற்பத்தி செய்ய வேண்டும். இந்த உற்பத்திப் பொருள் "மாதிரி (sample)" என அழைக்கப்படும்.

இந்த மாதிரியை வைத்துக் கொண்டு ஏற்றுமதியாளரின் தேவைக்கு ஏற்ப வழங்கக் கூடிய பொருளுக்கான ஒப்பந்தத்தினை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

**4. பொருள் உற்பத்தியும் வழங்கலும்**

ஏற்றுக் கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய உரிய தரத்தில், உரிய எண்ணிக்கையில், உரிய நேரத்தில் பொருளை உற்பத்தி செய்து வழங்குதல் மிக முக்கியமாகும்.

**5. நேரடி ஏற்றுமதியாளராகப் பதிதல்**

மேற்குறிப்பிட்ட அனுபவத்துடன் குறித்த உற்பத்தியாளர் தனது உற்பத்திகளை நேரடியாக ஏற்றுமதி செய்ய முனையலாம். இந்த நிலையில், உற்பத்தியாளர் தனது தொழிலை ஏற்றுமதித் தொழிலாக வியாபாரப் பதிவு செய்து கொள்ள வேண்டும் . இந்த நிலையில் தனது வியாபாரம் "கைப்பணி" சார் உற்பத்தி எனின் வியாபாரப் பதிவின் போது "கைப்பணி ஏற்றுமதி" எனும் பதத்துடன் பதிவு செய்தல் அவசியமாகும். உற்பத்தியாளர் உணவுப் பொருளை ஏற்றுமதி செய்ய முயன்றால் வியாபாரப் பதிவின் போது " உணவு ஏற்றுமதி" எனும் பதத்துடன் பதிவு செய்ய வேண்டும். இந்த வியாபாரப் பதிவு பிரதேச செயலகம் மற்றும் அருகிலுள்ள பிரதேச சபை /மாநகர சபை ஆகிய இரண்டு நிறுவனங்களிலும் இடம் பெற வேண்டும்.

இதன் அடுத்த படியாக இந்த வியாபாரப் பதிவின் உதவியுடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் , ஏற்றுமதியாளராகப் பதிவு செய்யும் நடைமுறை ஆரம்பிக்கும் . அந்த நடைமுறையில் , ஏற்கனவே குறிப்பிட்ட படி பிரதேச செயலக வியாபாரப் பதிவில், வியாபாரத்தின் வகை எனும் கூட்டினுள் "ஏற்றுமதி" எனும் சொல் காணப்படுதல் மிக அவசியமாகும். இந்த அடிப்படைத் தேவை நிறைவு செய்யப்பட்டதும், தொழில் முயற்சியாளர் தனது வியாபாரத்தை " ஏற்றுமதி வியாபாரமாக" பதிதல் இடம்பெறும்.

ஏற்றுமதியாகப் பதியப்பட்டவுடன் அந்த தொழிலுக்குக் கிடைக்கும் இலக்கத்துடன் குறித்த உற்பத்தியாளர் தனது பொருளை நேரடியாக ஏற்றுமதி செய்யும் நிலைக்கு உயர்த்தப்படுவார்.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஏற்றுமதியாளர் பட்டியலின் இந்த உற்பத்தியாளரின் பெயரும் உட்சேர்க்கப்படுவதால், உலகிலுள்ள ஏனைய நாட்டிலுள்ள பொருளை இறக்குமதி செய்யும் ( இங்கிருந்து நாம் ஏற்றுமதி செய்தால் அதைப் பெறுபவர் எம்மைப் பொறுத்தவரை அவர் எமக்கு : இறக்குமதியாளர் ) அனைவரது தொடர்புகளும் அந்த உற்பத்தியாளருக்கு கிடைப்பதால், அவரின் வளர்ச்சி மிகப் பெரிதாக அமையும்.

மேற் குறிப்பிட்ட ஐந்து படிமுறைகளையும் சரியாகத் திட்டமிட்டு படிப்படியாகக் கடந்தால், அந்த தொழில் முயற்சியாளர் ஒரு சிறந்த வளர்ச்சியை அடைவார்.

***

**த. சக்திவேல்**
**வியாபார ஆலோசகர் , தலைமைப் பயிற்றுனர்**
**கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனம்**
**( Industrial Development Organization- IDO) www.idosl.org**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெசவின் பிணைப்பு

உணவு, உடை, உறையுள்
என்ற – உயிர்ப்பின
அடிப்படையில்
உடை நெய்தே
உணவு உண்ணும்
ஓர் உயிரின்
பிணைப்புக்கள் - நாங்கள்.

வறுமை என்றே
நாங்கள் முடங்கவில்லை
வங்கக்கடலின்
அலை தொடராய்
இழையோடு தொடரும்
எங்கள் உழைப்பும்
வலியொடு கலந்தே – நீளும்.

ஆம்
நாங்கள்
தறிகளின் பிள்ளைகள்
நெசவென்னும் தொகுப்பு வலையில்
உயிர் ஜீவன்கள்.

இரட்டைக்கால் ஊன்றி
ஓர் கால் மிதிக்கையிலே
இரட்டைக்கைகளும்
இடையறாது வேலை செய்யும்
கண்களும்.
காதின் ஒலிக்குறிப்பும்
ஓசையோடு
சத்தம் இசைக்கும்
அங்கே உருவமாய்
சீலை கிடைக்கும்.

நூலிடையும் அச்சும்
தறிப்பலகையும் எங்கள்
உயிர்த்தோழனாகும்.
அவற்றைத் தழுவியே
நாங்கள்
தொடுக்கும் நூல்கள்
உணர்வின்
கதை சொல்லும்.

காதல் கொண்ட
மங்கை பின்னே
கவி தொடுத்து
பின் நகரும் காதலனாய்
தறிக்கட்டை நகர்ந்தே
ஓடும் - ஆங்கே,

உணர்வு நீள
வறுமை வந்தே
வாழ்க்கையை புடம் போட்டே
உண்மையில்
யதார்த்தம் சொல்லும்.

சாயமிட்ட நூல்களெல்லாம்
வர்ண ஜாலமாய்
துணியாய் மிளிர்ந்து கொள்ளும்.
அங்கே
தறி தொடுத்த
எம் உடல்கள்
மகிழ்வுடனே நகர்ந்து செல்லும்.

**திருமதி வசந்தி சிவராஜா**
நெசவு போதனாசிரியை
சத்துருக்கொண்டான் நெசவு நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரம்பரிய

## நெசவுக் கைத்தொழிலை ஊக்குவித்தல்.

மனித வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும் போது மனிதன் நாளுக்கு நாள் முன்னேறறம் அடைந்து கொண்டிருப்பதை காணலாம். அன்று மனிதன் எளிய வாழ்க்கை வாழ்ந்தான். தற்காலத்தில் தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் சிக்கல் தன்மையும் அதிகரித்துள்ளது. இம்முன்னேற்றம் சமூகத்திற்கு சாதகமானதை மட்டும் உற்பத்தி செய்வதில்லை. பாதகமான வதிகளும் பலவாகும். அதுமட்டுமன்றி பாரம்பரிய பல உற்பத்திகளும் தற்போது தொழில்நுட்ப முன்னேற்றங்களால் மறைந்து போய் காணப்படுகின்றன.

நவீன உற்பத்திகளால் ஆக்கிரமிக்கப்பட்டு ஒரு செயற்கை சூழலுக்குள் நாம் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதால் பாரம்பரிய விதிகள் மங்கி மறைந்து வருகின்றன. எமது பாரம்பரிய விதிகளை ஊக்கப்படுத்தி நவீன சந்தைக்குள் கொண்டுவருவது அவசியமான ஒன்றாக இருக்கின்றது.

நவீன அவசர உற்பத்திகளின் ஆக்கிரமிப்பின் விளைவாக உள்ளூர் கிராம உற்பத்திகளுக்கு தேசிய சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பது ஒரு சவாலாக உருவெடுத்துள்ளது. தற்போதய நவீன அவசர உலகில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகள் இயற்கைக்கு சவால் விடும்படியாகவும் சூழலுக்கும் ஆரோக்கியத்திற்கும் கேடு விளைவிப்பதாகவும் அமைகின்ற போதும் நம்மில் பலர் அவசர உலகப்போக்கில் அதனைத்தான் விரும்புகின்றோம். அதேவேளை நீண்டகாலப்போக்கில் இந்த நவீன உற்பத்திகளால் இயற்கைக்கும் தேக ஆரோக்கியத்திற்கும் பாதிப்புக்கள் ஏற்படும் என உணர்ந்தோர் பாரம்பரிய கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பாரம்பரிய உற்பத்திகளை பல நம் எதிர்கால சந்ததியினர் பலர் அறியாமலேயே அழிந்து போகும் நிலை காணப்படுகின்றது. எனவே இவற்றை ஊக்கப்படுத்தி நவீன சந்தையை நோக்கி கொண்டு செல்ல வேண்டும். எனவே இத்தகைய உற்பத்திகளுக்கு அரசும் இன்னும் சில அரச சார்பற்றவர்களும் சமூக அமைப்புக்களும் உதவிக்கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலத்தில் நாட்டில் பல இடங்களிலும் பாரம்பரிய கைவினைப் பொருட்கள் தொடர்பான கண்காட்சிகளும் விழிப்புணர்வு நிகழ்வுகளும், பயிற்சி நடவடிக்கைகளும், ஊக்குவிப்புத் திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இவர்களை இத்தொழிலில் ஊக்கப்படுத்துவதற்காக பல நிதி உதவி கடன் திட்டங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே இவற்றை சிறந்த வாய்ப்பாக பயன்படுத்தி நவீன மாயையில் இருந்து விடுபட்டு எமது பாரம்பரியத்திற்குள் மீண்டும் நாம் நுழைய வேண்டும்.

ஆரோக்கியமும் சகவாழ்வும் இயற்கையுடன் இணைந்த உறவும் கொண்ட எமது பாரம்பரிய உற்பத்திகளை எமது எதிர்கால சந்ததிக்கு நிகழ்கால மற்றும் எதிர்கால சிந்தனைக்கு ஏற்ப அறிமுகப்படுத்த வேண்டும். இதுவேதான் நீடித்து நிலைக்கக் கூடியதான, இயற்கைக்கும் மனிதன் உட்பட அனைத்து ஜீவராசிகளுக்கும் சேதம் விளைவிக்காத சிறந்த சூழலை எமக்கு பெற்றுத்தரும்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சியாளர்களாகிய பெண்களுடைய திறமைகளை விருத்தி செய்யக்கூடியதுவும் வருமானமீட்டக்கூடியதுமான சந்தையினை இவர்களுக்கு பெற்றுக்கொடுப்பது அவசியமாகும். பாரம்பரிய உணவுகள், கைத்தறி, மட்பாண்டம், வீட்டு அலங்காரப் பொருட்கள், உருவங்கள், தாவர உற்பத்தி, மளிகைப்பொருட்கள் போன்ற பாரம்பரிய பொருட்களை நவீன சந்தைக்கு எடுத்துச்செல்ல தேவையான வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும். இதன்மூலம் பாரம்பரிய கைத்தொழிலாளர்கள் மட்டுமின்றி நுகர்வோருக்கும், நாட்டுக்கும் கூட பல நன்மைகள் ஏற்படும்.

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. நாட்டின் அந்நிய செலாவணியை ஈட்டித்தருவதில் முக்கிய பங்கு ஏற்றுமதி வர்த்தகத்திற்கு உண்டு. அந்த வகையில் அரசாங்கத்தினால் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் ஊக்குவிக்கப்படுகின்றது. உலக சந்தையின் இலங்கையின் ஏற்றுமதி அளவு கணிசமானது ஆகும். எனவே ஏற்றுமதிகளை ஊக்கப்படுத்தக்கூடிய நடைமுறைகளை மேற்கொள்ளல் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

ஏற்றுமதி பொருட்களின் தரம்தான் மிகவும் அவசியமான ஒன்றாகும். கைத்தறி நெசவு என்பது இலங்கை இந்தியா ஆகிய நாடுகளால் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்ற ஒரு தொழிலாகும். இந்தியாவில் தமிழ் நாட்டில் பல ஊர்களில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக இது முக்கியத்துவம் வாய்ந்து விளங்குகின்றது. ஆயினும் இலங்கையை பொறுத்தவரையில் கீழ்மட்டத்தில் அதாவது ஊக்குவிக்கப்படவேண்டிய மட்டத்திலுள்ள ஒரு தொழிலாக காணப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிறு கைத்தொழில் வணிகமாகக் காணப்படும் இந்நெசவுக் கைத்தொழில் சற்று முன்னேற்றம் அடைந்து ஏற்றுமதி சந்தையை நோக்கியதாக நகர்ந்து செல்வதை அவதானிக்கலாம். அந்த வகையில் ஏற்றுமதிக்கு தகுந்த உற்பத்தி பொருட்களை மேற்கொள்வது அவசியமாகின்றது.

நெசவு தொழிலாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் இலங்கை அரசு பல்வேறு கடன் திட்டங்களையும் மானிய முறைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி அரச சார்பற்ற பல நிறுவனங்களும் நெசவுத்தொழிலை மேம்படுத்துவதற்காக பல்வேறு உதவிகளையும் ஊக்குவிப்புக்களையும் வழங்கி வருகின்றன. இன்று உலக சந்தையில் நெசவு ஆடைகளுக்கான கேள்வி அதிகரித்து வருகின்றது. இதனை நல்ல வாய்ப்பாக கொண்டு நெசவு ஏற்றுமதிகளை சந்தைக்கு கொண்டு செல்லலாம்.

ஏற்றுமதி சந்தைக்கு கொண்டு செல்ல தரம்மிக்க உற்பத்திகளை மேற்கொள்வது அவசியமான ஒன்றாகும். எனவே நெசவு தொழிலாளர்களுக்கு சிறந்த பயிற்சியை வழங்குவதன் மூலம் உற்பத்திகளின் தரத்தை அதிகரித்துக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான நூல், சாயமிடல், வடிவமைப்பு முறைகளை பயன்படுத்தியும் கைத்தறிகளில் நவீன தொழில்நுட்பங்களை உட்புகுத்தியும் உற்பத்தி தரத்தை மேம்படுத்தலாம். நெசவு புடைவை தற்போது பெண்கள் மத்தியில் பிரபல்யமான ஒன்றாகக் காணப்படுகின்றது. எனவே இவர்களைக் கவரும் வகையிலான வடிவங்களை, வர்ணங்களை பயன்படுத்தலாம்.

தற்காலங்களில் மூலப்பொருள் தட்டுப்பாடு நெசவு தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பெரும் பிரச்சனையாகும். எனவே இதற்கு ஏற்றாற்போல அரசு தேவையான அளவு மூலப்பொருட்களை இறக்குமதி செய்து தொழிலாளர்களுக்கு குறைந்த விலையில் தரமான நூலையும், சாயங்களையும் வழங்க வேண்டும். அதேபோல் நெசவு உபகரணங்கள் மற்றும் தறிகளையும் அவற்றை பிரயோகிக்கும் வழிமுறைகளையும் எளிதாக்கும் வழிமுறைகளைக் கண்டறிந்து பயிற்சி வழங்க வேண்டும்.

சந்தைப்படுத்தல் மற்றும் சந்தையை கைப்பற்றல் மற்றுமொரு பிரச்சனையாக காணப்படுகின்றது. எனவே முதலில் சந்தைப்படுத்தல் நுட்பங்கள் பற்றி நெசவு தொழிலாளர்களுக்கு அறிவூட்டல் அவசியமாகும். அதுமட்டுமன்றி தற்போது சமூக வலைத்தளங்களின் பாவனை அதிகரித்து செல்வதால் சமூக வலையங்களூடாக நெசவு தொழிலில் ஏற்றுமதியை நோக்கிய நகர்வைக்கொண்டு செல்லலாம். Online Business எனப்படும் முறையை பயன்படுத்துவதன் மூலம் பல நாடுகளுக்கும் உற்பத்திகளை விற்பனை செய்யலாம்.

நெசவு கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காகவும் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்காகவும் அரசு பாடசாலை கல்வியிலே நெசவு முறையை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் பட்டப்படிப்பு வரை மேற்கொள்ளும் அளவுக்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. எனவே இவ்வாய்ப்புக்களை சரிவரப் பயன்படுத்தி நெசவு கைத்தொழில் வளர்ச்சிக்கு கைகோர்ப்போம்.

***

**க. தர்மதா**
பயிற்சி பயிற்றுவிப்பாளர்
மண்டபத்தடி நெசவு நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்கள பயிற்சிக்கால அனுபவம்

இன்று எத்தனையோ மாணவர்கள் படிக்கிறார்கள் ஆனால் அவர்கள் எல்லோருக்கும் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. அதற்கு காரணம் அவர்களுக்கு அறிவுத்திறன் இல்லாமையல்ல. Z-score புள்ளி எனும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியம மதிப்பீட்டளவின் வரையறையாகும். என்றாலும் மாணவர்கள் தங்களது முயற்சிகளை தளரவிடாது தொழில்நுட்பக்கல்லூரிகளில் தங்களுக்கு இயலுமான கலைகளில் கற்கைநெறியை பூர்த்தி செய்கிறார்கள். எதற்காக? எப்படியாவது ஓர் தொழில்வாய்ப்பை அரசிடம் அமைத்து கொள்ளவேண்டும். இதன் மூலம் தனது குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக. ஆனாலும் அதுவும் பல வருடக் கனவாகத்தான் செல்வது கவலையைத் தருகிறது.

இன்று இவ்வாறான சவால்கள் இல்லாமல் பட்டதாரிகள் மற்றும் இளம் சமுதாயத்தினருக்கு இச் சமூகத்தில் நல்ல தொழில் அனுபவத்துடன் நல்லதொரு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்தவகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டு கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தினால் ஒவ்வொரு வருடமும் மாணவர்களுக்கு உள்ளகப் பயிற்சிநெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் கலைக் கலாசார பீடத்தினால் அதன் பீடாதிபதி திரு.மு.ரவி மற்றும் நுண்கலைத்துறைத் தலைவரான சிரேஸ்ட விரிவுரையாளர் திரு.எஸ்.சந்திரகுமார் அவர்களின் தலைமையில் உள்ளக பயிற்சிக்கு அனுப்பப்பட்டேன். அந்தவகையில் என்னுடைய இவ்வுள்ளகப் பயிற்சியினை மட்டக்களப்பு கிராமிய தொழிற்துறை திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளர் திரு.கி.இளங்குமுதன் அவர்களின் வழிகாட்டலின்கீழ் மேற்கொள்ளக் கிடைத்தது.

இலங்கை துரித வளர்ச்சியடைவதற்கும் பொருளாதார அபிவிருத்தியடைவதற்கும் பல்வேறு துறைகள் பெரும் பங்கு வகிக்கின்றன எனலாம். அந்த வகையில் நாட்டின் பொருளாதாரத்துறை, விவசாயத்தறை, கைத்தொழில்துறை சேவைகள் என மூன்று பிரதான துறைகள் காணப்படுகின்றன. இவற்றில் கைத்தொழில்துறையானது பிரதான துறையாகவும் வேண்டப்படும் துறையாகவும் காணப்படுகின்றது. இக்கைத்தொழில் துறையானது சிறிய கைத்தொழில்கள், நடுத்தர கைத்தொழில்கள், பாரிய கைத்தொழில்கள் என வகைப்படுகின்றது. இன்றைய நவீன பொருளாதாரங்களில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் மிகவும் குறிப்பிடக்கூடிய பங்களிப்பை வழங்குகின்றன. அவ்வகையில் பிரதேச ரீதியான வளர்ச்சி செயற்பாடுகளிலும் இவை பிரதான இடம் பெறுகின்றன.

அந்தவகையில் இலங்கையில் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் துறைகளில் கிராமிய தொழிற்துறையும் ஒன்றாகும். தொழில் வாய்ப்பு, வாழ்வாதாரம், பொருளாதாரம் போன்றவற்றிற்கு பங்களிப்பு செய்கின்ற இத்துறையானது பாரம்பரியத்தையும், தேசிய மூலவளங்களையும், உள்நாட்டு தொழிநுட்பத்தையும் கட்டிக்காக்கும் அரும் பணியை செய்துவருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தின் கீழ் கல்லடி சரவணாவீதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்ட கிராமிய தொழிற்துறைத் திணைக்களம் இன்றுவரை தன் சேவையை மக்களுக்கு செய்துவருகின்றது எனலாம். அந்தவகையில் தும்பு, நெசவு, தச்சு மற்றும் மட்பாண்ட பயிற்சி நிலையங்கள் அத்துடன் அதன் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு விற்பனை நிலையங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் எனது உள்ளக பயிற்சியின் இரண்டாவது ஆய்வின் கருப்பொருளானது **"மட்டக்களப்பு நகரத்தை அடிப்படையாகக் கொண்டு நெசவுக் கைத்தொழிலும் தொழில் வாய்ப்புக்களும்"** ஆகும். இவ் ஆய்வின் ஊடாக நெசவுக் கைத்தொழிலை நான் கற்றுக்கொள்ளும் போது எவ்வாறான அனுபவங்களை பெற்றுக்கொண்டேன் என்பதனையும் அதனோடு சேர்ந்த வகையில் தற்காலத்தில் இத்துறை ஊடாக சமூகத்தில் எவ்வாறான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் பெற்றுக் கொள்ள முடியும் என்பது பற்றியதான வகையிலும் என் உள்ளகப்பயிற்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாவட்ட கைத்தொழில் வளாகத்தினுள் இரு நெசவு பயிற்சி நிலையங்களும், சாய நிலையம், வடிவமைப்பு நிலையம், தர மதிப்பீட்டு நிலையம், பாவோடல் நிலையம், பெறுமதி சேர் உற்பத்தி நிலையம், இயந்திர தறி உற்பத்தி நிலையம் என்பனவும் காணப்படுகின்றன. எனது உள்ளக பயிற்சியானது களுதாவளை பிரதான வீதியில் அமைந்துள்ள நெசவு நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இங்கு நெசவு பயிற்சிநெறிகள் தொடர்வதோடு பல்வேறு நெசவு சார்ந்த உற்பத்திகள் மற்றும் அதனோடு இணைந்த வகையில் நெசவு உற்பத்திகளை விற்பனைகள் மேற்கொள்ளும் விற்பனை நிலையமும் அமைந்துள்ளது. இதனால் வாங்குபவர்களுக்கு நெசவு உற்பத்தி தொடர்பான உறுதி தன்மையை இலகுவாக புரிந்து கொள்ளவும் அதன் நுகர்வுகளை உணர்ந்து கொள்ளவும் முடிகின்றது. இன்று மாவட்ட தொழிற்துறை திணைக்களம் சிறப்பான உற்பத்திகளை மக்களிடம் கொண்டு செல்ல பல்வேறு வகைகளில் பங்களிப்பினை செய்து வருகின்றது என்று கூறுவதில் எவ்வித ஐயமும் இல்லை என்றே கூறலாம்.

மனிதகுல வரலாற்றில் மனிதன் காட்டுமிராண்டியாக மிருகங்களோடு மிருகங்களாக காடுகளில் உணவுக்காக அலைந்திருந்தான். மிருகங்களில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மிருகங்களை வேட்டையாடுவதும் அவற்றினை உணவுக்காக பன்படுத்துவதுமாக வாழ்ந்து வந்தான். அப்போது அவனுக்கு ஆடைகள் உடுத்துவது பற்றிய சிந்தனை இருக்கவில்லை. காலப்போக்கில் ஆடைகள் பற்றிய எண்ணக்கரு தோற்றம் பெற்றபோது ஆடை தயாரிப்பது தொடர்பாகவும் சிந்திக்கத்தொடங்கினான். ஆரம்பத்தில் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்த மனிதன் இயற்கைப் பொருட்களைக் கொண்டு அதாவது மரத்தின் பாகங்களான பட்டைகளையும், இலைகுழைகளையும், தாவரத்தின் நார்களால் கோர்த்து முடிச்சுப்போட்டு உடுத்துவதற்கு தொடங்கினான்.

மனித நாகரிகத்தின் பரிணாமவளர்ச்சியில் ஆடைகள் பற்றி சிந்திக்க தொடங்கிய போதே ஆடை வடிவமைப்பு தொடர்பான எண்ணக்கருவும் தோற்றம் பெற்றது. நெசவுத்தொழில் நுட்பத்தின் அடி அத்திவாரமும் இங்குதான் இடப்படுகின்றது. தமிழர் வரலாற்றில் நெசவுத் தொழில் நுட்பத்தை ஒரு கலையாகவே தமிழர்கள் பாவித்து பின்பற்றிவந்துள்ளனர். பருத்தியில் இருந்து நூல் நூற்றலையும் கைத்தறியையும் தையலையும் பண்டைக்காலம் தொட்டே அறிந்திருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு மகாவம்சத்தில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த முதலாவது ஆரியக் குடியேறிகளாகிய விஜயனும் அவனது தோழர்களும் வருகின்றபோது குவேனி நூல் நூற்றுக்கொண்டிருந்தாள் என்னும் வரலாற்றுத் தகவல் கிடைக்கிறது. இது விஜயன் வருகைக்கு முன்பே இலங்கையில் நெசவு கைத்தொழில் பற்றிய அறிவு இருந்துள்ளதை வெளிப்படுத்துகிறது.

நெசவு தொழிலினை இன்றைய சிந்தனையில் எடுத்து நோக்குவோமாயின் இந்த நெசவுத் தொழிலின் மூலமாக இருவகையான துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றது.


இயற்கையான தாவர நார்களிருந்தும் விலங்கு நார்களிருந்தும் கிடைக்கப்பெறுகின்ற துணிவகைகள் செயற்கையான நார்களிருந்து கிடைக்கப்பெறுகின்ற துணிவகைகள்

இந்த அடிப்படையில் இயற்கையான நார்வகைகளை எடுத்து நோக்கும் போது பருத்திப்பஞ்சு, பட்டுச்சணல், விலங்குக்கம்பளி போன்ற நார்வகைகளை கொண்டு நவீன முறையில் நூல் நூற்று காலத்திற்கு ஏற்றவாறு துணி தயாரிக்கப்படுகின்றது. இவை முறையே பருத்திச்செடி, பட்டுப்பூச்சு, மரினா ஆடுகள் போன்றவற்றின் நார்களிருந்து எடுக்கப்பட்டு துணி தயாரிக்கப்படுகின்றது. இந்த நார்கள் சீனா, இந்தியா, எகிப்து, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, பிறேசில் போன்ற நாடுகளிலிருந்து கிடைக்கின்றன.

இன்று இலங்கையில் இந்த நெசவுத் தொழிலை நோக்கும் போது பல வழிகளிலும் அது விரிவாக்கம் பெற்று மரம் மற்றும் இயந்திர உதிரிப்பாகங்கள் கொண்டு மரத்தறிகளினாலும், மின்தறிகளினாலும் துணிகள் தயாரிக்கப்படுகின்றன. இத்தொழில் இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தின் ஒரு தொழிலாக இடம்பிடித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் பரம்பரை பரம்பரையாக செய்யப்பட்டுவருவதுடன் அவற்றுக்கு தனி மதிப்பும் கேள்வியும் இருந்து வருகிறது. அந்தவகையில் நெசவுத் தொழிலை எடுத்துக்கொண்டால் மருதமுனை மற்றும் அதை அண்டிய பாண்டிருப்பு, நீலாவணை போன்ற கிராமங்கள் தலைமுறை தலைமுறையாக இத்தொழிலை மேற்கொண்டுவருகின்றன. வருமானத்தை நோக்காக கொண்டதாக மட்டுமன்றி தங்களது நிரந்தர தொழிலை கைவிடாமல் பேணத்தக்கதாகவும் இக்கிராம மக்கள் நெசவு தொழிலையும் மேற்கொண்டுவருகின்றனர்.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மரத்தாலான தறி மற்றும் உபகரணங்களை பயன்படுத்தி இவர்கள் இத்தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். கைகள் மற்றும் கால்களை பயன்படுத்தி முழுவதுமாக மனித உடல் உழைப்பை கொண்டே நெசவு செய்யப்படுகிறது. இது நோய் நொடியற்ற அவர்களது ஆரோக்கிய வாழ்க்கைக்கு ஆதாரமாயும் அமைகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையில் இந்த தொழிலுக்கு அரசும் தனியாரும் முக்கியத்துவம் கொடுத்து இயங்கி வருகின்றனர். இன்று இதற்கென்று அரசாங்கம் அமைச்சுக்களை அமைத்து திணைக்களங்கள் ஊடாக பல மாவட்டங்களிலும் கிராமத்துக்கு கிராமம் நெசவு நிலையங்களை ஏற்படுத்தி மக்களுக்கு பல வழிகளிலும் பயிற்சியினை வழங்கி மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழிகாட்டி வருகின்றது. ஆண், பெண் என்ற பால் மற்றும் மத, இன வேறுபாடு இன்றி பொருளாதாரம், கல்வியறிவு மற்றும் வயது தடைகளிலும் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடித்து அனைவரும் கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி வழிகாட்டி வருகின்றது.

அந்தவகையில்தான் களுவாஞ்சிக்குடி நகருக்கு அண்மையிலுள்ள களுதாவளையில் மட்டக்களப்பு மாவட்ட தொழிற்துறை திணைக்களத்தின் வாயிலாக நெசவு நிலையமொன்று காணப்படுகிறது. இந்நெசவு நிலையம் ஆரம்ப காலகட்டங்களில் வருடத்திற்கு பத்து மாணவர்களுக்கு நெசவு பயிற்சியளித்து வந்துள்ளது. தற்போது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஐந்து மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. மேலும் இந்நிலையத்தில் ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களும் தறி மற்றும் உபகரணங்கள் இல்லாத பயிற்றப்பட்ட தொழிலாளர்களும் உற்பத்தியாளர்களாக வேலைசெய்து வருகின்றனர். இவர்களுக்கு உற்பத்தி அடிப்படையில் துண்டுவீத கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் ஜக்காட் இயந்திரப் பொறிகள் பொருத்தப்பட்ட தறிகள் கிராமிய தொழிற்துறை திணைக்களத்தினூயினுடாக இயங்கும் கல்லடி விசித்திர நெசவு நிலையத்தில் சிறப்பாக இயக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் நாடு பூராகவும் கல்லடி பெற்சீட், கல்லடி சாறி என்று பெயர் பெற்று விளங்கின. அந்த நிலைமை தற்போது மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வடிவமைப்பு நிலையத்தின் ஊடாக புதிய துணி வடிவமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. இங்கு ஹச்காட், வூல்வேர்க், லெனோவீவிங், பல்லு டிசைன், மிதி கூட்டல் பூடிசைன், பெத்தம்பிலி, தும்பரட்ட முதலிய தேசிய வடிவமைப்புக்களில் நெசவு செய்யப்படுகின்றன.

கைத்தறிபேட்டை நெசவு நிலையத்தினூடாக புதிய முயற்சிகளாக பருத்தி நூலிலான கால்சட்டை துணி, ரீசேட் துணி, சல்வார் துணி, ஸ்காப் துணி, முதலியவனவும் வடிவமைக்கப்பட்டு உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.மேலும் வெவ்வேறு அளவிலும் வடிவங்களிலும் பெட்சீட்கள், தலையணை உறைகள், சாறிகள், வேட்டிகள், சாறம்கள், சேட்துணிகள், சட்டைதுணிகள், சுவர் அலங்காரங்கள், தரை விரிப்புக்கள், மேசை விரிப்புக்கள், கதிரை விரிப்புக்கள், கைக்குட்டைகள், கைதுடைப்பான்கள், திரைச்சீலைகள், துவாய்கள் என்பன உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நான் பயிற்சியிலிருந்த பயிற்சிநெறிக்காலத்தில் நெசவுத்துறையில் பெற்றுக்கொண்ட அனுபவத்திற்கமைய சில விடயங்கள் இக்கட்டுரையின் வாயிலாக...

ஒரு காலத்தில் பருத்திப் பட்டு உள்ளிட்ட நூல்களில் இயற்கை சாயமேற்றப்பட்ட ஆடைகளே தயாரிக்கப்பட்டு வந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தயாரிக்கப்பட்டு வந்தகாலத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய வண்ணத்திலான ஆடைவகைகளே தயாரிக்கப்பட்டன. இது இயற்கையைப் பாதிக்காத வண்ணமும் இருந்தது. காலமாற்றத்திற்கேற்ப வாடிக்கையாளர்களின் பலதரப்பட்ட ரசனைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் பல வகையான வண்ணங்களில் ஆடைகள் தயாரிக்க வேண்டிய கட்டாயம் ஆடை உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பலவகையான இரசாயனங்களைக் கொண்டு செயற்கை முறையில் பல வண்ணங்களில் சாயங்கள் தயாரிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஆனால் இன்று ஆடை வடிமைப்பு, ஆடை உற்பத்தியுடன் தொடர்புடைய ஒருசாராரின் பார்வை மீண்டும் ஆரம்ப காலங்களின் இயற்கை சாயத்தையே நோக்கி நகர்கின்றது. இயற்கைச் சாயத் தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் தம் விரல் நுனியில் அறிவைக் கொண்டவர்களாக காணப்பட வேண்டும். இயற்கைச் சாயக்கலவையின் வெப்பநிலை கலவையாளர்களின் கையினாலும் சாயத்தின் Ph மதிப்பு நுகர்ந்து பார்ப்பதினாலும் உறுதிப்படுத்தி அறியப்படும். இயற்கைச் சாயத் தயாரிப்பைப் பொறுத்தவரையில் பொருத்தமான அளவான தட்ப வெப்பநிலை அவசியமாகின்றது. இயற்கை முறையில் சாயம் தயாரிப்பது என்பது மிகவும் கடினமான தயாரிப்புத் துறையாகும்.

**இயற்கை சாய உற்பத்தியும் இழைகளால் அவற்றை சேர்ப்பதற்குரிய படிமுறைகளும்**

- தேவைப்படும் வர்ணத்திற்குரிய இயற்கை மூலப்பொருட்களை தெரிவு செய்தல்
- தெரிவு செய்யப்பட்ட மூலப்பொருட்களை சிறுதுண்டுகளாக வெட்டிக் கொள்ளல்
- மூலப்பொருட்களை சூடேற்றுவதற்கு பொருத்தமான பாத்திரத்தில் அவற்றினைக் இட்டுக் கொள்ளல்
- குறித்த சாயம் அல்லது வர்ணம் அக்கலவையில் தோன்றும் வரை கொதிக்க வைத்தல்
- கொதிக்க வைத்த கலவையை வேறு ஒரு பாத்திரத்தினுள் வடித்தல்
- குறித்த வர்ணத்தினை பெறுவதற்கு மேலதிக பொருட்களை கலவையில் கலத்தல் உதாரணம் உப்பு, வினாகிரி
- கலக்கப்பட்ட கலவையை மீண்டும் சூடேற்றப்பட்டு சாயம் பெறப்பட்டட பாத்திரத்தினுள் நூலினை இட்டு உரிய வர்ணம் வரும் வரை அவித்தல்
- கையுறையைப் பயன்படுத்தி இழையை நன்றாக பிழிதல்
- பிழியப்பட்ட இழையினை நன்றாக உலரவைத்து பாவனைக்கு உட்படுத்தல்

இவ்வாறாக இயற்கை மூலப்பொருட்களைக் கொண்டு பெறப்படும் இயற்கைச் சாயத்துடன் மரங்களிலிருந்து கிடைக்கப்பெறும் பிசினைச் சேர்த்துக் கொள்ளும் போது ஒட்டும் தன்மை பெறப்படுகின்றது. இவை பெரும்பாலும் பட்டு நூல்களுக்கு போடப்பட்டு பட்டு நூலிலான ஆடை உற்பத்திகள் மெருகேற்றப்பட்டன. இருப்பினும் இயற்கைச் சாயங்களில் இருந்து மெல்லிய நிறம் மட்டுமே பெறமுடியும். அடர்நிறங்கள் பெறுவது என்பது சற்று சிரமமானதே.

அடுத்து நெசவுத் தொழிலின் முதன்மை செயற்பாடுகளுள் ஒன்று நூலுக்கான பாவோடும் செயற்பாடாகும். பாவோடும் நிலையம் அமைக்கப்பட்டு நெசவு தேவைகளுக்கான பாநூல் மரத்தாலான கைவிசையால் இயக்கப்படும் மற்றும் இரும்பாலான மின்சாரத்தில் இயங்கும் பாவோடும் இயந்திரங்களால் ஓடப்பட்டு வழங்கப்படுகின்றது. இதில் நூல் சுற்றும் பொறி, பொபின் நூல் சுற்றும் பொறி, பேண் நூல் சுற்றும் பொறி, அளவிடும் பொறி, நூல் சுற்றுச் சட்டகம், பாவோடும் பொறி முதலியன தேவையானவையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவோடல் செயற்பாடுகளின் முன் பொபினில் நூல் சுற்றியதன் பிறகு கிறிலில் நூல் சுற்றுகளை அடுக்கி ஒரு பாவுக்கு நூல் வேண்டுமென்றால் கிறில் அடுக்கி தயாரிக்கப்படும் துணியின் வடிவமைப்பிற்கு ஏற்றவாறு கிரிலிலிருந்து ஹெக் (பிணி அமைப்பதற்கு பயன்படுவது) அதிலுள்ள வயஹீல்ஸ் துவாரங்களூடாக நூல்களை இழுத்து வெளிக்கொணர்ந்து வாப்ரோலர் வரை கொண்டு சென்று வாப்ரோலரில் ஓர் அங்குல இடைவெளிகளில் காணப்படும் ஆணிகளில் முதலாவது ஆணியில் நூலைச் சுற்றி ஒவ்வொரு றிப்பீட்டாக நூல் ஓடப்படும். பின் ஓடப்பட்ட நூல்கள் வாப் வீமில் சுற்றப்படும். அத்துடன் நூல்களை இறுக்கமாகவும் அழுத்தமாகவும் நேர்த்தியாகவும் வரவேண்டும் என்பதற்காக அதனுள் இடையிடையே கடதாசிகள் வைக்கப்படும். வீம் பண்ணிய பிறகு தறியில் கொண்டு வந்து பாவோடியதை தறியில் பொருத்துதல் வேண்டும்.

தறியில் பொருத்தப்பட்ட வீமில் உள்ள பாவை ஹீல்ஸில் நூல்களை அளவெடுத்து கோர்த்தல் வேண்டும். அதாவது ஹீல்ஸ் 60 அங்குலம் என்றால் நாம் 40 அங்குலம் தான் பாவோடியது எனில் இருபக்கமும் ஹீல்ஸில் பத்துபத்தாக கழித்து விட்டு சமமாக ஹீல்சில் கோர்க்க வேண்டும்.

பின் ஹீல்ஸிலிருந்து நூலை றீற்றிற்குள் கோர்த்து எடுக்க வேண்டும். ஒவ்வொரு வகையான பாவுக்கும் ஒவ்வொரு வகையான செறிவு காணப்படும். இங்கு செறிவு என்பது ஒரு அங்குலத்தில் உள்ள நூல் அளவு ஆகும். உதாரணமாக ஒரு அங்குலத்தில் 40 நூல் போவது என்றால் நாம் எடுக்கும் றீட் இலக்கமும் 40 ஆக இருக்க வேண்டும். டபிள் பெற்சீட்க்கு அநேகமாக 48 ஆக இருக்கும். மேற்கூறியது போல் றீட்டில் கோர்த்து விட்டு பாவினை அழுத்தி ஒழுங்கமைத்தல் வேண்டும். தறியில் பாவைக் கோர்த்த பின்னர் லிவருடன் ஹீல்ஸினை இணைத்து கயிறுகளைக் கட்டி சிலையில் கைபிடியை கயிற்றால் இறுக்க வேண்டும். மிதிகளையும் கயிற்றால் இதனுடன் இணைக்க வேண்டும். இதில் இரண்டு மிதி பெரும்பாலும் வருவது பெட்சீட் தலையணை உறை என்பவற்றுக்காகும். நான்கு அல்லது ஆறு மிதிகளையும் வடிவமைப்பிற்கு ஏற்ப கட்டுவதுண்டு.

மேலே கூறிய அனைத்தையும் செய்ததன் பின்னர் பாவினை அழுத்தமாக இழுத்து தடியில் கட்டுதல் வேண்டும். நாம் தறியில் அடிக்கும் போது தறிக்கு கீழே காணப்படும் துணி வீம்மில் (க்ளோத் வீம்) துணிகள் சுற்றப்படும். பிறகு நமக்கேற்ற வகையில் அளவிற்கேற்ப துணிகளை வெட்டி எடுத்தல் வேண்டும்.

அன்றிலிருந்து இன்று வரை கை நெசவு, இயற்கை சாயம் போன்றவை உடலுக்கு கெடுதல் விளைவிக்காதவை. நாம் பழைமையைப் புறந்தள்ளி புதுப்புது தொழில்நுட்பங்களை நாடிய கணத்திலிருந்து இந்த பூமிபந்திற்கு தீங்கிழைக்க ஆரம்பித்து விட்டோம். இயற்கை சாய உற்பத்திகள் வேகமற்றவை மற்றும் செலவினங்கள் கூடியவையாக காணப்பட்டாலும் மிகவும் பாதுகாப்பினை மனிதனுக்கு வழங்குபவை என்பது உறுதியாக கூறக்கூடிய உண்மை. செயற்கை சாய உற்பத்தி சில நிமிடங்களில் நடந்து முடிந்து விடுகின்றன. ஆனால் அவை ஏற்படுத்தும் விளைவுகளும் விபரீதங்களும் அதிகம். வெளிநாட்டவர்கள் ஆடைத்தெரிவில் இயற்கைச் சாயங்களால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளையே அதிகம் நாடுகின்றனர்.

இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் எமது சந்ததியினருக்கு பரிசளிக்க வேண்டிய சூழலை செயற்கை செய்முறைகளால் செயலிழக்க விடாமல் ஆரம்பகாலந்தொட்டு வாழ்வதற்கு தேவையான நன்மைகளை மட்டுமே வழங்கும் இயற்கை செய்முறைகளால் பாதுகாப்பது நம் அனைவரது கடமையாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் அங்கமாகத் திகழும் ஆடைகளை இயற்கை தயாரிப்பு மூலமான வடிவமைப்புக்களாக நாடுவதன் மூலமாக தம்மை பாதுகாத்துக் கொள்வதுடன் இவ்வாறான உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்தியாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் உதவி செய்ய முடியும்.

கிழக்கிலங்கைக் கைத்தொழில்துறையின் ஒரு புதிய யுகத்தை கொண்டு வர வருடாவருடம் கண்காட்சிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில் சென்ற வருடத்தில் "மலரும் கிழக்கு 2018" திருகோணமலை கிராமிய தொழிற்துறை திணைக்களத்தில் இடம்பெற்றது. பாரம்பரிய கிராமிய தொழில் முறைமைகளில் புதிய புத்தாக்க முயற்சிகளையும் வடிவமைப்புக்களையும் நவீன நுட்பங்களையும் புகுத்துவதனூ டாக தேசிய மட்டத்தில் போட்டித்தன்மைமிக்கதாக இத் திணைக்களத்தின் உற்பத்தி பொருட்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்பதை இக் கண்காட்சி வாயிலாக அறியக்கூடியதாக இருந்தது. அத்துடன் ஜக்காட் மற்றும் இயந்திர தறிவகை உற்பத்திகள், பெறுமதி சேர் செயற்கை நார்வகை கலப்பு உற்பத்திகள் என்பவற்றையும் கிராமிய தொழிற்துறை திணைக்களத்தின் வாயிலாக தயாரித்து சந்தைப்படுத்தி வருகின்றமையை இக்கண்காட்சி வாயிலாக எனக்கு நேரடியாக உணரக்கூடியதாக இருந்ததது. நான் இக்கண்காட்சி ஊடாக நெசவு தொடர்பான பல அறியாத விடயங்களையும் மற்றும் செயன்முறைகளையும் அறியகூடியதாக இருந்தது.

**"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்"**

என்கிற முன்மொழிக்கமைய இத்திணைக்களத்தின் ஊடாக நெசவுக் கைத்தொழிலில் பெற்ற அனுபவங்கள், அதில் நான் கற்றுக்கொண்ட நுணுக்கங்கள் போன்றவை என் எதிர்காலத்தில் நிரந்தர தொழில் கிடைக்கும் வரைக்கும் என் சுயதொழில் முயற்சிக்கும் பெரும் வழிகாட்டியாக அமையக்கூடியதாகும். எனது பல்கலைக்கழக இறுதி ஆய்வானது "மாற்றுத்திறனாளிகளை உடல், உள ரீதியில் ஆற்றுகைப்படுத்தலும் கலை ஆக்க செயற்பாடுகளில் ஈடுபடுதலும் அதனால் எதிர்கொள்ளும் சவால்களும்." என்பதால் இத் திணைக்களத்தின் ஊடாக நான் கற்றுக்கொண்ட கைத்தொழில்களை அவர்களுக்கு கற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்பாக அமைவதோடு அவர்களை நிரந்தர வாழ்வாதார ரீதியில் உயர்த்துவதற்கு இத் திணைக்களத்தின் ஊடாக கற்ற விடயங்கள் எனக்கு கிடைத்த வரப்பிரசதாமாக அமைந்துள்ளது எனலாம்.

***

**சலீம் பாத்திமா ஷர்பின்.**
இறுதி வருட சிறப்பு
நுண்கலைத்துறை மாணவி.
கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரம்பரிய கைத்தொழில் முயற்சியாண்மையின் முக்கியத்துவமும் அதனைப் பாதுகாத்தலும்

இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் 52% வகிபங்கினை கைத்தொழில் தன்னகத்தே கொண்டுள்ளது. அவ்வாறே கைத்தொழில் முயற்சியாளர்கள் 75% தொழில் வழங்குநர்களாகவும் காணப்படுகின்றனர். இதன் மூலம் கைத்தொழிலின் முக்கியத்துவத்தை நாம் உணர முடிகின்றது. நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிப்பவர்களாக கைத்தொழில் முயற்சியாளர்கள் காணப்படுகின்றனர். எனவே தான் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமாயின் கைத்தொழில் முயற்சியாளர்களை பாதுகாத்தல் அவசியமாகின்றது.

தொழில் முயற்சியாளர்கள் பல்வேறு வகையில் பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். அந்தவகையில் நிதியினைப் பெற்றுக் கொள்ளல், மேலதிக பயிற்சிகளை பெற்றுக் கொள்ளல், நவீன இயந்திரங்களின் பயன்பாடு பற்றிய அறிவு, சர்வதேச ஏற்றுமதி சந்தையின் நவீன உத்திகளை கையாளல், போட்டித் தன்மை, சந்தைப்படுத்தல் சம்பந்தமான அறிவு போன்ற பல்வேறு சவால்களை அன்றாடம் எதிர்நோக்கி வருகின்றனர். எனவே தொழில் முயற்சியாளர்கள் எதிர் நோக்குகின்ற சவால்களை நாம் இனம் காண்பதனூடாக அதனைத் தீர்த்து வைத்தல் அவசியமாகின்றது.

இலங்கையின் அந்நியச்செலாவணியை பெற்றுத்தருகின்ற பாரிய கைத்தொழிலாக தேயிலை, இறப்பர், ஆடை உற்பத்தி, ஆபரணக்கல், அலங்கார தாவரங்கள், மலர்கள், மட்பாண்டங்கள் (Ceremics) மற்றும் உணவு உற்பத்தி (Biscuits, Jam, Cashew) போன்றன காணப்படுகின்றன. அவ்வாறே நடுத்தர அளவிலான கைத்தொழிலாக அலங்கார பொருட்கள், பனை உற்பத்திப் பொருட்கள், அலங்கார மீன்கள், தும்பு சார்ந்த உற்பத்திகள், ஆயுள்வேத மருந்துப்பொருட்கள், மரக்கறி பதனிடல், மற்றும் பழங்கள், போன்றன காணப்படுகின்றன. எனினும் இத்துறை மூலம் அதிகளவான அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய தொழிலாக முன்னிலை வகிபாகம் கொண்டு கைத்தறி நெசவு உற்பத்தி காணப்படுகிடுகின்றது. அதனைத் தொடர்ந்து மட்பாண்ட உற்பத்தி, பிரம்புக் கைத்தொழில், பன்புல் உற்பத்தி (Mat weaving, mat caps), வெண்கல உருக்கு உற்பத்திகள், மரச்சிற்ப உற்பத்தி போன்றன பன்நெடுங்காலமாக குடிசைக் கைத்தொழிலாக காணப்பட்டு வருவது இங்கு குறிப்பிட்டுக்கூறக்கூடிய விசேட அம்சமாகக் கொள்ளப்படுகின்றது. எனினும் இக்குடிசைக் கைத்தொழில் தமக்கென்ற ஒரு இடத்தை தன்னகத்தே கொண்டிருந்தாலும் தற்போது அருகி வரும் தொழிற்துறையாகவும் காணப்படுகின்றது. காலத்தினால் ஏற்பட்ட பல்வேறு சூழல் காரணிகள் (சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு) காரணமாகவும் உள்நாட்டு யுத்தம் காரணமாகவும் மக்களின் மனநிலை மாற்றம் காரணமாகவும் நவீனத்துவ இலகுமுறை இயந்திரப் பாவனை காரணமாகவும் ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த இளம் சந்ததியினருக்கு கொண்டு செல்வது பாரிய சவாலாகவே காணப்படுகின்றது.

எனினும் இக்குடிசைக்கைத் தொழிலைப் பாதுகாத்து இளம் சந்ததியினருக்கு புதுப்பொலிவுடன் கையளிப்பது எமது பாரிய பொறுப்பாகும். இதற்காகவே அரசாங்கம் தமது திட்டங்களினூடாக கிராமிய தொழிற்துறைத் திணைக்களம், தேசிய அருங்கலைகள் பேரவை, சிறுகைத்தொழில் முயற்சி அமைச்சு மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை போன்ற பல்வேறு திணைக்களங்களூடாக தொழில் முயற்சியாளர்களை பாதுகாத்து வருவதுடன் பல சிறப்பான திட்டங்களையும் விரிவுபடுத்தியுள்ளது.

எமது மட்டக்களப்பு மாவட்டம் ஏனைய மாவட்டங்களைப் போலன்றி அனைத்து வளங்களையும் தன்னகத்தே கொண்டதொரு மாவட்டம் ஆகும். எனினும் இங்குள்ள தொழில் முயற்சியாளர்களை வழிநடாத்திச் செல்வதற்கு கைத்தொழில் உத்தியோகத்தர்கள் முன்வரவேண்டும். அத்துடன் அரசாங்கமும் அவர்களுக்கான உதவிகளை செய்து அவர்களை வளப்படுத்தி நாட்டின் பொருளாதரத்தை அதிகரிப்பதனூடாக சிறப்பான ஒரு நாட்டை எமது எதிர்கால சந்ததியினர்க்கு கையளிப்பது எமது தலையாய கடமையாகும்.

இந்த வகையில் சிறப்பானதொரு வகிபாகத்தை கிராமிய தொழிற்துறைத் திணைக்களம் ஆற்றிவருவது வரவேற்கத்தக்க விடயம் ஏனெனில் கிராமமட்ட தொழிற்துறையைப் பேணிக்காத்தல் மற்றும் அத்தொழில் புரிவோருக்கான பயிற்சிகள் வழங்குதல், அத்துடன் பயிற்சிக்கால கொடுப்பனவுகள் வழங்குவதன் மூலம் மேலும் ஊக்கப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் இளம் சமுதாயத்தினரிடம் கையளிக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்க விடயம் ஆகும்.

***

**திருமதி.கீதா சுதாகரன்**
மாவட்ட இணைப்பாளர்
தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை
கைத்தொழிலும் வர்த்தகமும் அமைச்சு
மாவட்ட செயலகம்
மட்டக்களப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களை பயன்படுத்தி மனிதருடைய தேவையை நிறைவு செய்வதற்கு மனித தலையீட்டினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார முயற்சி கைத்தொழில் எனப்படுகின்றது.

பொதுவாக "உயிரியல், சேதன, அசேதனப் பொருட்களை இரசாயன அல்லது பொறி முறை மூலமாக மாற்றி புதிய வடிவில் பொருட்களை உற்பத்தி செய்யும் இயந்திரங்களை பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்தல், ஆளணிகளைக்கொண்டு உற்பத்தி செய்து சில்லறையாகவோ, மொத்தமாகவோ விநியோக நடவடிக்கையில் ஈடுபடுதல் கைத்தொழில் ஆகும்" என ஐக்கிய நாடுகள் சபை வரைவிலக்கணப்படுத்தியுள்ளது.

இலங்கை விவசாய பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்ட ஒரு நாடாகும். ஆனால் பல கைத்தொழில் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. இலங்கையில் கைத்தொழில் நடவடிக்கைகள் 1978ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஓரளவு விவசாயத்திற்கு அடுத்த ஒரு பொருளாதார நடவடிக்கையாக இன்று வரை காணப்படுகின்றது.

## இலங்கையின் சிறு கைத்தொழில்களும் அவற்றின் அண்மைக்கால போக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பொருளாதாரத்தில் ஆரம்ப காலம் முதல் செல்வாக்கு செலுத்தும் முக்கியமான ஒன்றாக சிறு கைத்தொழில் அல்லது பாரம்பரிய கைத்தொழில் காணப்படுகின்றது. இதன் படி சிறிய கைத்தொழில் என்பது பெரும்பாலும் சூழலில் பெறப்படுகின்ற மூலப்பொருட்களை அடிப்படையாக கொண்டு வீடுகளில் அல்லது சிறிய நிலப்பரப்பில் சிறியளவு மூலதனத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற கைத்தொழிலாக உள்ளது. அதனடிப்படையில் இலங்கையில் காணப்படும் சிறு கைத்தொழில் வகைகளாக

1. மட்பாண்ட உற்பத்தி
2. பாய் பின்னல்
3. பாரம்பரிய ஓவியம் மற்றும் சிற்பங்கள்
4. முகமூடி செய்தல்
5. கைப்பணிப் பொருட்கள் செய்தல்
6. அலங்காரப் பொருட்கள் செய்தல்
7. விளையாட்டு பொருட்கள்
8. கைத்தறி மற்றும் சிறியளவிலான தளபாட உற்பத்திகள்

போன்றன உள்ளன.

**<u>கைப்பணிப்பொருட்கள்</u>**

பலவிதமான பயனுள்ள வேலைகள் மற்றும் அலங்காரப்பொருட்கள் அதிகளவு கைகளாலேயே இயக்கப்படுகின்ற சில வகை எளிய கருவிகளை பயன்படுத்தி செய்யப்படுகின்றது. இது பல்வேறு வயைான படைப்பாற்றல் மற்றும் வடிவமைப்பு நடவடிக்களை உள்ளடக்கியது. இவை அதிகளவு செய்யப்படும் இடங்களாக குண்டசாலை, காலப்புர, எப்பக்க, வேவல்தெனிய போன்றவற்றை குறிப்பிடலாம்.

**<u>மட்பாண்ட உற்பத்தி</u>**

இலங்கையில் காணப்படும் பழமையான கைத்தொழில்களில் மட்பாண்டம் ஒன்றாகும். மட்பாண்டம் அலங்காரப்பொருளாகவும், சமையல் உபகரணங்கள் என்ற வகையிலும் உள்ளன. களி மண் தொட்டி பூச்சாடி, குவளை, பொம்மைகள் போன்றன களி மண்ணால் செய்யப்படுகின்றன. பொதுவாக பாரம்பரியத்தை விரும்பும் மக்கள் மட்பாண்ட உபகரணங்களை அதிகளவு பயன்படுத்துகின்றனர். மட்பாண்ட உற்பத்திகளானது செய்யப்படும் இடங்களாக பொலகொட, அநுராதபுர, பொலன்னறுவை, பிலிமத்தலாவா போன்றன காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமூடி கைதொழில்

இவை இலங்கையின் நாட்டுப்புற அறிவியலுடன் ஆழமாக இணைந்துள்ளன. இலங்கையில் காணப்படும் சிறிய கைத்தொழில்களில் இதுவும் ஒன்றாகும். இக்கைத்தொழில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை கவர்கின்ற அம்சங்களாக உள்ளது. முகமூடியானது மூதாதையர்கள் வழிப்படும் சில ஆன்மீக சடங்குகள் மற்றும் சிகிச்சை முறை விழாக்களிலும் பயன்படுத்தப்படுவதுடன் நாட்டுப்புற நடனங்கள் பாரம்பரிய நடனங்கள் போன்ற நிகழ்வுகளிலும் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. இவை மேற்கொள்ளப்படும் முக்கிய இடங்களாக அம்பலாங்கொடையும் அதனை அண்டிய பகுதிகளிலும் காணப்படுகின்றன.

இலங்கையில் சிறு கைத்தொழிலுக்கு சாதகமான காரணிகளாக பௌதிக மற்றும் பண்பாட்டு காரணிகள் பக்கபலமாக இருகின்றன.

**மூலப்பொருள் வசதி:-** பாரம்பரிய கைத்தொழில் விருத்தியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளில் மூலப்பொருள் இன்றியமையாததாகும். பெரும்பாலும் மூலப்பொட்கள் சூழலிருந்து இலகுவாகப்பெறப்படுவதுடன் சில பொருட்கள் இறக்குமதியும் செய்யப்படுகின்றன.

**தொழிலாளர் வசதி:-** பயிற்றப்பட்ட தொழிலாளருடன் குறிப்பாக அயல் பகுதிகளில் இருந்தோ அல்லது தமது குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்தோ தொழில்களை மேற்கொள்கின்றனர். வீட்டு வேலை செய்து கொண்டே கைத்தொழில் ஈடுப்படுவதால் பெண்களுக்கு அதிக பங்களிப்பு செய்ய முடியும்.

**சந்தை வசதி:-** சுற்றுலாத்துறை விருத்தி போன்ற காரணங்களால் சிறு கைத்தொழிலுக்கு உள்நாட்டு வசதி காணப்படுகின்றது. வருடாந்தம் கண்காட்சி விருதுகளை வழங்கல், பயிற்சி என்பவற்றினுடாக ஊக்குவிப்புக்கள் நடைபெறுவதனால் தரமான கைப்பணிப்பொருட்கள் சந்தைக்கு வழங்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக உட்கட்டமைப்பு வசதி, அரச கொள்கை, கைத்தொழில்களுக்கு அறிவு, இயந்திர வசதி, முகாமைத்துவ திறன் போன்றனவும் இலங்கையின் சிறு கைத்தொழிலுக்கு சாதகமாக அமையும் காரணிகளாகவுள்ளது.

**பல்வேறு கடன் வசதிகளை நடைமுறைப்படுத்தல்:-** சமுர்த்தி வங்கி கிராமிய வங்கி ஆகியவற்றினூடாக அரசு சிறுகைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கு கடன் வசதிகளை வழங்குகின்றது.

- வரிகளை குறைத்தல்
- வரவு செலவு திட்டத்தில் சிறுகைத்தொழில் துறைக்காக குறிப்பிட்ட தொகையை ஒதுக்கீடு செய்தல்.
- சர்வதேச வர்த்தக கண்காட்சிகளில் இலங்கையின் சிறுகைத்தொழில் பொருட்களை காட்சிப்படுத்த நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஊழியர் பயிற்சி திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்ற பல விடயங்கள் உள்ளன. எனவே இலங்கையை பொறுத்தமட்டில் இலங்கைக்குரிய பொருளாதாரத்திற்கு தேசிய பங்களிப்புச்செய்யும் பட்டியலில் கைத்தொழில் இரண்டாம் இடத்தில் உள்ள அதேவேளை அவற்றில் சிறுகைத்தொழிலின் பங்கும் பாரியது. எனவே இலங்கையில் கிராமிய ரீதியாக மக்களை வலுப்படுத்த சிறுகைத்தொழில் செயன்முறையானது பாரிய பங்களிப்பினை வழங்குவதாக உள்ளது.

கைத்தொழில் தொடர்பான செயற்பாடுகள் 2015 இல் பதிவு செய்யப்பட்ட 2:1சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2016இல் 6.7 சதவீதமாகக் குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்தன. இதே வேளை கைத்தொழில் துறையுடன் வியாபார தோற்றப்பாடு, அளவீட்டின் துணைச் சுட்டெண்கள் பெரும்பாலும் ஆண்டு முழுவதும் சாதமாக காணப்பட்டன. இலங்கையின் தேசிய உற்பத்தியில் ஏறத்தாழ 12% கைத்தொழிலிக்குரியதாகும்.

## இலங்கையின் சிறுகைத்தொழிலானது பொருளாதாரத்திற்கு இன்றியமையாததாக இருப்பதற்கான காரணங்கள்

1. இலங்கையின் பொருளாதாரம் ஆரம்பத்தில் இருந்தே பாரம்பரிய கைவினை உற்பத்தி கைதொழில்களுக்கு முக்கிய இடம் கிடைத்துள்ளமை

2.**வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்:-** சிறுகைத்தொழிலானது கிராமிய மட்டத்தில் வேலையற்றவர்களுக்கு அதிகளவான வேலைவாய்ப்புக்களை உருவாக்குகிறது. வீட்டில் வேலை செய்து கொண்டே பெண்களும் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளையும் வழங்குகின்றது

03.**வறுமை நிலைமை குறைவடைதல்:-** இக்கைத்தொழிலானது அதிகளவு வேலைவாய்ப்புகளை வழங்குவதால் அதிகமானவர்களுக்கு வருமானத்தை பெற்றுக்கொள்ளல்.

04.**வளங்களை பூரணமாகப் பயன்படுத்தல்:-** சூழலிலுள்ள வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்துவதால் சூழலில் கழிவாக ஒதுக்கப்பட்ட பொருட்களும் பெறுமதிவுடையதாக மாறுவதால் வருமானமும் கூடுகின்றது.

05.**கிராம நகர பிரதேசங்களுக்கிடையில் சமமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல்**:- கிராம மக்களின் சிறுகைத்தொழிலானது அதிக வருமானத்தை கொடுக்கும் பட்சத்தில் நகர மக்களின் பொருளாதார நிலைக்கு ஏற்ப உயர வாய்ப்புள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06.முயற்சியாண்மை விருத்தி செய்யப்படல்.

07.வெளிநாட்டு செலாவணிப் பற்றாக்குறையைக் குறைத்தல்.

08.அரசின் பொருளாதாரச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல் போன்றன காணப்படுகின்றன. மேலும் 2014இல் சிறுகைத்தொழில் துறையின் மூலம் 2.5% பொருளாதார வளர்ச்சி காணப்பட்டுள்ளதுடன், பாரியளவு அந்நியச் செலாவணியையும் ஈட்டக் கூடியனவாகவும் உள்ளது.

இக்கைத்தொழில் உற்பத்திகள் உல்லாசப் பயணிகளின் ஈர்ப்பினைப் பெற்றுக் கொள்வதோடு, இதன் மூலம் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாகியுள்ளது.

**இலங்கையின் சிறு கைத்தொழில் துறையின் அண்மைக்காலப் போக்குகள்:**

1. சுற்றுலாப் பிரச்சினைக்குத் தீர்வாக சிறு கைத்தொழில் அமைதல்.
2. இக்கைத்தொழில் சூழலுடன் சேர்கின்ற கழிவுப் பொருட்கள், அசுத்தமான வாயுக்களைக் குறைக்கின்றது.
3. பொருட்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்துதல், சூழலுடன் இணைந்த பொருள் உற்பத்தி என்பவற்றால் இக்கைத்தொழில் அண்மைக் காலத்தில் விருத்தியடைதல்.
4. அண்மைக் காலங்களில் நவீன தொழில்நுட்பம், நவீன முறைகள் சிறுகைத்தொழிலில் பயன்படுத்தப்படுகின்றமை.
5. கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு நவீன பரம்பரைக்கு விருப்பின்மையால், சில இடங்களில் கைத்தொழில் வீழ்ச்சியடைதல்.
6. அரசினால் சிறுகைத்தொழில் பொருட்களுக்காக சந்தை வசதிகள், கடன் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே இவ்வாறாக பல விடயங்கள் உள்ளன.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஓரளவிலேனும் பங்காற்றுவதாக இலங்கையின் சிறு கைத்தொழில் காணப்படுவதுடன், அவற்றின் மூலமாக மேலும் அதிகமான வருமானத்தை அதிகரிக்க அரச மற்றும் தனியார் துறைகள் முன்வர வேண்டும்.

***

**Sahabdeen Sahoorkhan**

Temporary Assistant Teacher

Ward No – 01 Iqbal Nagar Nilaveli , Trincomalee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில் விருத்தி

## திருகோணமலை மாவட்டம்



வளங்களை பயன்படுத்தி மனிதனுடைய தேவையை நிறைவு செய்வதற்கு மனித தலையீட்டினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார முயற்சி கைத்தொழில் என வரைவிலக்கணப்படுத்தலாம். மேலும் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட பரந்த வளர்ச்சியே கைத்தொழில் அபிவிருத்தி எனப்படும்.

ஆரம்ப காலத்தில் விவசாயத்தை மையமாக கொண்டு விளங்கிய எமது பொருளாதாரமானது இன்று கைத்தொழில் துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதை அவதானிக்க முடியும். இலங்கையின் கைத்தொழில் துறையினைப் பல பிரிவுகளாக பாகுபடுத்தலாம். செயற்பாடுகளின் அடிப்படையில் மூலப்பொருள் அகழ்வு, உற்பத்தி, சேவை எனவும், கைத்தொழில் உற்பத்திகளின் மூலதனம் முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டு பேரளவு கைத்தொழில், இடைநிலை கைத்தொழில், சிற்றளவு கைத்தொழில் எனவும் பாகுப்படுத்தலாம்.

இலங்கையில் முக்கியத்துவம் பெறுகின்ற கைத்தொழில்களாக சீமெந்து கைத்தொழில், சீனிக் கைத்தொழில், காரீயக் கைத்தொழில், பீங்கான் கைத்தொழில், இலத்திரனியல் கைத்தொழில், பெற்றோலிய இரசாயனக்கைத்தொழில், மோட்டார் வாகன கைத்தொழில், படகு கட்டும் கைத்தொழில், உணவு பான வகைகளுடன் தொடர்புடைய கைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில், சுற்றுலாக் கைத்தொழில் ஆடைக் கைத்தொழில் மற்றும் நிர்மாணக் கைத்தொழில் என்பவற்றை குறிப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் திருகோணமலை மாவட்டத்தில் பிரசித்தி பெறும் கைத்தொழில்களை பற்றி ஆராய்வோமானால் முதலிடம் பெறுவது மீன் பிடி கைத்தொழிலும் படகு கட்டும் கைத்தொழிலுமாகும். மக்களின் அன்றாட உணவுத் தேவையினை பூர்த்தி செய்வதனால் மீன் பிடி கைத்தொழிலானது முக்கியம் பெறுகின்றது. திருகோணமலையானது மீன்பிடி கைத்தொழிலுக்கு சாதகமான காரணிகளை கொண்டு காணப்படுகின்றது. மீன்பிடி கைத்தொழிலானது வேலை வாய்ப்பினையும், அந்நிய செலாவணியையும் பெற்றுக் கொடுகின்றது. திருகோணமலை துறைமுகமும், கடற்கரைகளும் இதற்கு மூல காரணமாக அமைகின்றன. அரசு மீன்பிடி நடவடிக்கைகளை மேம்படுத்த பல்வேறு பயிற்சிகளையும், வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குகின்றது.

படகு கட்டும் கைத்தொழில் உல்லாசப் பிரயாணத் துறையின் வளர்ச்சி, மீன்பிடிச் செயற்பாடுகளின் விரிவாக்கம் காரணமாக நடுத்தர அளவுப்படகுகள், சிறிய படகுகள் என்பவற்றின் கேள்வி உள்நாட்டில் அதிகரித்துள்ளது. நாட்டில் நவீன படகு கட்டுதலில் பாரம்பரிய அனுபவத்தினைப் பயன்படுத்தி உயர்தரமான படகுகள் கட்டப்படுகின்றன. இப்படகுகளிற்கு வெளிநாடுகளிலும் கேள்வி அதிகரித்துச் செல்கின்றது. வெளிநாட்டுச் சந்தைகளுக்கான படகுகளை உற்பத்தி செய்வதற்காகவும், வெளிநாடுகளில் சந்தைப்படுத்துவற்காகவும், வருவாயினை ஈட்டிக்கொள்வதற்காகவும் அரசு கப்பல் கட்டும் கைத்தொழிலை வளர்க்கின்றது.

இலங்கையின் கைத்தொழில்களில் சீமெந்து கைத்தொழில் முக்கியமானதொன்றாகும் டோக்கியோ சீமெந்து ஆலையானது திருகோணமலையில் (சீனக்குடா) அமைந்தள்ளது. இவ் ஆலை சீமெந்து உற்பத்தியின் பிரதான மூலப்பொருளான சுண்ணக்கல்லை யாழ்ப்பாணம், புத்தளம் மற்றும் சிலாபம் போன்ற பகுதிகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது. மேலும் போக்குவரத்து வசதியானது துறைமுகங்கள் மற்றும் உள்நாட்டு வீதி வலையமைப்பு வசதியுடன் பெறப்படுகின்றது. கடல் வழி மூலம் மூலப்பொருட்களை ஏற்றியிறக்குவதற்கும், முடிவுப்பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் திருகோணமலைத் துறைமுகம் வசதி அளிக்கின்றது. மேலும் திருகோணமலையின் பிரசித்தி பெற்ற பெருந்தெருக்களின் தன்மையும் இலகுவாக மூலப்பொருட்களை கொள்கலன்கள்மூலம் பெற்றுக் கொள்வதற்கும், அம் மூலப்பொருட்களை நாட்டின் பல பாகத்திற்கும் எடுத்துச் செல்வதற்கும் துணை புரிகின்றது.

கைத்தொழில் விருத்தியானது கைத்தொழில் துறையின் பிரிவுகளின் வளர்ச்சியினால் ஏற்படுகின்றது. எனவே திருகோணமலை மாவட்டத்தின் கைத்தொழில் அபிவிருத்தியானது இந்நிலையிலேயே காணப்படுகினறது. இவ்அபிவிருத்தியானது உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்தி, தொழில் நுட்ப அறிவு வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக ஏற்பட்ட விருத்தியாகும். இலங்கை மக்களின் அன்றாட உணவுகளில் சீனியும் முக்கியமாக காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேநீர், இனிப்பு பண்டங்கள், விசுகோத்து(பிஸ்கட்) அணிச்சல் (கேக்) முதலிய பல உணவுகளில் சேர்க்கப்படுகின்றது. சீனி கைத்தொழிலானது திருகோணமலையில் கந்தளாய் பிரதேசத்தில் நடைபெறுகின்றது. இதற்கு திருகோணமலையில் காணப்படும் கரும்பு வயல்கள் மூலப்பொருளை வழங்குகின்றது.


அதே போல் (பாாரம்பரிய கைவினை) குடிசை கைத்தொழிலானது திருகோணமலையில் பிரசித்தி பெற்றுக்காணப்படுகின்றது. தென்னை மற்றும் பனைசார் கைப்பணி பொருட்களிற்கான மூலப்பொருட்களை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும் என்பதே இதற்கு காரணமாகும். இதற்கான பண வசதிகள் சமுர்த்தி வங்கி அல்லது கிராமிய வங்கிகள் மூலம் வழங்கப்படுகின்றது. அத்துடன் கைவினைஞர்கள் ஊக்குவிப்பதற்கும், தற்கால போக்குக்குகேற்ப பயிற்சிகளை வழங்கி அவர்களின் உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்தி சிறந்த சந்தை வாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் முகமாகவும் தேசிய அருங்கலைகள் பேரவையினால் பலவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமை ஒரு முக்கியமான விடயமாகும். மேலும் அலங்கார கைவினைப்பொருட்கள் மற்றும் பாரம்பரிய கைவினைப் பொருட்களின் வருடாந்த கண்காட்சி. விருதுகள் வழங்கல் மற்றும் பயிற்சி நெறிகள் போன்றவற்றினுடாக ஊக்கவிப்பு வழங்கப்படுவதாலும் தரமான கைவினைப்பொருட்கள் சந்தைக்கு வழங்கப்படுகின்றது. சுற்றுலாத்துறை விருத்தியினாலும் இதற்கான சந்தை வாய்ப்பு உருவாகின்றது.


இலங்கையின் உணவு மற்றும் பான வகைகள் உற்பத்தியும் செயற்பாடுகளும் திருகோணமலையிலும் பரவிக்காணப்படுகின்றது. இக் கைத்தொழலில் முதலிட ஏராளமான முதலீட்டாளர்கள் ஊக்கிவிக்கப்படுகின்றனர். இவை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான குடிசைக் கைத்தொழிலிருந்து பெரியளவிலான கைத்தொழில் வரை விரிவடைந்து காணப்படுகின்றது. இது போன்ற கைத்தொழில்கள் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்துக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. பொதி செய்யப்பட்ட உணவு மற்றும் பானங்களுக்கான கேள்வி படிப்படியாக அதிகரித்து வருகின்றது. நுகர்வோரின் கொள்வனவு சக்தி அதிகரித்தமையும் இந்தப்பொருட்களின் கேள்வி அதிகரிப்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக குளிர்பானம், உடனடி உணவு, பாலுற்பத்தி, மூலிகை உற்பத்தி, விசுகோத்து, (பிஸ்கட்) மற்றும் வெதுப்பக உற்பத்திகளை கூறலாம்.

இலங்கையில் திருகோணமலைக்கு வரும் உல்லாசப்பிரயாணிகள் தொடர்பான நீண்ட கால வரலாறு உண்டு. பல்வேறு உல்லாசப்பயணிகளால் எழுதப்பட்ட குறிப்புகள் தொடர்பான அறிக்கைகள் மூலம் இலங்கை புராதன காலம் தொட்டு அழகான நாடு மற்றும் இயற்கை வளங்கள் மற்றும் கண்கவர் காட்சிகள் நிறைந்த நாடு என இனங்காணப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org








இலங்கை மரபுரிமை, உபசரிக்கும் பாரம்பரியம், கருணை போன்ற பண்புகளால் பலவற்றை தன்னகத்தே கொண்ட நாடு எனப் பெயர் பெற்றுள்ளது. திருகோணமலையானது இயற்கை துறைமுகத்தையும், நிலாவெளி கடற்கரை, உல்லாச விடுதிகள், பளிங்கு (மாபிள்) கடற்கரைகளையும் தன்னகத்தே கொண்டு காணப்படுவதால் சுற்றுலா கைத்தொழிலும் திருகோணமலையில் அபிவிருத்தியடைந்தது காணப்படுகின்றது.

மேலும் திருகோணமலையானது கைத்தொழில்களின் திறவு கோலாக கருதப்படுகிறது. திருகோணமலையின் இயற்கை துறைமுகமானது உலகிலேயே 5வது மிகப்பெரிய இயற்கைத்துறைமுகமாகக் காணப்படுவதுடன் ஆசியாவிலேயே 1வது மிகப்பெரிய இயற்கைத் துறைமுகமாகவும் விளங்குகின்றது. தொடர்ச்சியாக மிகப்பெரியளவிலான பொருட்களை ஏற்றியிறக்குமிடமாகவும் இது விளங்குகின்றது. பல விதமான பொருட்களை ஏற்றியிறக்கும் ஒரு முக்கியமான துறைமுகமாக திருகோணமலை இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ளது என்பதனை பின்வரும் வரைபடம் மூலமாக விளங்கிக்கொள்ளக் கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




திருகோணமலை மாவட்டத்தின் கைத்தொழில் அபிவிருத்தியானது சுற்றுலா துறை விருத்தியாலும். உட்கட்டமைப்பு வசதி விருத்தியாலும் மூலப்பொருட்கள் காணப்படுவதுதாலும் நுகர்வோர் கொள்வனவு சக்தி அதிகரிப்பினாலும் மற்றும் ஊழியர்கள் தரமானவர்களாகவும், பயிற்சியளிக்கப்பட்டவர்களாகவும் காணப்படுவதாலும் நிலைத்திருகின்றது. எனவே திருகோணமலை சிறந்த கைத்தொழில் நிலவுகின்ற நகரமாக விளங்குகின்றது.

***

**Mohammed Anas Pumaidiya**

Samurdhi Development Officer

District Secretariat, Kachcheri

Trincomalee



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விசேட காலங்களிற்கு ஏற்ற விதத்தில் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்தலும் சந்தைப் படுத்தலும் (நெசவு)

இன்றைய நவீன காலத்தில் நாகரீகத்தில் மக்கள் புழங்கிக் கொண்டிருந்தாலும் முன்னைய காலத்தின் கைத்தொழில் உற்பத்தி பொருட்களின் தேவைகளையும் முக்கியத்துவத்தையும் அறிந்துள்ளனர். எவ்வாறாக நாகரீகம் வளர்ச்சி பெற்றாலும் தற்போதைய சூழலியல் மாற்றத்தினால் கைத்தறி உற்பத்திப் பொருட்களை விரும்பி நாடுகின்றனர். அதிலும் விசேட காலங்களில் அதாவது உதாரணமாக வெசாக், சிங்கள, தமிழ் புதுவருடப் பிறப்பு, தைப் பொங்கல், நத்தார் மற்றும் தீபாவளி போன்ற பண்டிகைகளில் நுகர்வோர் அதிகமாகவே நுகர்வுகளை மேற்கொள்கின்றனர். இதன் மூலமாகவும் கைத்தறி உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி அதிகமாகவே காணப்படுகின்றது.

இக்காலகட்டத்தில் கைத்தொழிலில் கைத்தறி (நெசவு) முக்கிய இடத்தினை வகிக்கின்றது. கைத்தறியின் மூலமாக ஆண், பெண்களுக்கான ஆடைகள், வீடுகளுக்குத் தேவையான திரைச்சீலைகள், போர்வை விரிப்புகள், அலங்காரப் பொருட்கள், கைப்பைகள், தலையணை உறை என பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்படுகின்றது.

இவற்றின் உற்பத்தியினை விசேட காலங்களில் விரைவாகவும் அதிகமாகவும் மேற்கொள்ள வேண்டும். அதாவது நுகர்வோரின் விருப்பத்திற்கேற்ப பல வர்ணங்களிலும் வடிவங்களிலும் உற்பத்தி மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்த பல வருடங்களின் கைத்தறி உற்பத்தியின் நுகர்வு அதிகரிப்பையும், பொருட்களின் கேள்வியையும் கணிப்பிட்டு தரவுகளின் அடிப்படையில் பார்த்தால் விஷேட காலங்களில் கைத்தறி உற்பத்திக்கான கேள்வி மற்றும் நுகர்வு அதிகமாகவே காணப்படுகின்றது. அவற்றை கருத்திற் கொண்டு உற்பத்தி அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நவீன யுகத்தின் வளர்ச்சியினால் பொருளாதாரத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் பல நவீன முறைகளை கையாள்வதன் மூலம் உற்பத்தியின் தரம் அதிகரித்துள்ளது. இதன் மூலம் உற்பத்தியிலும் சந்தைப்படுத்தலிலும் முன்னேற்றத்தைக் காணலாம். தற்காலத்தில் இலங்கையில் காணப்படும் பண்பாட்டு நியதிக்கு அமைவாகவும் விரும்பத்தக்க வகையிலும் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. கைத்தறி ஆடையானது மலைநாட்டு மற்றும் குளிர் பிரதேசங்களிலும் அணிய முடியும் என்பதோடு கரையோரப் பிரதேசங்களின் அதிக வெப்பநிலையின் காரணத்தினால் அவ் வெப்பத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள நூலினாலான கைத்தறி ஆடையினையே அதிகம் விரும்புகின்றனர்.

விசேட காலங்களில் அவ்வவ் காலத்திற்கும் தேவைக்கும் கலாசார பண்பாட்டு அம்சங்களுக்கும், தட்ப வெப்ப சூழலுக்கும் ஏற்ப நவீன வடிவங்களையும், புதிய நுட்பங்களையும் கொண்ட ஆடைகளை தயாரிக்க வேண்டும்.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விசேட காலங்களில் அதிகளவாக நுகரப்புடுகின்றது. உற்பத்திக்கேற்றவாறு சந்தைப்படுத்லும் அமைய வேண்டும். அப்போதுதான் நுகர்வோரின் வசதிக்கேற்றவாறு அவர்களிடம் கொண்டு செல்ல முடியும். விசேட காலங்களில் எங்கு மக்கள் நடமாட்டம் அதிகம் காணப்டுகின்றதோ அங்கே சந்தைப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும். கைத்தொழில் கைத்தறி கண்காட்சி என்பன மேற்கொள்வதனால் பல்வேறு விதமாக சந்தைப்படுத்தலை மேற்கொள்ள முடியும்.

எமது நாட்டில் வெளிநாட்டவர்களின் வருகையால் கைத்தறிப் பொருட்களிற்கான தேவையும் அவசியமும் அதிகமாகவே காணப்படுகின்றது. இதனால் வெளிநாடுகளில் கைத்தறிப் பொருட்களிற்கான கேள்வி அதிகமாகவே காணப்படுகின்றது. கைத்தறிப் பொருட்களிற்கான முக்கியத்துவத்தை குறுந்திரைப்படங்கள், போட்டி நிகழ்ச்சிகள் போன்றவற்றின் மூலமாக அறியச் செய்யமுடியும். அதுமட்டுமன்றி விசேட காலங்களில் நடாத்தப்படும் போட்டி நிகழ்ச்சிகள் மூலமாக கைத்தறிப் பொருட்களின் அறிமுகமும் சந்தைப்படுத்தல் வாய்ப்பும் அதிகமாகவே காணப்படுகின்றது.

மேலும் விசேட காலங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பல்வேறு வர்ணங்களிலும் வடிவங்களிலும் காணப்படும். இதன்போது நுகர்வோரை கவரக்கூடியதாகவும் அமையும். விசேட காலங்களின் இவ் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் போது விசேட விலைக்கழிவுகள் மற்றும் சலுகைகள் என்பனவும் வழங்கப்படும். இவ்வாறான செயற்பாடுகளின் மூலமாக அதிகளவிலான உற்பத்திகளை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவான சந்தர்ப்பமாக அமைகிறது. இவ்வாறு மேற்கொள்வதன் ஊடாக விசேட காலங்களுக்கு ஏற்ற விதத்தில் தரமானதும் சிறப்பானதுமான பொருட்களை உற்பத்தி செய்யவும் சந்தைப்படுத்தவும் முடியும்.

***

**Mr.P.ஜெயபவான்**

நெசவு போதனாசிரியர்
ஆரையம்பதி செல்வாநகர் நெசவு நிலையம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தேசிய அருங்கலைகள் பேரவை தொடர்பான பார்வையும் அதன் பங்களிப்பும்

இலங்கை வரலாற்றில் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரான காலத்திலிருந்தே எமது நாட்டின் பண்பாடு கலாசாரங்களுக்கு ஏற்றால் போல் கைப்பணிக்கலை வடிவங்கள் முக்கியம் பெற்று நிற்கின்றது. அந்தவகையில் எமது பாரம்பரிய கலையான கைப்பணிக்கலை வடிவங்கள் மக்களின் அறிவு வளர்ச்சியின்பால் பல வடிவங்களாக உருப்பெற்றுள்ளது.

கிராம மட்டங்களில் இருந்து எமது கைப்பணிக் கலைஞர்களை கொண்டு தங்களது கிராமம் சார்ந்த, மதம் சார்ந்த, தமது கலாசார பாரம்பரியம் சார்ந்த கலைவடிவங்களை மங்கவிடாமல் பேணிப்பாதுகாப்பதில் தேசிய அருங்கலைகள் பேரவையானது இலங்கை தேசத்தில் ஓர் முக்கியமான அமைப்பாக விளங்குகின்றது.

அருங்கலையின் வரலாறு மிகவும் பழமையானதும் கீர்த்திமிக்கதுமாகும். இது சுமார் கி.மு.300 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பமாவதோடு இன்றுவரை அருகிவரும் கலைவடிவங்களை பாதுகாப்பதில் தேசிய அருங்கலைகள் பேரவை முன்நிற்கின்றது. நாட்டின் பொருளாதாரமானது முன்னணி வகிக்க காரணமாக அமைவதோடு உல்லாசப்பயணிகளின் வருகையை முதன்மைப்படுத்துகின்றது.

தேசிய ரீதியில் கைப்பணிக்கலை அருகிவிடக்கூடாது என்பதற்காக தேசிய அருங்லைகள் பேரவையினை எமது அரசாங்கம் 1982 ம் ஆம் ஆண்டின் 35 இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் தாபித்தது. அன்றிலிருந்து இன்றுவரை கைப்பணியாளர்களின் திறனை வளர்த்தல், ஊக்குவித்தல் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் முகமாக செயற்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**<u>தேசிய அருங்கலைகள் பேரவையின் பிரதான செயற்பாடுகள்:</u>**

- பாரம்பரியமாகவும், கலாசார ரீதியாகவும், பரிணாம ரீதியாகவும் செயற்பட்டுவரும் கைப்பணிக்கலைஞர்ளின் கலை அறிவினை மேம்படுத்தலும் அக்கலையை பாதுகாத்தலும்.
- கைப்பணியாளர்களின் பொருளாதாரம் மற்றும் சமூக அந்தஸ்தை பாதுகாத்தல் மற்றும் வளர்த்துவிடல்.
- இனங்காணப்படும் புதிய, பழைய கைப்பணியாளர்களுக்கான தொழில்நுட்பம் சார்ந்த திறன்களை மேம்படுத்தல்.
- கைப்பணியாளர்களுக்கான உற்பத்தி தேவைகளுக்கு அமைவாக அவர்களுக்கான மூலப்பொருள் பெறுவதற்கு இலகு வழிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

மேற்படி விடயங்கள் ஊடாக நாடளாவிய ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் செயற்படும் வண்ணம் தேசிய அருங்கலைகள் பேரவை விளங்குகின்றது. அந்தவகையில் அருங்கலைகள் பேரவை 21 பிரதான துறைசார்ந்த கைப்பணிக்கலைகளும் 57 உப பிரிவுகளும் கொண்டதாக பிரிக்கப்பட்டுள்ளது.

**அதன் பிரதான பிரிவுகள் பின்வருமாறு:**

01.களிமண் உற்பத்திகள்

02.தும்பு, ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள்

03.தும்பறை வடிவமைப்புக்கள்

04.பிரம்பு மற்றும் மூங்கில் சார்ந்தவை

05.உலோக கைப்பணிப்பொருட்கள்

06.ஆபரணங்கள்

07.செதுக்கிய முகங்கள்

08.வாத்தியக் கருவிகள்

09.முகமூடி மற்றும் பாவைகள்

10துணிகள் மற்றும் துணிகளிலான கைப்பணிப்பொருட்கள்

11.பட்டிக்

12.ரேந்தை

13.வெண்கலம்

14.மர உற்பத்திப் பொருட்கள்

15.கற்கள் மூல கைப்பணிப் பொருட்கள்

16.வரைபுகளும் சிற்பங்களும் (பாரம்பரியக்கலை)

17.தோல் சார்ந்த உற்பத்திகள்

18.தென்னை, கித்துள், எள்ளு, பனை சார்ந்த உற்பத்திகள்

19 நானாவித கைப்பணிப்பொருட்கள்

20.நினைவுச் சின்னங்கள்

21.சேசத்

போன்றனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசிய அருங்கலைகள் பேரவையினால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள்**

மாவட்ட ரீதியாக கைப்பணிக் கைத்தொழிலில் ஈடுபடும் கைப்பணிக் கலைஞர்களை இனங்கண்டு அவர்களை அருங்கலைகள் பேரவையின் கீழ் பதிவு செய்தல், அடையாள அட்டை வழங்கல்.

பாரம்பரியமாக கைப்பணித்துறையினை குழுமமாக மேற்கொள்ளும் கிராமங்களை இனங்கண்டு அக்கிராமங்களை அபிவிருத்தி செய்தல்

உ-ம் 2017 ம் ஆண்டு மட்டக்களப்பு பேத்தழை கிராமத்தை மட்பாண்ட கிராமமாக தெரிவுசெய்து கைப்பணித்துறையினை கிராம மட்டத்தில் அபிவிருத்தி செய்தமை.

கைப்பணியை ஊக்கப்படுத்தும் வகையில் புதிய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் கிராமங்களை அமைத்தல். விற்பனைச் சந்தைகளை நடாத்துதல்

மாகாண மட்டம், தேசிய மட்ட அடிப்படையில் போட்டிகளையும் கண்காட்சிகளையும் நடாத்துதல், தெரிவு செய்யப்படுகின்ற கைப்பணியாளர்களுக்கு சான்றிதழ்கள், பணப்பரிசில்களும் வழங்கி கௌரவித்தல், மேலும் சனாதிபதி விருதிற்காகவும் கைப்பணியாளர்களை தெரிவு செய்தல்.

கண்காட்சி மற்றும் போட்டிகளை நாடளாவிய ரீதியில் மாத்திரமன்றி சார்க் அமைப்பின் நாடுகளின் பங்குபற்றலுடன் போட்டிகளை நடாத்தி அந்நாடுகளில் இருந்து கலந்து கொள்ளும் கைப்பணியாளர்களை கொண்டு விற்பனை சந்தையினை அமைத்தல்.

வெளிநாடுகளில் இடம்பெறும் பயிற்சிப்பட்டறைகள், கண்காட்சி மற்றும் விற்பனை சந்தைகளுக்கு கைப்பணியாளர்களை அழைத்துச்செல்லல்.

கைப்பணியாளர்களுக்கு சுயதொழில் மேற்கொள்ளும் வகையில் உதவித்திட்டங்களை மேற்கொள்ளல்.

கைப்பணி சார்ந்த புதிய சங்கங்களை அமைத்தலும், அங்கீரிக்கப்பட்ட பதிவு இலக்கம் வழங்கலும், முன்னதாகவே பதிவுசெய்யப்பட்ட சங்கங்களை வருடா வருடம் மீள புனரமைத்தல்.

தேசிய அருங்கலைகள் பேரவையில் பதிவு செய்யப்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட சுகயீனமுற்ற தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நலன்புரித்திட்டத்தின் ஊடாக உதவி வழங்கல்.

வருடாவருடம் பெறப்படும் நிதியினை கொண்டு கைப்பணியாளர்களுக்கு தேவையான மூலப்பொருள் மற்றும் உபகரணம் வழங்கல்.

தேசிய அருங்கலைகள் பேரவையினால் மாவட்ட ரீதியாக நிறுவப்பட்ட பயிற்சி நிலையங்கள் ஊடாக பயிற்சியாளர்களுக்கான பயிற்சிகளை வழங்கல்.

ஆரம்ப தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குதல் (6 தொடக்கம் 10 நாட்கள்)

இடைநிலைப் பயிற்சிகளை வழங்குதல் (15 நாட்களுக்கு மேற்பட்ட பயிற்சி)

6 மாதங்கள் கொண்ட குருவினைப்பயிற்சியினை தெரிவு செய்யப்படும் நிலையங்களில் நடாத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருங்காட்சியகங்களில் (நூதனசாலை) பாரம்பரிய கைப்பணிப்பொருட்களை ஆவணப்படுத்தும் வகையில் அழியவிடாது பேணிப்பாதுகாத்தல்.

அந்தவகையில் தேசிய அருங்கலைகள் பேரவை மாகாண ரீதியில் தனது சேவையினை வழங்கும் வகையில் கிராமிய தொழிற்துறை திணைக்களத்தின் பங்களிப்புடனும் அதனுடன் இணைந்தும் சேவையாற்றுகின்றது. மேலும் கிராமிய தொழிற்துறை திணைக்களம் மாவட்ட கைப்பணிக் கலைஞர்களையும், கைப்பணியாளர்களையும் பாராட்டுவதிலும், கௌரவிப்பதிலும், கைத்தொழிலை வளர்த்துவிடுவதிலும் பெரும் பங்கு வகிக்கின்றது. அதனடிப்படையில் தேசிய அருங்கலைகள் பேரவையும், கிராமிய தொழிற்துறை திணைக்களமும் தற்பொழுது போன்று தொடர்ந்தும் சிறப்பான முறையில் இணைந்து செயற்படுமாக இருந்தால் எமது மாவட்டத்திலும், மாகாணத்திலும் பாரிய வெற்றிகளை படைக்கலாம் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

நன்றி.

***

**பொன்.குவேதன்,**
மாவட்ட அபிவிருத்தி உதவியாளர்.
தேசிய அருங்கலைகள் பேரவை,
கிராமிய தொழிற்துறை திணைக்களம்,
சரவணா வீதி,கல்லடி,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரம்பரிய உற்பத்திப் பொருட்களை

## நவீன சந்தைக்குக் கொண்டுசெல்லல் (மரவேலை)

ஒருநாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கும் துறைகளில் விவசாயம், கைத்தொழில், மீன்பிடி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இருப்பினும் அதிக வருவாயைப் பெற்றுத்தருவதும் வெளிநாட்டு முதலீடுகளை பெருக்குவதிலும் கைத்தொழில் உற்பத்தித் துறையே முதலிடத்தில் உள்ளது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் நாட்டின் சிறப்பினைச் சித்தரிக்கும் தனித்துவமான மரபுரிமைகள் உள்ளன. இவை பாரம்பரிய சிறப்புமிக்கவை. அவற்றோடு தொடர்புடைய அதிகமான உற்பத்திப் பொருட்களை சிறு கைத்தொழில்களாகவும் குடிசைக் கைத்தொழில்களாகவும் கொண்டு உற்பத்தி செய்வதன் மூலம் நாளாந்த வருவாயை ஈட்டமுடியும். காரணம் இன்று பாரம்பரிய உற்பத்திப் பொருட்களை நவீன சந்தைக்கு கொண்டு செல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. எமது நாட்டிற்க்கு வரும் பல வெளிநாட்டவர்கள் இவற்றை அதிகம் விரும்புவதனாலும் இன்று அவற்றை அழியவிடாது பாதுகாக்க வேண்டிய தேவை இருப்பதனாலும் இவ் உற்பத்திகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டியுள்ளது.

பாரம்பரிய உற்பத்திகள் என குறிப்பிடும் போது முகமூடிகள் செதுக்கல் வேலைப்பாடுகள் கொண்ட பொருட்கள், கைத்தொழில் பொருட்கள், சிலைகள், சின்னங்கள், மரவேலைப்பாடுகள் கொண்ட அலங்காரப் பொருட்கள், மட்பாண்ட உற்பத்திகள், சித்திரங்கள், ஓவியங்கள் போன்ற பல்வேறு உற்பத்திகள் இவற்றில் அடங்கும்.

இத்தகைய பொருட்களை வடிவமைப்பதற்கோ அல்லது உற்பத்தி செய்வதற்கோ பாரிய முதலீடுகள் அவசியமில்லை. குறைந்த செலவில் கூடிய இலாபம் பெறக்கூடிய உற்பத்தியாகவே இவை இருக்கும். இதில் முதலிடத்தில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய உற்பத்தி மர வேலைப்பாடு எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் காணும் பொருட்களில் பெரும்பாலானவை மரத்தினாலேயே ஆக்கப்பட்டவையாக உள்ளன. இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் கிடைக்கும் வளங்களில் மிகவும் இலகுவாக பெறக்கூடிய ஒன்றாக இருப்பது மரங்களினால் கிடைக்கும் உற்பத்திகளாகும். வீட்டுத்தேவையோடு தொடர்புடைய பொருட்கள், தளபாடங்கள், அலங்காரப் பொருட்கள், செதுக்கல்கள் முதலிய மர வேலைப்பாட்டு உற்பத்திகள் மக்களின் அன்றாட பயன்பாட்டிற்கும் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கும் இன்றியமையாதவையாக உள்ளன.

இலங்கையில் மரவளம் அதிகளவில் உள்ளதால் இவை சார்ந்த உற்பத்திகளை அதிகளவில் மேற்கொள்ளமுடியும். ஆனாலும் இதில் அனேகர் கவனம் செலுத்துவது குறைவாகவே காணப்படுகிறது. வெளிநாடுகளில் இருந்து வடிவமைக்கப்பட்ட தாங்கு திறன் குறைந்த பொய்யான கவர்ச்சிகளைக் கொண்டு உற்பத்தி செய்து இறக்குமதி செய்யும் பொருட்களையே நாம் கொள்வனவு செய்ய விரும்புகின்றோம். மாறாக இலங்கையில் தரம் வாய்ந்த மரங்களும் அதில் வடிவமைக்கப்படும் எத்தனையோ உற்பத்திப்பொருட்கள் உள்ளன. அவற்றை வடிவமைப்பதில்தான் நமது நுட்பம் இன்னும் அதிகரிக்க வேண்டும்.

இன்று மரவேலைப்பாட்டுப் பொருட்களுக்கும் அவற்றின் உற்பத்திக்கும் உலகெங்கும் பெரும் வரவேற்பு இருப்பதால் இடைவிடாத தொழிலாக இதன் உற்பத்திகளை மேற்கொள்ளமுடியும். இதனால் புதிய புதிய வடிவமைப்புகளை உருவாக்குவதோடு இன்றைய நவீன விருப்புக்கு பொருத்தமான வகையில் மர உற்பத்திகளை உருவாக்குவதன் மூலம் அதிக வருவாயைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது மரத்தினால் வடிவமைக்கப்படும் உற்பத்திப் பொருட்களை தனியார் கடைகளுக்கோ அல்லது பதிவு செய்யப்பட்ட கம்பனிகளுக்கோ உதாரணமாக தம்ரோ போன்ற கூட்டுத்தாபனங்களுக்கோ கொடுத்து முழுமையான இலாபத்தினை ஈட்டமுடியும்.

இத்தொழில் முறைகளுக்கு பாரிய முதலீடுகள் அவசியமில்லை. ஆக்கத்திறன் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காகவே பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு மர வேலைப்பயிற்சிகளும் செய்முறைகளும் வழங்கப்படுகின்றன. இது அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு பெரிதும் உதவும் இவற்றை இன்றைய நவீன சந்தைககு ஏற்றவாறு வடிவமைப்பதன் மூலம் பலவெளிநாடுகள் அதிக பணம் கொடுத்து வாங்குவதற்குத் தயாராக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால் இப்பாரம்பரிய உற்பத்திகளின் மதிப்பும் சிறப்பும் முதலிடம் பெறுகின்றது.

இப்பாரம்பரிய உற்பத்திப் பொருட்களை தற்கால நாகரீக எதிர்பார்ப்புகளை திருப்திபடுத்தக் கூடியதாகவும், நவீன தொழில்நுட்ப நுணுக்கங்களை வெளிப்படுத்தத் தக்கதாகவும் புதுமையான மெருகூட்டல் அம்சங்களையும் பெறுமதி சேர் மாற்று மூலவள சேர்க்கைகளைக் கொண்டதாகவும் தயாரிக்கும் போது அவற்றுக்கான சந்தை வாய்ப்புகள் மேலும் அதிகரிக்கும். உற்பத்திகளை இணையத்தளங்கள், சமூக வலையமைப்புகள், வெகுசன ஊடகங்கள், தொலை தொடர்பாடல் பெறுமதிசேர் சேவைகள் மற்றும் நவீன காட்சிப்படுத்தல் உத்திகள் மற்றும் விளம்பர நுட்பங்களை பயன்படுத்தி சந்தைக்கு விடும்போது அதிகளவு கேள்வியை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் மரவேலை உற்பத்திப் பொருட்களுக்காக கிராக்கியையும் அதிகரித்துக்கொள்ள முடியும்.

எனவே இன்றைய வாழ்க்கை செலவினை கட்டுப்படுத்துவதற்கான வழிகளை வேறு எங்கும் தேடி ஓடவேண்டிய அவசியமில்லை. இதற்குத் தேவையான சிறுகடன் வசதிகள் வழங்கப்படுகின்றது. அவற்றைப் பெற்று இவ்வுற்பத்திகளை குறித்த இடத்தில் வைத்தே செய்யக்கூடியதாக இருக்கும். அத்தோடு இதற்குத் தேவையான பயிற்சிகளும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் தொழில்துறைத் திணைக்களங்களில் கொடுக்கப்படுவதனால் பாரம்பரிய உற்பத்திப் பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்து நவீன சந்தைக்கு கொண்டு செல்வதன் மூலம் வாழ்க்கை சிறப்பதோடு நாட்டின் பொருளாதாரத்தையும் பாதுகாக்க முடியும்.

***

**அ. தேவசகாயம்**
சிறு கைத்தொழில் போதனாசிரியர் (மரவேலை),
கல்லடி தச்சு நிலையம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் மட்பாண்ட உற்பத்திகளும் பயன்பாடும் (ஆதிகாலம் முதல் தற்காலம் வரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய காலத்தில் மனிதன் வேட்டையாடியே உணவுத் தேவையை நிறைவு செய்தான். பச்சையாக இறைச்சி வகைகளை உட்கொண்ட மனிதன் நெருப்பில் வாட்டி உண்ணத் தொடங்கினான். அலைந்து திரிந்து வேட்டையாடி உணவுத் தேவையை பூர்த்தி செய்தவன் களைப்படைந்து காட்டில் கிடைத்த காய் கனிகளையும், தானியங்களையும், கிழங்கு வகைகளையும் உணவுக்காகப் பயன்படுத்தத் தொடங்கினான். இவ்வாறு பெற்ற தானியங்களை உணவாக உட்கொள்ளத் தொடங்கிய பின்பே உணவு சமைப்பதற்குப் பழகினான். இவ்வாறு சமைத்து உண்பதற்காகவே மட்பாண்டங்களை செய்யத் தொடங்கியிருக்கலாமென நம்பப்படுகின்றது. களி மண்ணை கையினால் பதப்படுத்தி பாண்டம் செய்யப்பட்டு வெயிலில் உலர வைத்து பயன்படுத்தப்பட்டது. பிற்காலத்தில் சூளையிலிடப்படும் முறை உருவாக்கப்பட்டிருக்கலாம்.

ஆரம்பத்தில் கையினால் மட்பாண்டங்கள் செய்யப்பட்ட போதும் வனைதற் சில்லு கண்டுபிடிக்கப்பட்டது மனித நாகரிக வளர்ச்சியின் பெரிய வெற்றிப் படியாகும். ஆண்கள் வனைதற் சில்லு கொண்டு செய்ய பெண்கள் கையினால் உருவங்கள் அமைக்கும் வேலைகளில் ஈடுபட்டனர். இவ்வாறாக எகிப்து, இந்தியா, சீனா போன்ற நாடுகளிலிருந்தும் மட்பாண்டங்கள் உற்பத்தியாக்கப்பட்டன. இவ்வாறு எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட வனைதற் சில்லின் மூலம் மட்பாண்ட உற்பத்தி முறைகள் வியாபார வளர்ச்சியின் காரணமாக பல நாடுகளுக்கும் பரவின. ஜாதகக் கதைகள் மூலமும், நாகார்ச்சுனி கொண்டா, மொஹஞ்சதரோ, ஹரப்பா, சாஞ்சி போன்ற இடங்களில் புதை பொருட்களாக கண்டெடுக்கப்பட்ட ஓடு, செங்கல், மட்பாண்ட பொருட்கள் மூலமும் மட்பாண்ட உற்பத்திகளின் வரலாற்றுப் பழமை பற்றி அறிய முடிகின்றது.

இவ்வாறு வளர்ச்சியடைந்த மட்பாண்ட உற்பத்தி இலங்கையிலும் பரவியமைக்கு பல சான்றுகள் உள்ளன. சிங்கள அரசர்கள் காலத்தில் வனைதற்றொழிலை குயவேலை என அழைத்தனர். அவர்கள் காலத்தில் இவ்வேலையை செய்வதற்கு குயவர்கள் இரு பிரிவினராகக் காணப்பட்டனர். கல்படை, பறணகூறை, கிளிகொடை, பெலிகல் ஆகிய கோறளைகளுக்குரிய பிரிவினரும் எழுகோறளை, ஊவா, மாத்தளை பகுதிக்குரிய பிரிவினரும் காணப்பட்டதுடன் இவர்கள் பண்டகசாலைக்கு வேண்டிய சட்டி பானைகளையும் ஓடு, செங்கல், அரச மாளிகையின் அலங்காரச் சித்திரம், சிங்கம் போன்றவற்றையும் செய்தனர்.

பண்டைக் காலத்தில் வனைதற்றொழிலின் வளர்ச்சியானது நமது நாட்டில் ஆக்கப்பட்ட குடம், கூசா, உணவுத் தாங்கி, குண்டுச்சட்டி, விளக்கு ஆகியவற்றின் மூலம் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு வனைதற்றொழில் எமது நாட்டில் வளர்ச்சியடைவதற்கு காரணம் வேண்டிய மூலப் பொருட்கள் இலகுவில் கிடைக்கப்பெற்றமையையும் குறிப்பிடலாம். இலங்கையில் வனைதற்றொழிலில் உபயோகிக்கப்படும் “வனைதற் களிமண்” சட்டி பானைகள் வனைவதற்கு உபயோகிக்கப்படுகின்றது. மனித வாழ்க்கைக்கு அத்தியவசியமான சட்டி, குடம், களிச்சட்டி, பானை, விளக்குகள் செய்வதுடன் ஓடு, செங்கல் என வீட்டிற்குரிய பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இக்களி கழனி, மாத்தளை, கங்கவல்லை, கடுவலை, இரத்தினபுரி, கொகலந்தை, கம்பஹா, வியாங்கொடை, யக்கலை, நித்தம்புவ, கொறணை, அவிசாவளை, தும்பறை, கணடி ஆகிய பகுதிகளிலும் மலை நாட்டிற்கும் கடற்கரையோரத்திற்கும் இடையேயுள்ள பகுதிகளிலும் அதிகமாகக் கிடைக்கின்றன.

இலங்கையில் கிடைக்கும் களிமண்ணைக் கொண்டு உற்பத்தி செய்யும் மட்பாண்ட உற்பத்தி நிலையங்கள் நாடு பூராகவும் பரவிக் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொழும்பு – நீர்கொழும்பு பகுதியில் - அம்பலன்முல்லை, பியகமம், வறிகொடை, உணுமுல்லை, வியாங்கொடை, தெஹிவளை, மினவாங்கொடை
- களுத்துறை
- கண்டிப்பகுதி – கடுகண்ணாவ, கஹட்டப்பிட்டி, வலவை, நூகவியத்தை, வெலம்பொடை
- மாத்தளை – கல்பிட்டி
- நுவரெலியா – சிகிரியா
- காலி – பேறகஹாதொடை, கனத்தை
- மாத்தளை – கும்பல்கமம், வலசுக்கலை, வல்கமம், மதகொடை
- அம்பாந்தோட்டை – பெலிஅத்தை, உடுகிரிவலை
- யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி, மீசாலை, துன்னாலை, கோப்பாய்
- குருணாகல் – தும்பலகுரியா, பெறமண்டலை, கல்பவா, படலகமை, பாதுகமை, மதபொலை, வேறகறை, உடுமியா
- சிலாபம் - கிளிமட்டியானை, தோப்புதொடை
- அனுராதபுரம் - அத்திவடுணுவவா, பண்டிதறம்பாவை, கடுபொத்தை
- தம்மன்கடுவை - அத்தமுன்னை, ஹிங்குராக்கொடை, படுகொட்டுவை
- இரத்தினபுரி – தமக்கா, பலாங்கொடை, மாதம்பை, அகலியக்கொடை
- கேகாலை – மொல்கொடை, வல்கமை, திவ்தெனியா, வேறவத்தை, பவலபானை, கும்பல்நிவெலை
- புதுளை – கடிகமுவை, உடுகும்பல்வெலை, கடதொறகமை, அலுத்வெல்கமை
- திருகோணமலை - மூதூர்
- மட்டக்களப்பு – ஏறாவூர், அக்கரைப்பற்று, பட்டிருப்பு, பெரிய போரதீவு

இவ்வாறு பரவியுள்ள மட்பாண்ட உற்பத்தி நிலையங்களில் கடந்த கால நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பகுதியளவில் பாதிக்கப்பட்டவைகளும் முற்றாகக் கைவிடப்பட்டவைகளும் உள்ளன. எனினும் கைவிடப்பட்டவைகளும் தற்பொழுது சிறு சிறு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதனைக் காணலாம். இவற்றிற்கு மேலாக அரச திணைக்களங்களும் இந்நிலையங்களை பராமரித்து கண்காணிக்கும் நிலையும் காணப்படுகின்றது. இதன் பிரகாரம் மட்டக்களப்பு பகுதியிலுள்ள பெரிய போரதீவு மட்பாண்ட நிலையமானது கிராமிய கைத்தொழிற்துறை திணைக்களத்தில் உள்வாங்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்ட கிராமிய தொழிற்துறைத் திணைக்கள அலுவலகத்தால் கண்காணிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எமது நாட்டில் களனியிலுள்ள மட்பாண்ட நிலைய உற்பத்திகளான பானைகள், சட்டிகள், விளையாட்டுப் பொருட்கள், பிராணிகளின் உருவங்கள், மனித உருவங்கள், தேவ உருவங்கள், உண்டியல், முதலானவை கிறீக்கு சம்பிரதாய முறையைப் போன்று கலையழகுடையவை இதேபோல் கண்டி மட்பாண்ட நிலைய உற்பத்திகள் நிறம், உருவம், அலங்காரம் என்பனவற்றிற்கு பிரசித்தமானது.

நம் நாட்டின் வனைதற்றொழிலாளர்களினால் ஆக்கப்படும் உற்பத்திகளின் மூலப்பொருட்களைப் பதப்படுத்துதல் ஒரு சிறப்பான முறையாகக் காணப்படுகின்றது. பண்டைக்காலத்தில் இக்களிமண்ணை பதப்படுத்துதல் இரண்டு வாரங்கள் வரை செல்லும். அவையாவன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- களிமண்ணை துண்டுகளாக்குதல்
- வெயிலில் காய வைத்தல்
- கல் போன்றவற்றை நீக்குதல்
- உரலிலிட்டு இடித்தல்
- சுளகிலிட்டு புடைத்தல்
- நீர் சேர்த்து பதப்படுத்தல்
- திரட்டி பதமடைய வைத்தல்
- பதப்படுத்துதல்
- மெல்லிய குருகு மணலும் நீரும் தகுந்தளவு சேர்த்துப் பதப்படுத்துதல்
- பதமடைய அடுக்கி வைத்தல்
- உழக்குதல்
- கைகளினால் பதப்படுத்தல்
- திரட்டி அடுக்கி வைத்தல்
- பிரப்பங் கீற்றினால் வெட்டுதல்
- திரட்டுதல்

மேலுள்ளவை போன்றவாறு பதப்படுத்தி பின்னர் மட்பாண்டங்கள் ஆக்கப்பட்டன. இம்முறையை பெருமளவில் ஒத்தே தற்காலத்திலும் பாண்டங்கள் ஆக்கப்படுவதை நாம் கண்கூடாகக் காணலாம்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மட்பாண்டங்களை வீட்டு உபயோகப் பாண்டங்கள், விகாரை, தேவாலயத்திற்கு உபயோகிக்கும் பாண்டங்கள், கட்டடங்களுக்கு உபயோகப்படும் பாண்டங்கள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

அ) வீட்டு உபயோகத்திற்கு எடுக்கும் பாண்டங்கள்:

- குடம் - நீர் கொண்டு வருவதற்கு
- பானை – சோறு சமைப்பதற்கு
- முட்டி - கள் சேர்ப்பதற்கு (கித்துள் மரங்களில் தூக்க)
- அகன்ற சட்டி- கறி சமைப்பதற்கு
- சட்டி- கறி சமைப்பதற்கு
- தாச்சி- பால் உரொட்டி ஆக்குவதற்கு
- பலகாரச்சட்டி- அதிரசம் போன்ற பலகாரஞ் செய்வதற்கு
- குண்டுச்சட்டி- உரொட்டி சமைப்பதற்கு
- அரிக்கன் சட்டி- அரிசி சமைப்பதற்கு
- மூடி- உணவுப் பொருட்களை மூடி வைப்பதற்கு
- அரி சட்டி- அரிசி சுத்தப்படுத்தவும் அரிக்கவும்
- பிழி சட்டி- தேங்காய் நெய் காய்ச்சுவதற்கு, தேங்காய் பிழிவதற்கு
- கிடாரச்சட்டி- நெல்லூற வைப்பதற்கு, குழந்தைகளைக் குளிப்பாட்டுவதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மண் கோப்பை- உணவு எடுப்பதற்கும் தேங்காய் பிழிவதற்கும்
- சால் (சலவைக்கு)- துணியவிப்பதற்கு
- வெற்றிலைத்தட்டம்- வெற்றிலையைப் பாதுகாப்பாக வைப்பதற்கு
- குண்டான் சட்டி- நெல்லவிப்பதற்கு
- கலசம்- கொண்டாட்ட சமயங்களில் தென்னம் பூ வைப்பதற்கு
- தாழி- நீர் சேர்த்து வைப்பதற்கு
- செம்பு- முகங் கழுவுதல், குடித்தல், ஆகியவைகளுக்கு நீர் எடுப்பதற்கு
- கெண்டி- நீர் குடிப்பதற்கு
- கேத்தல்- நீர் குடிப்பதற்கு
- சிறிய குடம்- நீர் கொண்டு வருவதற்கு
- சிறு சாடி- திரவ பதார்த்தங்களை வைப்பதற்கு
- மட்பறை- வேளாண்மை வேளையில் வாத்தியமாக
- உண்டியல்- பணஞ் சேர்ப்பதற்கு
- படிக்கம்- துப்புவதற்கு
- கைப்பிடி மங்கு- தண்ணீர் போன்றவற்றைக் குடிப்பதற்கு
- அடுப்பு- அடுப்பாக உபயோகிப்பதற்கு
- அரக்கடுப்பு- தட்டார், அரக்குத் தொழிலாளர் ஆகியோர் அடுப்பாக உபயோகிப்பதற்கு
- கும்பா- குடிப்பதற்கெடுக்கும் நீர் வைப்பதற்கு
- புகையோடு- குங்கிலியம் போன்றவற்றைப் போட்டுப் புகை உண்டாக்குவதற்கு
- விளக்கு- விளக்கெரிப்பதற்கு
- விளக்குத்தாங்கி, விளக்குத் தண்டு- விளக்குகள்வைப்பதற்கு, ஏந்தமானமாக

ஆ) விகாரை, தேவாலயம் ஆகியவற்றின் உபயோகத்திற்கு எடுக்கும் பாண்டங்கள்:

- நீர்க் கொண்டி- பூக்க்ளைக் கழுவுவுதற்கு
- பூப் பேச்சி- பூக்களைக் கழுவுவதற்கு
- பாத்திரம்- தானங் கொடுப்பதற்கு
- புகையோடு- புகை பிடிப்பதற்கு
- தாம்பாளம்- பத்தினி உடுப்பு வைப்பதற்கு
- விளக்கு, விளக்குத் தண்டு, வட்டிப் பந்தம்-
- ஊர்வலங்களில் வெளிச்சமேற்படுத்துவதற்கு
- சாடி- கோயிற் படிக்கம்
- வெளிச்சக்கூடு- விளக்கைப் பாதுகாப்பாக வைப்பதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) கட்டடங்களுக்கெடுக்கும் பாண்டங்கள்:

தட்டையோடு
ஊரோடு கூரை } வேய்வதற்கு
முகட்டோடு

வடிம்பு (தாழ்வாரம்) ஓடு- வடிம்புப் பலகைக்குப் பதிலாகக் கூரையின் கீழ்த்தளத்தில் அமைப்பதற்கு

தூபி நுனி - கூரை நுனியை அலங்கரிப்பதற்கு

அலங்காரச் செங்கல் - சுவரையலங்கரிப்பதற்கு

செங்கல் - வீடு கட்டுவதற்கு

கிணற்று வளையம் - சிறிய கிணறுகளை அமைப்பதற்கு

இவ்வாறு ஆதி முதல் தற்காலம் வரை எமது நாட்டில் மட்பாண்ட உற்பத்திகள் பயன்படுத்தப்பட்டு வருவதை காணக்கூடியதாக உள்ளது. தற்காலத்தில் அலங்காரத்திற்காக தங்குமறை, படுக்கையறை ஆகியவற்றில் வைப்பதற்கும் பாத்திரங்கள், குடங்கள், பிராணிகளின் உருவங்கள், மனித உருவங்கள் ஆகியவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உலகமயமாதலின் விளைவாக அருகிவரும் எமது கலைகளும், கலை வடிவங்களும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். தற்பொழுது சுகாதார வாழ்க்கை முறைக்கு ஈடுகொடுப்பதற்காக அநேகமானோர் மட்பாண்ட உற்பத்திகளை உபயோகப்படுத்த விரும்புகின்றனர். நம் நாட்டவர் மட்டுமன்றி உல்லாசப் பிரயாணிகள்கூட உணவு விடுதிகளில் மட்பாண்ட பொருட்கள் உபயோகப்படுத்துவதை பெரிதும் விரும்புகின்றனர் என்பதனை நாம் அறியக்கூடியதாக உள்ளது.

***

**ந.யமுனேஸ்வரி**

அபிவிருத்தி உத்தியோகத்தர்
மாவட்ட அலுவலகம்
கிராமிய தொழித்துறை திணைக்களம்
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாதிரி கைத்தொழில் காட்சிக்கூடமாக மாறிவரும் மட்டக்களப்பு மாவட்ட அலுவலக வளாகம்

கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சின் கீழ் இயங்கிவருகின்ற வினைத்திறன் மிக்க திணைக்களங்களுள் கிராமிய தொழிற்துறைத் திணைக்களம் முதன்மையானது. மாகாணத்தில் உள்ள பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்த அத்துடன் தொழில்வாய்பற்ற இளைஞர் யுவதிகள் மற்றும் தொழிலாற்றும் ஆர்வமும் தகவுமுடையவர்களுக்கு தொழிற்கல்வி மற்றும் பயிற்சியை வழங்குவதையும் பயிற்சிக்காலத்தின் பின்னர் தொழிலாற்றும் வாய்ப்பை வழங்குவதையும் பிரதான நோக்கங்களாக கொண்டு கிராமிய தொழிற்துறைத் திணைக்களம் செயற்பட்டுவருகின்றது. பயிற்சியையும், அனுபவத்தையும் பெற்றுக்கொண்ட தொழிலாளர்களுக்கு மேலதிக தொழில் வழிகாட்டல்கள், தொழில் வாய்ப்புக்கான ஆற்றுப்படுத்தல்கள், சுயதொழில் வாய்ப்பு உதவிகள், ஊக்குவிப்பு திட்டங்கள் மற்றும் கௌரவிப்புகளையும் வழங்கி கைத்தொழில் அபிவிருத்திக்கு கனதியான பங்களிப்பை மேற்கொண்டு வருகின்றது.

கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறைத் திணைக்களத்தின் கீழ் மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் மாவட்ட அலுவலகங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகமானது மிக முக்கிய வகிபாகத்தை கொண்டுள்ளது. பயிற்சி மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளில் இம்மாவட்டம் மாகாணத்தின் 50மூ இற்கும் அதிகமான அடைவினைக் கொண்டுள்ளது. கடந்த 2016ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் மாகாண கைத்தொழில் கண்காட்சி (மலரும் கிழக்கு) கைத்தொழில் கண்காட்சி மிகவும் சிறப்பாகவும், பலரும் பாராட்டும் விதத்திலும் நடைபெற்றிருந்தது. அதனையடுத்து மாகாண கைத்தொழில் கண்காட்சி இவ்வருடம் 2019 இல் மீண்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு மாகாண சபையின் கீழ் ஆரம்ப காலங்களில் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர்களால் நிர்வகிக்கப்பட்டுவந்தது. 2013ம் ஆண்டிலிருந்து மாவட்ட அலுவலகங்களுக்கு இலங்கை நிருவாக சேவை தரத்திலான உத்தியோகத்தர்களை நியமித்தனர். அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பத்தில் இரு பதில் நிலை உதவிப்பணிப்பாளர்கள் கடமையாற்றினர். அதன் பின்னர் 2014ம் ஆண்டுப் பகுதியில் முதலாவது முழுநேர உதவிப் பணிப்பாளராக கடமையைப் பொறுப்பேற்ற திரு.கி.இளம்குமுதன் அவர்கள் மாவட்ட அலுவலகத்தின் அபிவிருத்தி மூலம் திணைக்களத்தின் வினைத்திறன்மிக்க சேவையை அதிகரிப்பதற்காக இன்றுவரை அரும்பாடுபட்டுவருகின்றார்.

கடந்த 2016ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட அலுவலக வளாகத்தில் மாகாணக் கண்காட்சியினை நடாத்துவதற்காக அலுவலக வளாகம், சூழல் என்பன துப்பரவு செய்யப்பட்டு கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டன. பயிற்சிநிலையங்கள் மற்றும் அலுவலக கட்டடங்களுக்கு வர்ணம் பூசப்பட்டதுடன் பல வருடங்களாக செயலிழந்து காணப்பட்ட தறிகள், இயந்திரங்கள் திருத்தப்பட்டு பாவனைக்கு கையளிக்கப்பட்டு யக்காட், டொபி, மதுர யக்காட் இயந்திரங்களும் திருத்தத்திற்கு உட்பட்டன. நெசவு மற்றும் தும்பு, மரவேலை, மட்பாண்ட கைவினைப் பொருட்கள் பாரம்பரிய உற்பத்தி நடைமுறையிலிருந்து மாற்றம்பெற்று காலத்திற்கும், தேவைக்கும் ஏற்றவகையில் பெறுமதிசேர் வடிவமைப்புகளாக உருவாக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட அலுவலக வளாகமானது தற்போது மாதிரி கைத்தொழில் கண்காட்சி காட்சிக்கூடங்களான மாற்றம் பெற்றுவருகின்றன என்றால் அது மிகையாகாது. மாவட்ட அலுவலக வளாகத்தினுள் தற்போது புதிதாக உருவாக்கப்பட்ட மின்தறி வேலைத்தளம், பாவோடும் நிலையம், வடிவமைப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நிலையம், அரும்பொருட் காட்சியகம் என்பவற்றுக்கு மேலதிகமாக இரத்தினக்கல் ஆபரண பயிற்சி நிலையம் (திணைக்களம் சாராத), மகளிர் தையல் பயிற்சி நிலையம் (திணைக்களம் சாராத) என்பனவும் காணப்படுகின்றன. அத்துடன் விருந்தினர் விடுதி, பயிலுனர் விடுதி, ஒன்றுகூடல் மண்டபம் என்பன மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் அலுவலக வளாகத்தினுள் காணப்படும் பயிற்சி நிலையங்கள், தொழில் நிலையங்கள், காரியாலயங்கள் மற்றும் பிற கட்டிடங்களை தொடர்புபடுத்துவதான முன்புற நுழைவாயிலிலிருந்து பின்புற நுழைவாயில் வரையான உள்ளக கொங்கிறீற் வீதியும் இடப்பட்டுள்ளது. மாவட்ட அலுவலக வளாகத்தின் சுற்றுமதிலின் பெரும்பாலான பகுதி கட்டிமுடிக்கப்பட்டுள்ளதுடன் பின்புற வளாகத்திலும் ஒரு பிரதான நுழைவாயில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முன்புறமாக இரு பிரதான நுழைவாயில்கள் காணப்படுவதுடன் வர்ணம் பூசப்பட்ட நிலையில் மாவட்ட அலுவலக வளாகம் விழாக்கோலம் பூண்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவட்ட அலுவலகத்தின் மேற்பார்வையில் 36 நெசவு நிலையங்களும் 10 தும்பு நிலையங்களும், 03 தச்சு நிலையங்களும், 01 மட்பாண்ட நிலையமும், 02 சாயமிடும் நிலையங்களும் 03 விற்பனை நிலையங்களும் இயங்கி வருவதனையும் காணலாம். இதற்கு மேலதிகமாக திணைக்கள மேற்பார்வையின் கீழ் ஏறாவூரில் ஒரு ஆடைத்தொழிற்சாலை இயங்கி வருகின்றது. பாலமுனை சாயநிலையம் மத்திய அரசாங்கத்தினால் அண்மையில் கிராமிய தொழிற்துறை திணைக்களத்திற்கு பாரமளிக்கப்பட்டது. அங்கு நவீன இயந்திரங்களால் சாயமிடல் வேலைகளை மேற்கொள்ள முடியும் என்பதுடன், பயிற்சிநெறிகளை நடாத்துவதற்கான மண்டபங்களும் காணப்படுகின்றன.

ஹமீடியாஸ் நிறுவனத்தால் நடாத்தப்பட்டுவரும் ஏறாவூரில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலையானது அரச மக்கள் மற்றும் சமூக பங்கேற்பு கூட்டிணைவு தொழிற்சாலையாக காணப்படுகின்றது. கிராமிய தொழிற்துறை திணைக்களத்தின் மேற்பார்வையுடன் இயங்கிவரும் இத்தொழிற்சாலை திணைக்களத்தின் ஒரு சொத்தாகும். இதையொத்த ஓரிரு நெசவு தொழிற்சாலைகளை அரச மக்கள் மற்றும் சமூக பங்கேற்பு திட்டத்துக்கு அமைய ஆரம்பிப்பதற்கான சில பூர்வாங்க நடவடிக்கைகளும் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மட்டக்களப்பு மாநகரசபை, மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகம், களுவாஞ்சிக்குடி மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகம், எகெட் கரிட்டாஸ் தன்னார்வ தொண்டு நிறுவனம் என்பவற்றுடன் இணைந்து உள்ளூர் தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கல், தொழில் வழிகாட்டல், மேற்பார்வை மற்றும் உள்ளூர் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் செயற்திட்டங்களும் இத்திணைக்களத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் தற்போதுள்ள 36 நெசவு பயிற்சி நிலையங்களுள் கடந்த ஆண்டு உன்னிச்சை, மண்டபத்தடி, நெல்லூர், புதூர், ஈச்சந்தீவு, செட்டிபாளையம் ஆகிய இடங்களில் ஆரம்பித்துவைக்கப்பட்ட புதிய நெசவு பயிற்சி நிலையங்களும் அடங்குகின்றன. மாவட்டத்திலுள்ள அனைத்து நெசவு நிலையங்களுக்கும் தேவையான "பா" மாவட்ட அலுவலக வளாகத்திலுள்ள பாவோடும் நிலையத்திலிருந்தே வழங்கி வைக்கப்படுகின்றன. மாதாந்தம் இப்பாவோடும் நிலையத்தின் மூலம் 30 இற்கும் மேற்பட்ட பாக்களை தயாரித்து வழங்கும் திட்டத்தை வகுத்து உதவிப் பணிப்பாளர் முயற்சியினை மேற்கொண்டு வெற்றியும் கண்டுள்ளார். இப்பாவோடும் நிலையத்தில் மின்சாரத்தில் இயங்கும் பேண் பைன்டிங் மற்றும் பொபின் பைன்டிங் இயந்திரங்கள், மின்சார பாவோடும் இயந்திரம், மின்சார நூல் சுற்றும் இயந்திரம் என பாரிய தொழிற்சாலை மயமாக்கப்பட்ட சூழல் நிலவுகின்றது. அத்துடன் இணைந்ததாக மின்சாரத்திலியங்கும் மின்தறியும் செயற்பாட்டிலுள்ளது.

மாவட்ட அலுவலக வளாகத்தில் முன்பு ஒரு பாரிய கிடங்கு காணப்பட்டது. சிறு குளத்தை ஒத்த இவ்விடத்தில் மழைக்காலத்தில் நீர் நிரம்பி நுளம்பு உட்பட பாம்புகளும் குடிகொண்டிருக்கும். இக்கிடங்கு 2016ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் உதவிப் பணிப்பாளர் திரு.கி.இளம்குமுதன் அவர்களது அயராத முயற்சி மற்றும் தொடர்ச்சியான நடவடிக்கைகளின் காரணமாக முழுவதுமாக மண்ணிட்டு நிரப்பப்பட்டு அவ்விடத்தில் தற்போது மாவட்ட அலுவலகம் மற்றும் வடிவமைப்பு நிலையத்திற்கான புதிய இருமாடி கட்டிடமும் அமைக்க பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர்களின் ஒத்துழைப்பும் மட்டக்களப்பு மாவட்ட தொழிற்துறைத் திணைக்களத்தில் கடமையாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், போதனாசிரியர்கள், தொழிலாளர்கள், காவலாளிகள் அனைவரினதும் அயராத உழைப்பும் இவ்வாறான அபிவிருத்தி வேலைகளுக்கு பக்கபலமாக அமைந்திருந்தன. இவ்வருட கண்காட்சி நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக மேற்படி மாவட்ட அலுவலக இருமாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெறவுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் வளர்ச்சி தடைகளையெல்லாம் தாண்டி இன்றுவரை தொடர்ந்து கொண்டே செல்கின்றதென்றால் அது மிகையாகாது. இதற்கெல்லாம் ஆசிவழங்கி வழிவகுத்துக் கொடுப்பவராக இவ்வளாகத்தில் குடிகொண்டு அருள் பாலிக்கும் மகா சர்வசித்தி விநாயகப் பெருமான் விளங்குகின்றார். 2017ம் ஆண்டு மகா சர்வசித்தி விநாயகர் ஆலயம் கல்லால் கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. அதைத்தொடர்ந்த ஒவ்வொரு வருடங்களிலும் வருடாந்த உற்சவமும் சங்காபிஷேகமும் அன்னதானமும் இடையறாது நடைபெற்றுவருகின்றது.

திணைக்களத்தின் பயிற்சி நிலையங்களில் தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் சந்தைப்படுத்துவதற்காக பாசிக்குடாவிலும் களுதாவளையிலும் மட்டக்களப்பு நகரிலும் விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன. காலத்தின் தேவை கருதி பாசிக்குடா மற்றும் மட்டக்களப்பு விற்பனை நிலையங்கள் நவீன மாடிக்கட்டிடங்களாக கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. ஊசயகவ றனைெழற எனும் பெயருடன் 2018ம் ஆண்டில் மட்டக்களப்பு நகரில் புதிய நவீன வசதிகளுடன் கூடிய விற்பனை நிலையம் திறந்துவைக்கபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு தடைகளையும், சிரமங்களையும் தாண்டி கட்டி முடிக்கப்பட்ட இக்கட்டிடம் கைத்தொழில் மற்றும் கைப்பணி உற்பத்திகளை காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் மாவட்டத்தின் பிரதான விற்பனைக்கூடமாக கம்பீரமாக காட்சியளிக்கின்றது. இதற்கு அருகாமையில் உள்ள கட்டிடத்தினை கைத்தொழில் பல்பொருள் விற்பனை அங்காடியாக மாற்றியமைத்து மாவட்ட கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கான ஒரு மையமாக உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டம் எங்கணும் பரவிக் காணப்படும் ஐம்பதிற்கும் மேற்பட்ட நெசவு, தும்பு, தச்சு மற்றும் மட்பாண்ட பயிற்சி நிலையங்கள் அனைத்தும் கடந்த இரு வருடங்களுள் முழுமையாக மாற்றம் பெற்றுள்ளன. பெரும்பாலான பயிற்சி நிலைய கட்டிடங்கள் திருத்தம் செய்யப்பட்டும், கட்டிமுடிக்கப்பட்டும், நவீனப்படுத்தப்பட்டும் உள்ளதுடன் பயிற்சிக்கு தேவையான உபகரணங்கள், மூலப்பொருட்கள் என்பன வழங்கப்பட்டு பயிற்சிநெறிக்கான தளபாடங்கள், பொருட்கள், எழுது கருவிகள் முதலியனவும் அவற்றிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பயிற்சி நிலையங்களையும் அடையாளம் காண வசதியாக நவீன பெயர்பலகைகள் வடிவமைக்கப்பட்டு நடப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களுக்கு முன்னுதாரணமான இதுபோன்ற பல செயற்திட்டங்களை மட்டக்களப்பு மாவட்ட உதவிப்பணிப்பாளர் அவர்கள் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் ஒத்துழைப்புடனும் மாகாண பணிப்பாளரின் பக்கபலத்துடனும் வெற்றிகரமாக முன்னெடுத்துவருவதை காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு வீறுநடை போட்டு வளர்ச்சியடைந்து வரும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வலுவூட்டும் வகையில் மீண்டும் 2019ம் ஆண்டிற்கான மாகாணக் கண்காட்சி சரவணா வீதி கல்லடியில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்ட அலுவலக வளாகத்தில் உதவிப்பணிப்பாளர் திரு.கி.இளம்குமுதன் அவர்களின் வழிகாட்டலில் தற்போது திணைக்களத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், தகவல் தொலைத்தொடர்பாடல் உதவியாளர்கள், விற்பனை முகாமையாளர்கள், நெசவுப் போதனாசிரியர்கள், தச்சுப்போதனாசிரியர்கள், தும்புப் போதனாசிரியர்கள், காவலாளிகள், தொழிலாளர்கள் மற்றும் சிற்றுழியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடனும் பங்கேற்புடனும் நடைபெறுகின்றது.

விசித்திர நெசவு நிலையத்தில் ஜக்காட், டொபி, மதுர ஜக்காட் போன்ற மனித மற்றும் இயந்திர வலுவுடன் இயங்கும் தறிகள் மூலம் சாறிகள், படுக்கை விரிப்புகள் போன்றவைகள் உற்பத்தி செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது சிறப்பாகும். கைத்தொழில் பேட்டையில் சுமார் இருபது கைத்தறிகள் இடப்பட்டு ஒவ்வொன்றிலும் விதவிதமான வடிவமைப்பிலான வெவ்வேறு உற்பத்திகள் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை பார்ப்பவர்களின் மனதை கவர்கின்றது.

மெருகூட்டும் வகையில் தோள்பைகள், கைப்பைகள், காசுப்பைகள், பொம்மைகள், அலங்காரப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் முதலியவற்றை வடிவமைத்து பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களுக்கான காட்சிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. நெசவு துணிகளுக்கு பற்றிக் டிசைன், ரை அன்ட் டை டிசைன், வாப் பிரின்ட் டிசைன் முதலியவற்றை பிரயோகித்தும், சேட், ரீ-சேட், சாறி, ரொப், சட்டை, போன்றவற்றை கைத்தறித் துணிகளில் தயாரித்தும் காட்சிபடுத்தியுள்ளனர்.

பாவோடும் நிலையத்தில் மரத்தால் ஆக்கப்பட்டு கைவிசையால் இயக்கப்படும் மற்றும் இரும்பால் ஆக்கப்பட்டு மின்சாரத்தில் இயங்கும் இயந்திரங்கள் மூலம் பாவோடும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு பா உற்பத்தி நடைபெறுகிறது. இவற்றுக்கெல்லாம் அச்சாணியாக தச்சுப் போதனாசிரியர்கள் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கி வருவதுடன் அவர்களுக்கு உரிய பாணியில் சமையலறை உபகரணங்கள், வீட்டுத் தளபாடங்கள், அலங்காரப் பொருட்கள் போன்றவற்றை உருவாக்கி மரவேலை காட்சிக்கூடத்தில் காட்சிப்படுத்தியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்பாண்ட போதனாசிரியர்கள் மற்றும் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட சமையலறை பாத்திரங்கள். அலங்காரப்பொருட்கள், பூந்தாழிகள், அகல்விளக்குகள், அடுப்புகள், சிலைகள், தேநீர் கோப்பைகள் போன்றவற்றை காட்சிக்கூடத்தில் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு ஈடுகொடுக்கும் வகையில் தும்பினால் ஆன உற்பத்திப் பொருட்களாக கயிறு, தும்புத்தடி, சுவர் அலங்காரங்கள், கால்மிதிகள், கயிற்றுப்பாய் உட்பட தென்னையின் உற்பத்திப் பொருட்களான ஈர்க்குத்தடி, பூங்கொத்துகள், கூடைகள், பைகள் போன்ற உற்பத்திகளும் தும்புப் போதனாசிரியர்களால் உற்பத்தி செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக அருங்கலைகள் தொடர்பான காட்சிக் கூடத்தில் சிப்பி, பிரம்பு, பனையோலை, பன் என்பவற்றிலான கைவினைப் பொருட்களையும் வியக்கத்தக்க வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சாயநிலைய காட்சிக்கூடத்தில் பாரம்பரிய முறைப்படி சாயமிடும் செய்முறைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், இயற்கை மற்றும் இரசாயன சாயமிடல் பற்றிய நுணுக்கங்கள் மற்றும் விளக்கங்களையும் அறிந்துகொள்ளகூடியதாக உள்ளது.

கண்காட்சிக்காக விசேடமாக அமைக்கப்பட்டுள்ள காட்சிக்கூடங்களில் இம்முறை கிராம அபிவிருத்தி திணைக்களம், பனை அபிவிருத்திச்சபை, தென்னை பயிற்செய்கை சபை, தேசிய மரமுந்திரிகை கூட்டுத்தாபனம், சுதேச மருத்துவ திணைக்களம், தேசிய கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பல அரச, அரசசார்பு, சமூக அமைய மற்றும் தனியார் தொழில் முயற்சியாளர்களும் கலந்துகொண்டு தமது உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்த உள்ளமை சிறப்பான அம்சமாகும்.

கண்காட்சி நடவடிக்கைகள் தொடர்பான வேலைகளிலும், காட்சிக்கூட ஏற்பாடுகள், வளாக சுற்றுப்புற ஒழுங்கமைப்புகள், மாவட்ட அலுவலக நேர்த்திப்படுத்தல் வேலைகள் என அனைத்து விடயங்களிலும் மாவட்ட அலுவலகத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் மற்றும் காவலாளிகளின் பங்களிப்பு வெகுவாகவும், பாராட்டும் விதத்திலும், அர்ப்பணிப்பு மிக்கதாகவும் உள்ளது. மாவட்ட அலுவலக வளாகத்தின் உள், வெளிச் சுத்தம் அவர்களது கைவண்ணத்தினால் மேலும் மெருகுபடுத்தப்பட்டுள்ளது.

2019ம் ஆண்டு மாகாண கண்காட்சியின் மற்றுமொரு சிறப்பம்சமாக மாவட்ட அலுவலக வளாகத்தின் பின் பகுதியில் ஒரு கைத்தொழில் தோட்டம் (Industrial Garden) ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிராமிய உள்ளூர் உற்பத்திக்கு தேவையான மூலவளங்களை பெறத்தக்க மரங்களை நடுகை செய்து வளர்ப்பதனை நோக்காக கொண்டு இக்கைத்தொழில் தோட்டம் அமைக்கப்பட்டுவருகின்றது. இங்கு பருத்தி, பனை, தெங்கு, சணல், பிரம்பு, பன், தேக்கு, சமுளை முதலிய பல பயன்தரு மரங்கள் நடப்பட்டுள்ளன.

இவ்வாறு 2019 ஆம் ஆண்டின் மாகாணக் கண்காட்சியில் மட்டக்களப்பு மாவட்ட வளாகத்தில் கண்காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் இவ்வாண்டின் மைகல்லாக சிறப்புற அமைவது வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள நூதனசாலையாகும். உதவிப்பணிப்பாளரினது அயராத முயற்சியினாலும் மட்டக்களப்பு மாவட்ட திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களும் வழங்கிய ஒத்துழைப்பினாலும் அரிய நூதனசாலையொன்று உருவாகியுள்ளது. பெரும்பாலான அனைத்து உத்தியோகத்தர்களும் தங்களால் இயன்ற பெறுவதற்கு அரிய பொருட்களையும், உபகரணங்களையும் அருகி அழிவடைந்து செல்லும் எமது கலைப் பொக்கிஸங்களையும் வழங்கி வைத்ததன் மூலம் இப்பணிக்கு உயிரூட்டியுள்ளனர். இவர்கள் அனைவரினதும் பணிபாராட்டத் தக்கதுடன், நன்றியும் கூறி பெருமைப்படுத்தப்பட வேண்டியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரசித்தமான சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு அமிசங்கள் நிறைந்த பிரதேசமாக கல்லடி காணப்படுகின்றது. பாலத்தின் அடியில் பாடும் மீன்கள், கடல் நீரேரியின் அடியில் குதித்து ஓடும் மீன்கள், மிக நீளமான புதிய பாலம், மிகப் பழமையான மரப்பாலம், சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானங்கள், கவர்ந்திழுக்கும் கடற்கரைகள், சுற்றுலாத் தலங்கள், ஹோட்டல்கள், அருகருகாக அமைந்திருக்கும் சர்வமத வழிபாட்டுத்தலங்கள், ஆன்மீக மடங்கள், கல்விக்கூடங்கள் என சுற்றுலாப் பயணிகளின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் கல்லடி பிரதேசத்தில் அமைந்துள்ள கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் தற்போதைய விழாக்கோல தோற்றமானது இவ் வளாகத்தையே ஒரு கண்காட்சி காட்சிக்கூடத் தொகுதியாக மாற்றியமைத்துவிட்டதென்றால் அது மிகையாகாது.

***

ந.யமுனேஸ்வரி
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
கிராமிய கைத்தொழில் திணைக்களம்,
மாவட்ட அலுவலகம்
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய தொழிற்துறைத் திணைக்களம்
# மாவட்ட அலுவலகம் - மட்டக்களப்பு

## அலுவலக உத்தியோகத்தர்கள்

"Coming together is a beginning. Keeping together is progress. Working together is success." - Henry Ford



இடமிருந்து வலமாக,

**அமர்ந்திருப்பவர்கள்:**
திரு. P. குவேதன், திருமதி. S. S. சசிகுமார், செல்வி. N. ஜமுனேஸ்வரி, திருமதி. A. றொபினா, திருமதி. J. பிருந்தா, திருமதி. C. கமலேந்திரன், திரு. K. இளம்குமுதன் (உதவிப் பணிப்பாளர்), திரு. K. ரமணன், திரு. A. உமாமணாளன், திரு. T. அச்சுதன், திரு. S. ரமணகுமாரன், திரு. S. M. B. M. அன்சார், திரு. A. ரமணதர்ஷனன்.

**இரண்டாம் வரிசை:**
திரு. S. ஜோர்ஜ், திரு. A. B. M. நளீம், திரு. A. தேவசகாயம், திருமதி. A. புனிதம், திருமதி. T. தயானி, திருமதி. M. புனிதவதி, திருமதி. T. கோபிகாசினி, திருமதி. A. சிவநாதன், திருமதி. J. கமலாவதி, திருமதி. I. ஷில்பியா, திருமதி. L. சசிகுமார், திருமதி. R. மகேந்திரகுமார், திருமதி. S. கிருஸ்ணகுமார், திருமதி. K. மேகராஜா, திருமதி. J. புவனேசராசா, திருமதி. I. பிரகாசவேல், திருமதி. A. விஜயானந்த், திருமதி. K. இராஜேந்திரன், செல்வி. S. தேவராணி, திருமதி. T. கலியுகவரதன், திருமதி. T. தவநீதன், திரு. A. A. முபாறக், திரு. M. M. முபாறக், திரு. V. ரசிகரன், திரு. N. சசிகரன்.

**மூன்றாம் வரிசை:**
செல்வி. K. சாந்திராணி, செல்வி. N. ரஜனிதேவி, செல்வி. K. தர்மதா, திருமதி. C. வினோதனி, திருமதி. P. ரதீஸ், திருமதி. K. மிதிலதாஸ், திருமதி. S. சுபாஜினி, திருமதி. K. ரபேந்திரன், திருமதி. P. தருமலிங்கம், செல்வி. N. சிந்துஜா, செல்வி. S. கலாஜோதி, திருமதி. V. சிவராஜா, செல்வி. S. மலரம்மா, செல்வி. M. I. நிரோசா, திருமதி. M. R. F. நஸீபா, திருமதி. S. றிஸ்பானா, திரு. M. N. M. சப்ரி, திரு. K. சிவராஜா, திரு. P. ஜெயபவான்.

**நான்காம் வரிசை:**
திருமதி. N. நளினி, செல்வி. A. நிலைக்ஷிகா, திரு. V. விநாயகஜோதி, திருமதி. S. L. ரமேஸ், திருமதி. A. தனஞ்சயன், திரு. Y. சுரேந்திரன், திருமதி. M. அருட்பிரகாசம், செல்வி. P. பூங்கோதை, திருமதி. K. பாலச்சந்திரன், செல்வி. K. வசந்தி, திரு. K. அரியநாயகம், திரு. A. நாகராசா, செல்வி. M. M. ஜுனைதா, திரு. A. நாகேந்திரராஜா, திரு. K. சுபாஜிதன்.

**ஐந்தாம் வரிசை:**
திரு. P. டலுஜன், திரு. S. சுரேஸ்வரராசன், திரு. S. கமலநாதன், திரு. P. தனபாலன், திரு. S. இலங்கேஸ்வரம், திரு. K. தேவராஜன், திரு. K. திதிபரன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அலுவலக உத்தியோகத்தர்கள்



**இடமிருந்து வலமாக,**

**முதல் வரிசை:**

திருமதி. S. S. சசிக்குமார் (DO), திருமதி. A. றொபீனா (DO), திருமதி. C. கமலேந்திரன் (MA), திரு. K. இளம்குமுதன் (AD), செல்வி. N. ஜமுனேஸ்வரி (DO), திருமதி. J. பிருந்தா (DO), திருமதி. I. மபாசா (DO).

**இரண்டாம் வரிசை:**

திரு. T. அச்சுதன் (DO), திரு. A. உமாமணாளன் (DO), திரு. S. M. B. M. அன்சார் (DO), திரு. A. ரமணதர்ஷனன் (ICTA), திரு. K. ரமணன் (DO), திரு. S. ரமணகுமாரன் (DO), திரு. P. குவேதன் (DA), திரு. K. தேவதாஸ் (DO).

## தச்சு, மட்பாண்ட போதனாசிரியர்கள் மற்றும் விற்பனை நிலைய பொறுப்பாளர்கள்



**இடமிருந்து வலமாக,**

திரு. N. ரூபராஜ் (TOT-P), திரு. A. தேவசகாயம் (Demo-Ca.), திரு. A. B. M. நளீம் (Demo-Ca.), திரு. A. நாகேந்திரராஜா (Demo-Ca.), திரு. K. திதிபரன் (Sales-M), திருமதி. T. தவநீதன் (Sales Centre-In-Charge), செல்வி. P. பூங்கோதை (Sales Centre-In-Charge).

TOT - P : TOT - Pottery; Demo - Ca. : Demonstrator - Carpentry; Sales - M : Sales Manager;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெசவுப் போதனாசிரியர்கள்



**இடமிருந்து வலமாக,**

**முதல் வரிசை:**

திரு. P. ஜெயபவான், திருமதி. P. ரதீஸ், திருமதி. A. சிவநாதன், திருமதி. S. கிருஸ்ணகுமார், திருமதி. R. மகேந்திரகுமார், திருமதி. A. விஜயானந்த், திருமதி. I. பிரகாசவேல், திருமதி. K. இராஜேந்திரன், திருமதி. I. ஷில்பியா, திருமதி. L. சசிகுமார், திருமதி. K. மிதிலதாஸ், திரு. A. A. முபாறக்.

**இரண்டாம் வரிசை:**

திரு. V. விநாயகஜோதி, திரு. N. M. M. சப்ரி, செல்வி. M. I. நிறோசா, திருமதி. S. றிஸ்பானா, திருமதி. V. சிவராஜா, திருமதி. K. ரபேந்திரன், செல்வி. K. வசந்தி, திருமதி. M. அருட்பிரகாசம், திருமதி. A. தனஞ்சயன், திருமதி. S. I. ரமேஸ், செல்வி. S. மலரம்மா.

## நெசவுப் பயிற்சிப் பயிற்றுவிப்பாளர்கள்



**இடமிருந்து வலமாக,**

**முதல் வரிசை:**

திரு. S. கமலநாதன், திருமதி. N. நளினி, செல்வி. K. தர்மதா, செல்வி. N. சிந்துஜா, திருமதி. J. கமலாவதி, திருமதி. T. கோபிகாசினி, திருமதி. M. புனிதவதி, திரு. K. சுபாஜிதன்.

**இரண்டாம் வரிசை:**

திருமதி. M. R. F. நஸீபா, திருமதி. G. வினோதனி, திருமதி. M. M. ஜூ னைதா, திருமதி. S. சுபாஜினி, செல்வி. A. நிலைக்ஷிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தும்புப் போதனாசிரியர்கள் மற்றும் பயிற்சிப் பயிற்றுவிப்பாளர்கள்



**இடமிருந்து வலமாக,**

செல்வி. N. ரஜனிதேவி, திருமதி. T. தயானி, திருமதி. J. புவனேசராசா, திருமதி. K. பாலச்சந்திரன், செல்வி. K. சாந்திராணி, திருமதி. K. மேகராஜா, திருமதி. A. புனிதம், திருமதி. P. தருமலிங்கம்

## தொழிலாளர்கள் மற்றும் காவலாளிகள்



**இடமிருந்து வலமாக,**

**முதல் வரிசை:**

திரு. S. ஜோர்ஜ் (W), திரு. V. ரசிகரன் (D), திரு. K. அரியநாயகம் (W), திருமதி. T. கலியுகவரதன் (Dep.L), செல்வி. S. தேவராணி (Dep.L), திரு. N. சசிகரன் (DL), திரு. Y. சுரேந்திரன் (DL), திரு. M. M. முபாறக் (W).

**இரண்டாம் வரிசை:**

திரு. A. நாகராசா (DL), திரு. P. டலுஜன் (TOT-Dye), திரு. S. இலங்கேஸ்வரம் (W), திரு. R. தேவராசா (W), திரு. S. சுரேஸ்வரராசன் (W), திரு. K. சிவராஜா (W), திரு. K. தேவராஜன் (Dep.L).

D - Driver, W - Watcher, Dep. L - Department Labour, DL - Dye Labour

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AHILA HARDWARE

## GENERAL HARDWARE MERCHANDS

### Authorized Dealer



- Nippon
- Tokyo Super
- Pozzolana Cement
- Lanwa Tor Steel

### Authorized Distributors

- PE + Delevery Centre

**No.16, Station Road, Batticaloa.**
**Tel : 065 2222784, Tel : & Fax : 065 - 2227703**

**Branch : No.598, Trinco Road, Batticaloa.**
**Tel : 065 2229979, Fax : 065 - 2226131**




Email : ahilahardware@yahoo.com




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# MASTER COLOURS

MASTER COLOURS ASIA (PVT) LTD

**Hot line - 0777 392 029**

No.89-2/14, Bankshall Street Colombo - 11, Sri Lanka

Telephone : 0114736003
Fax : 0112423985
Mobile : 0718266159
0758997889
077392029
0727392029





Email : sales@mastercolours.com
Web : www.mastercolours.com

airtel

**Rs.98**

✓ Unlimited airtel calls
✓ 1000 airtel SMS
✓ 100MB Data

TALK ALL YOU WANT

B.Selvarajah
United Agencies Airtel Distributor
No. 129 Trinco Rd, Batticaloa

SUN FANCY HOUSE

PRIDE OF BATTICALOA



No . 163, Trinco Road, Batticaloa.
Tel : 0652 223 092
மட்டக்களப்பின்
மிக பிரமாண்டமான காட்சியறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AL RAFA QUICK DIGITAL

*The Quality Mega Digital Printing Services*




- Digital Printing
- Digital Offset Printing
- Autocad Plotting Plan Printing
- Laser Engraving & Cutting
- CNC Router 3D Cutting
- Plastic Id Card
- Mementos
- Trophies
- Rubber Stamp
- Ceramic Products
- Stainless Steel & Brass Work
- Display Cladding Board
- Acrylic 3D Name Board

சகல விதமான அச்சுத் தேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்....

#357, Main Street, Kattankudy-01.

+94 65 22 47 898

+94 77 32 35 246, +94 77 25 89 170

alrafaqd@gmail.com

Al Rafa Quick Digital

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AHILA HARDWARE

## GENERAL HARDWARE MERCHANDS

### Authorized Dealer




- Nippon
- Tokyo Super
- Pozzolana Cement
- Lanwa Tor Steel

### Authorized Distributors

- PE + Delevery Centre

**No.16, Station Road, Batticaloa.**
**Tel : 065 2222784, Tel : & Fax : 065 - 2227703**

**Branch : No.598, Trinco Road, Batticaloa.**
**Tel : 065 2229979, Fax : 065 - 2226131**



Email : ahilahardware@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AL RAFA QUICK DIGITAL

*The Quality Mega Digital Printing Services*

- Digital Printing
- Digital Offset Printing
- Autocad Plotting Plan Printing
- Laser Engraving & Cutting
- CNC Router 3D Cutting
- Plastic Id Card
- Mementos
- Trophies
- Rubber Stamp
- Ceramic Products
- Stainless Steel & Brass Work
- Display Cladding Board
- Acrylic 3D Name Board




சகல விதமான அச்சுத் தேவைகளையும் ஒரே கூரையின் கீழ்
பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்....

#357, Main Street, Kattankudy-01.

+94 65 22 47 898

+94 77 32 35 246, +94 77 25 89 170

alrafaqd@gmail.com

Al Rafa Quick Digital


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ThurKka Press, Batticaloa.065 205 3060 . Arasady Batticaloa. 075 617 6681